Follow us:

வாரவெளியீடு

தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 91 பிலவ வருடம், பங்குனி மாதம் 06ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (20.03.2022) ஹிஜ்ரி-1443, ஷஃபான் - 16, 0115886187 - பக்கங்கள் 16+8+8+8

விலை ரூ.50

'வெடி'மணியம்

ஈழத்தமிழர்களில் நலனில் இந்தியா ஒருபோதும் அக்கறை கொள்வதற்கான வாய்ப்பே இல்லை.

ஒரு காலத்தில் தமிழீழ விடுதலை இயக்கங்களை உருவாக்கிய இந்தியா;

இலங்கையில் தனிநாடு என்று ஒன்று உருவாகாதவாறு மிக அவதானமாக தன் நகர்வுகளை செய்தது.

காலகாலமாக இலங்கைத்தீவின் சிங்கள பௌனவாத ஆட்சியாளர்களையும் பிராந்திய வல்லாதிக்க நலனையும் கையாளும் வகையில்தான் இந்தியாவின் "வெளியுறவுக்கொள்கை" இருக்கிறது.

இந்திரா காந்தியில் இருந்து மோடி வரை இலங்கையுடனான "வெளியுறவுக்கொள்கையில்" இதுவரை எந்தவிதமான பாரிய மாற்றங்கள் நிகழவேயில்லை.

முள்ளிவாய்க்கால் இனவழிப்பு யுத்தத்தில் இந்தியா ஆற்றிய "வகிபாகம்" மிகப்பெரியது.

அப்போதே சீனா-இந்தியா-இலங்கை முக்கூட்டு ஒப்பந்தம் மறைமுகமாக போடப்பட்டுவிட்டது.

இலங்கையின் வளங்களை சூறையாடுவது தொடர்பில் சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் ஒரு "புரிந்துணர்வு" ஒப்பந்தம் செய்யப்பட்டுவிட்டது.

இதை ஏற்கனவே பல மாதங்களுக்கு முன்னர் மணியத்தார் கூறியிருந்தார். நம்பாத ஆக்கள் பழைய தமிழன் பேப்பரை தூசு தட்டி பார்க்கவும்.

2009 இக்கு பின்னர் சிறிலங்காவை சூறையாடுவது தொடர்பில் ஒரு சில மனக்கசப்புகள் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் ஏற்பட்டாலும்;

அவர்கள் அதை தங்களுக்குள்ளே விட்டுக்கொடுத்து பிரச்சினையை சுமூகமாக முடித்துக்கொண்டுள்ளார்கள்.

07 ஆம் பக்கம்

நீர், மின் கட்டணங்கள் அதிகரிக்கப்படலாம்!

- யோ.தர்மராஜ் -

நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் நெருக்கடி மற்றும் எரிபொருட்களின் விலை அதிகரிப்பை அடுத்து மின் கட்டணத்தை அதிகரிக்க இலங்கை மின்சார சபை தீர்மானித்துள்ளதாக மின்சார சபையின் உயர்மட்ட தகவல்கள் 'தமிழன்' வார இதழுக்கு தெரிவித்தன.

அதன்படி, இதுவரை ஒரு மின் அலகிற்காக நுகர்வோரிடம் 2.50 ரூபாவே அறவிடப்பட்டது. இதற்கான நிலையான கட்டணம் 30 ரூபாவாக காணப்பட்டது.

தற்போதைய கட்டண அதிகரிப்பு யோசனைக்கு அமைய, ஒரு மின் அலகுக்கான கட்டணத்தை 5.50 ரூபாவாகவும் நிலையான கட்டணம் 290 ரூபாவாகவும் அதிகரிக்கப்படவுள்ளது.

இதேவேளை, அரச நிறுவனங்கள், தொழிற்சாலைகள், ஹோட்டல்கள், சந்தை தொகுதிகள் மற்றும் மத வழிபாட்டிடங்களின் மின் கட்டணத்திலும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதன்படி, தொழிற்சாலைகளுக்கு குறைந்த பட்சம் 38 வீதம், ஹோட்டல்களுக்கு 23 வீதம், அரச நிறுவனங்களுக்கு 22 வீதம் என மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மின் அலகிலும் 13 ரூபா நட்டம் ஏற்படுவதால் மின்சார கட்டணத்தை அதிகரிப்பதன் ஊடாக மேலதிக வருமானத்தை....

02 ஆம் பக்கம்

அரசாங்கத்தின் செயற்பாடுகளை கண்டித்தும் பொருட்கள் விலையேற்றம், எரிபொருள், எரிவாயு மற்றும் அத்தியாவசிய பொருட்கள் தட்டுப்பாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்து மக்கள் விடுதலை முன்னணியினரால் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம்

படப்பிடிப்பு : சமன் அபேசிறிவர்தன, பிரதீப் தம்பரகே

பிரச்சினைகளை தீர்க்க உடன் தலையிடுக!

ஆளுங்கட்சி எம்.பி. பிரமித பண்டார அரசிடம் கோரிக்கை

- யோ.தர்மராஜ் -

மக்கள் தற்போது பல பிரச்சினைகளில் சிக்கித் தவிக்கின்றனர். அரசாங்கம் உடனடியாக தலையிட்டு அவற்றுக்கு தீர்வுகளை வழங்க வேண்டுமென ஆளுந்தரப்பு பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர் பிரமித பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கம்

EXCLUSIVE

மத்திய வங்கியினால் 11,500 கோடி ரூபா 16 நாட்களில் அச்சீடு

- யோ.தர்மராஜ் -

இலங்கை மத்திய வங்கி மார்ச் மாதத்தில் 115.64 பில்லியன் ரூபா பணம் அச்சிட்டுள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் 'தமிழன்' வார இதழுக்கு தெரிவித்தன. அதன்படி, மார்ச் முதலாம் திகதி தொடக்கம் 16ஆம் திகதி வரையான காலப்பகுதியிலேயே இத்தொகை அச்சிடப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை, 2020 ஜனவரி முதல் மார்ச் 18வரையான காலப்பகுதியில் 1,511.37 பில்லியன்...

02 ஆம் பக்கம்

பெசில் இருக்கும்வரை அரசுக்குள் வரமாட்டோம்!

அரச உயர்மட்டத் தலைவரின் கோரிக்கை விமல், கம்மன்பிலவால் நிராகரிப்பு

- நமது விசேட செய்தியாளர் -

அமைச்சுப் பொறுப்புகளிலிருந்து துக்கப்பட்ட விமல் வீரவன்ச, உதய கம்மன்பில ஆகியோரை மீண்டும் அமைச்சுப் பொறுப்புகளில் அமர்த்த ஆளுந்தரப்பு எடுத்த முயற்சி சாத்தியப் படவில்லையென அறியமுடிகின்றது.

அரசாங்கத்தின் உயர்மட்டத் தலைவர் ஒருவர் அமைச்சர் வாசுதேவவை தொலைபேசியில் தொடர்புகொண்டு, விமல் மற்றும் கம்மன்பிலவை மீண்டும்....

02 ஆம் பக்கம்

மக்கள் வங்கி ஊடாக வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்பி வெற்றியாளர் ஆகுங்கள்

மக்களின் கோரிக்கையினை ஏற்று ஜனாதிபதி பதவி விலக வேண்டும்

சாணக்கியன் எம்.பி. கோரிக்கை

மக்களின் கோரிக்கையினை ஏற்று அரசியலுக்கு வந்ததாக கூறும் ஜனாதிபதி, மக்களின் கோரிக்கையினை ஏற்று பதவியினை இராஜினாமா செய்ய வேண்டும் என தமிழுக் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரை தொடர்பாக காலியில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் மிக விசேடமாக சொன்ன விடயங்களைப் பார்த்தால், தன்னை மக்கள் ஜனாதிபதியாக வருமாறு விடுத்த அழைப்பினை ஏற்றே தான் ஜனாதிபதியாக அரசியலுக்கு வந்ததாக அவர் சொல்லியிருந்தார்.

அது ஓரளவிற்கு தெற்கிலே அந்த மக்கள் அவருக்கு அழைப்பு விடுத்திருந்தமை உண்மை என்று ஏற்றுக்கொள்ள முடியும். ஆனால் ஜனாதிபதி மக்களுடைய கோரிக்கைக்கு இணங்கவே அரசியலுக்கு வந்தார் என்று சொன்னால், இன்று மக்களுடைய கோரிக்கைக்கு இணங்கி அவர் பதவி துறந்து வீட்டுக்கு செல்ல வேண்டும்.

இன்று இல்லையினுடைய அனைத்து பிரதேசங்களிலும் 'GO HOME GOTA' என்று சொல்லும் ஒரு நிலையில், அவர் மக்களினுடைய கருத்தினைக் கேட்டு அரசியலுக்கு வந்தவர், மக்களுக்காக அரசியலுக்கு வந்தவர் என்று சொன்னால், இன்று மக்கள் என்ன கேட்கின்றார்கள் என பார்த்தால் அவரை வீட்டுக்கு செல்லுமாறு இன்று கேட்கின்றனர்.

ஆகவே அந்த அடிப்படையில் அவர் இன்று தனது பதவியினை இராஜினாமா செய்து விட்டு வீட்டுக்கு செல்ல வேண்டும் என்பதே என்னுடைய கருத்து.

அதேபோன்று சர்வதேச நாணய நிதியத்தின் உதவியினை பெற்றுக்கொள்ளவுள்ளதாக அவர் தனது உரையில் தெரிவித்திருந்தார். இதனையே நாம் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றோம்.

அத்துடன், அவரால் இந்த நாட்டினை சிறந்த முறையிலே நடத்த முடியாது. இந்த நாட்டில் ஜனாதிபதியின் சுயிட்சமான நோக்கம் என எதுவும் கிடையாது எனத் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் நெல் உலர விடுவதற்கான தளங்கள் இன்மையால் வீதிகளைப் பயன்படுத்தும் விவசாயிகள்

(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் பாரிய சிரமங்களுக்கு மத்தியில் மேற்கொள்ளப்பட்டு வரும் விவசாய செய்கையினை தொடர்ந்து அறுவடை செய்கின்ற நெல்லை உலர விடுவதற்கான தளங்கள் இல்லாததால் விவசாயிகள் பிரதான வீதிகளை பயன்படுத்தும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் நானாட்டான் மற்றும் முசலிப் பிரதேசங்களில் இந்த நிலை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

விவசாயம் செய்யும் வயல் நிலங்களுக்கு அருகில் பொதுவான தளங்கள் அமைத்துக் கொடுத்தால் பல விவசாயிகள் பலன் பெறுவார்கள். நெல் அறுவடை முடிந்தவுடன் உழவு இயந்திரங்களில் நெல்களை ஏற்றிக்கொண்டு பல கிலோ மீற்றர் தொலைவில் உள்ள பிரதான தார் வீதிகளுக்கு வரவேண்டியுள்ளது.

இதனால் செலவுகள் பல மடங்கு அதிகரிக்கின்றன. அதில் உழவு இயந்திர வசதி இல்லாதவர்களின் நிலை பரிதாபத்துக்குரியது.

பல நூறு ஏக்கர் வயல் நிலங்களை உள்ளடக்கி பொதுவான தளங்களை அமைத்துக் கொடுப்பது விவசாயத்திற்கும் விவசாயிகளுக்கும் மிகவும் பயன்தரும்.

நானாட்டான் பிரதேசத்தில் உமநகரி கீழ்ப் பகுதியில் சிறுவெளி பிரதேசங்களிலும் மேட்டு நிலங்கள் காணப்படுகின்றன. அவ்வாறான மேட்டு நிலங்களை அடையாளம் கண்டு நெல் காயப்போடும் தளங்களை அமைப்பதற்கு விவசாய அமைப்புகள் முன்வர வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

மேலும் இவ்வாறு வீதிகளில் நெல் காயப் போடுவதால் போக்குவரத்திற்கு இடையூறுகள் ஏற்படுவதோடு விபத்துகள் ஏற்படவும் வாய்ப்புகள் உள்ளதாக மன்னார் மாவட்ட விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

தனியார் மற்றும் பாடசாலை சேவை பஸ் விபத்து: அறுவர் வைத்தியசாலையில்

(நடராஜா மலர்வேந்தன்)

நமுனுகுல - பசறை பிரதான வீதி 10ஆம் கட்டைப் பகுதியில் இரு பஸ் வண்டிகள் மோதுண்டு நேற்று முள்தினம் (18) விபத்துக்குள்ளாகியுள்ளது.

பண்டாரவளையிலிருந்து பசறை நோக்கிச் சென்ற தனியார் பயணிகள் பஸ்ஸும் பாடசாலை மாணவர்களை ஏற்றிவந்த பாடசாலை சேவை பஸ்ஸும் மோதுண்டே இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

தனியார் பயணிகள் பஸ் சாரதி உட்பட அறுவர் காயங்களுடன் பசறை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் இவ்விபத்து ஏற்பட்டுள்ளதாகவும் விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பசறை பொலிஸார் தெரிவித்தனர்.

அத்தியாவசிய பொருட்கள் தட்டுப்பாட்டுக்கு தீர்வுகோரி இராகலையில் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

(க.கிஷாந்தன்)

நுவரெலியா – இராகலை மாக்குடுகலை தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் நாட்கூலி தொழிலாளர்கள் ஆகியோர் இணைந்து நேற்று முள்திங்கள் (18) இராகலை புருக்சைட் சந்திபில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

நாட்டில் தற்போது அத்தியாவசிய பொருட்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதைச் சுட்டிகாட்டியும் உரிய தீர்வினைப் பெற்றுத்தருமாறு கோரியும் இந்தக் கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

சுமார் 100க்கும் மேற்பட்டவர்கள் இந்த போராட்டத்தில் கலந்து கொண்டதோடு, மாக்குடுகலை நகரத்திலிருந்து புருக்சைட் சந்திவரை ஏதிர்ப்பு பதாதைகள ஏந்தியவண்ணம், கோஷங்களை எழுப்பியவாறு பேரணியாக சென்றனர். அதன்பின் அங்கு புருக்சைட் சந்தியில் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

விவசாயம் செய்யும் எங்களுக்கு உர தட்டுப்பாடு நிலவுகின்றது, அதிக விலை மற்றும் எரிபொருளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு, தொடர் மின் விநியோக துண்டிப்பு, அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றமும் தட்டுப்பாடு இவற்றின் காரணமாக மலையக மக்களும் இந்த நாட்டில் வாழ்கின்ற ஏனைய மக்களும் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர் என ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோர் கருத்து தெரிவித்தனர். சுமார் ஒரு மணித்தியாலயம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிஸாரின் தலையீட்டால் கலைந்துசென்றனர்.

பசறை விபத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் இறப்புச் சான்றிதழ் வழங்கக்கோரி போராட்டம்

(நடராஜா மலர்வேந்தன்)

பசறை பஸ் விபத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்குமாறு கோரியும் உயிரிழந்தவர்களுக்கு இறப்புச் சான்றிதழ் வழங்குமாறு வலியுறுத்தியும் நேற்று முள்தினம்(18) பசறை பஸ் தரிப்பிடத்துக்கு முன்னால் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

கடந்த 2021ஆம் ஆண்டு மார்ச் 20ஆம் திகதி அதிகாலை வேளையில் பதுளை, ஹுனுகலையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த பஸ் ஒன்று காலை 7.20 மணியளவில் பசறை 13ஆம் கட்டை மெத்தைக்கடைக்கு அருகாமையில் வைத்து பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் 14 பேர் பலியாகியிருந்ததோடு 32 பேர் வரையில் காயமடைந்திருந்தனர்.

காயமடைந்தவர்களில் பலர் இன்னமும் வடுக்களுடனும் வலிகளை சுமந்தபடியும் வாழ்ந்துவருகின்றனர். அங்கவீனமானவர்கள், தமது வாழ்வை தொலைத்துவிட்டோம் என்ற விரக்தியை சுமந்துகொண்டு வாழ்கின்றனர்.

ஏனெனில், காயமடைந்தவர்களுக்கு இழப்பீடு எதுவும் வழங்கப்படவில்லை. அதேபோல விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு மரணசான்றிதழ் கூட வழங்கப்படவில்லை என பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்களின் இறுதிக்கிரியைகளில் பங்கேற்ற அரசியல் பிரமுகர்கள், உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்களுக்கு இழப்பீடு பெற்றுக்கொடுக்கப்படும், அங்கவீனமானவர்களின் வாழ்வை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் உறுதியளித்தனர். ஆனால் அந்த உறுதிமொழி இன்னமும் நிறைவேற்றப்படவில்லை.

இதனை கண்டித்தும், இழப்பீடு வழங்கவும் இறப்புச் சான்றிதழ் வழங்கக்கோரியும் நேற்று மதியம் பசறை பஸ் தரிப்பிடத்துக்கு முன்பாக சம உரிமைகள் இயக்கத்தின் ஏற்பாட்டில் அமைதி வழிப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இப்போராட்டத்தில் மரணித்தவர்களின் உறவினர்களும் காயமடைந்தவர்களின் உறவினர்களும் கலந்து கொண்டதோடு பதாதைகளை ஏந்தியவாறு பசறை பஸ் தரிப்பிடத்துக்கு முன்பாக இருந்து பசறை பிரதேச செயலகத்தின் நிர்வாக உதவி உத்தியோகத்திடம் மனு ஒன்றையும் கையளித்தனர்.

அரசின் ஒரு இலட்ச ரூபா நஷ்டஈடு தேவையில்லை; காணாமல்போனோருக்கு சர்வதேச நீதியே வேண்டும்

திருமலை மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கம்

(திருகோணமலை நிருபர்)

திருகோணமலையில் காணாமல் ஆக்கப்பட்ட நபர்களுக்கு அரசாங்கம் வழங்கும் ஒரு இலட்சம் ரூபா நாய்க்கும் தேவைப்படாது, தமது பிள்ளைகள் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் சர்வதேச நீதி மாத்திரமே தமக்கு வேண்டுமெனவும் திருகோணமலை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் பெற்றோர் சங்கம் தெரிவித்துள்ளது.

திருகோணமலை பாலையூற்று பகுதியில் நேற்று முள்திங்கள் (18) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் நீதிமன்ற கட்டடத் தொகுதி ஒன்றைத் திறந்து வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த நீதி அமைச்சர் அலி சப்ரி, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் இறப்பு சான்றிதழ் மற்றும் அவர்களுக்கான நஷ்ட ஈடாக ஒரு இலட்சம் ரூபா வழங்க அமைச்சரவை தீர்மானம் எடுத்துள்ளதாக தெரிவித்த கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து திருகோணமலை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் பெற்றோர்கள் தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளனர்.

கடந்த பல வருடங்களாக அரசாங்கம் தங்களை ஏமாற்றி வருவதாகவும் அரசினால் வழங்கப்படும் நிதி தமக்கு வேண்டாம் எனவும் தமது பிள்ளைகள் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் சர்வதேச நீதி மாத்திரமே தமக்கு வேண்டுமெனவும் தற்போது நடைபெற்றுவரும் ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத்தொடர் சந்தர்ப்பத்தின்போது சர்வதேத்திற்கு இவ்விடயத்தை வலியுறுத்துவதாக இதன்போது சுட்டிகாட்டினர்.

மேலும் அரசாங்கத்தினால் வழங்குவதாக தீர்மானிக்கப்பட்ட ஒரு இலட்சம் ரூபா பணம் எமது வீட்டு நாய்க்கு போட்டால் கூட அது சாப்பிடாது. அவ்வாறு நாய் பணத்தை சாப்பிட்டால் தாங்கள் தொடர்ந்தும் வலியுறுத்தி வரும் குறித்த வழக்குகளை வாபஸ் பெறுவதாகவும் திருகோணமலை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் பெற்றோர் சங்கத்தின் செயலாளர் அண்ணாமலை முருகையா இதன்போது சுட்டிக்காட்டினார்.

மத்திய வங்கியினால்...

ரூபாவை மத்திய வங்கி அச்சிட்டுள்ளதாகவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

நாளுக்கு நாள் இந்த அரசாங்கம் பணம் அச்சிடுவதால் 2, 3 மடங்கு பணம் நாட்டில் அதிகரிக்கின்றன. 1952ஆம் ஆண்டு முதல் இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த காலப்பகுதி வரை நாட்டில் அச்சிடப்பட்ட முழு தொகையில் 24 மடங்கு அதிகமாக இந்த அரசாங்கம் பணத்தை அச்சிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனால், பணவீக்கமும் அதிகரிப்பதுடன், பொருட்களின் விலைகளும் நாளுக்கு நாள் அதிகரிக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நீர், மின் கட்டணங்கள்...

பெற்றுக்கொள்ள முடியும் என்பதால் மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கு மின்சார சபை தீர்மானித்துள்ளது.

மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கான யோசனைக்கு தங்களிடம் அனுமதிக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார். இதனை ஆராய்ந்து பார்த்து திருத்தங்களுடன் கூடிய அனுமதியை வழங்குவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மின்சார சபையானது 7 வருடங்களுக்கு முன்னரே மின் கட்டணத்தை அதிகரித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டால், நீர்க் கட்டணத்தை அதிகரிக்க நேரிடும் என நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையும் தீர்மானித்துள்ளதாக அறிய கிடைத்தது.

நீரை இறைக்க அதிகளவில் மின்சாரத்தையே பயன்படுத்துவதால் மின் கட்டணத்தின் விலைக்கு ஏற்ப, நீர் கட்டணத்தையும் அதிகரிக்க வேண்டும் என வடிகாலமைப்புச் சபை கோரியுள்ளது.

பிரச்சினைகளை தீர்க்க..

எரிவாயு, எரிபொருள் மற்றும் பால் மா போன்ற அத்தியாவசிய சேவைகளை பெற்றுக் கொள்வதற்காக மக்கள் தற்போது வரிசையில் காத்திருக்கின்றனர். இவற்றை துரிதமாக நிவர்த்தி செய்வது அரசாங்கத்தின் பொறுப்பாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கத்திலுள்ள அமைச்சரவை அமைச்சர்கள் கூட அரசாங்கத்தை விமர்சிக்கும் போது பின்வரிசை உறுப்பினர்கள் அரசாங்கத்தை பாதுகாத்துவருவதாகவும் அவர் தெரிவித்துள்ளதுடன், அதன் விளைவாக பின்வரிசை உறுப்பினர்களின் கோரிக்கைகளுக்கு அரசாங்கம் செவிசாய்க்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்களின் தேவைகளை நிறைவேற்ற முடியாவிட்டால் அதனை பின்வரிசை உறுப்பினர்களிடம் கூறி, அவர்களை ஒன்றிணைக்க வேண்டும். பின்வரிசை உறுப்பினர்கள் இருப்பது, அரசாங்கத்தின் புகழ் பாடுவதற்கு மட்டுமல்ல என்றும் தெரிவித்துள்ளார்.

எனவே, மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்காது, மன்னிப்புக் கோருவது தேவையற்று எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பெசில் இருக்கும்வரை...

அமைச்சப் பொறுப்புகளை ஏற்க அவர்களிடம் வலியுறுத்துமாறு விநயமாக கேட்டுக்கொண்டார். அதன்படி விமல் மற்றும் கம்மன்பிலவிடம் இது தொடர்பில் அமைச்சர் வாசுதேவ கலந்துரையாடியுள்ளார்.

ஆனால் அரச உயர்மட்டத் தலைவரின் கோரிக்கையை ஏற்க மறுத்த விமல், கம்மன்பில தரப்பு, நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷ இருக்கும்வரை அந்த அரசுக்குள் தாங்கள் வரப்போவதில்லையென திட்டவட்டமாக தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து அந்த தகவல அரச உயர்மட்டத்தலைவருக்கு அனுப்பிய அமைச்சர் வாசு, தாமும் அதே நிலைப்பாட்டில் இருப்பதாகவும், பெசில் தொடர்பில் ஆளுங்கட்சி உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் தெரிவித்தாரென அறியமுடிந்தது.

யாழ். - கிளிநொச்சி மாவட்டங்களில் 20 சதொச விற்பனை நிலையங்களை திறக்க நடவடிக்கை

வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிப்பு

(யாழ்., சாவகச்சேரி நிருபர்கள்)

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் 20 புதிய சதொச விற்பனை நிலையங்களை விரைவில் திறக்கவுள்ளதாக வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள வர்த்தகத்துறை அமைச்சர் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம்(18) இடம்பெற்ற கைத்தொழில் வர்த்தகத்துறை சம்பந்தமான கலந்துரையாடலில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடபகுதியில் உணவு பற்றாக்குறை மற்றும் உணவுத் தட்டுப்பாட்டை நீக்கும் முகமாக யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் புதிதாக 20 சதொச விற்பனை நிலையங்களை விரைவில் திறக்கவுள்ளோம்.

அவ்வாறு திறப்பதன்மூலம் பொதுமக்கள் அத்தியாவசிய பொருட்களை தங்குதடையின்றி பெற்றுக்கொள்ளமுடியும். அத்தோடு யாழ்ப்பாண மாவட்டம் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள உணவு களஞ்சியசாலைகளில் அத்தியாவசிய பொருட்களை சேமித்து வைத்து சதொச விற்பனை நிலையங்களுக்கு வழங்குவதன் மூலம் பொதுமக்கள் இலகுவாக தமது அத்தியாவசியப் பொருட்களை பெற்றுக் கொள்ளக்கூடிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1930ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஏற்பட்ட அபாயகரமான ஒரு பொருளாதார நிலையே தற்போது இந்த நாட்டில் ஏற்பட்டுள்ளது. கொரோனா நோய் காரணமாக பல வல்லரசு நாடுகளிலும் பொருளாதார நிலை பாதிக்கப்பட்டுள்ளது. அதேபோல் எமது நாட்டிலும் இந்த கொரோனா சூழ்நிலையின் காரணமாகவே பொருளாதார நிலை பாதிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் மட்டுமல்ல உலக நாடுகளிலும் தற்போது பொருளாதார சூழ்நிலை காணப்படுகின்றது. பல தொழில் வாய்ப்புகளை இழந்து உள்ள நிலை காணப்படுகின்றது. உற்பத்திகள் தடைப்பட்ட நிலையும் காணப்படுகின்றது. சகல துறைகளிலும் இந்த கொரோனா நோயானது தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

ரஷ்ய - உக்ரைன் யுத்தத்தின் காரணமாக எரிபொருள் மற்றும் ஏனைய பொருட்களின் விலையும் அதிகரித்துள்ளது.

எனினும், தற்போது நாட்டின் ஜனாதிபதியின் இயற்கை விவசாய முறையை மக்கள் பயன்படுத்த தொடங்கியதன் காரணமாக விவசாய உற்பத்தியில் பெரிதாக பாதிப்பு ஏற்படவில்லை.

இரண்டாம் உலகப் போரின் பின்னர் அனைத்து நாடுகளிலும் பொருளாதார தாக்கமானது அனைத்து நாடுகளையும் பாதித்துள்ளதோடு எமது உணவு உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் நமது நாட்டில் உணவுத் தட்டுப்பாட்டை கட்டுப்படுத்த முடியும் என்றார்.

கூலிக்கு ஆள்வைத்து தந்தையை கொன்ற மகன்; மட்டக்களப்பு கரடியனாறு பகுதியில் இருவர் கைது

(களகராசா சரவணன்)

மட்டக்களப்பு கரடியனாறு பிரதேசத்தில் தனது தந்தையைக் கொலைசெய்ய 50 ஆயிரம் ரூபா பணம் கொடுத்து கூலிக்கு ஆள்வைத்து வெட்டிக்கொலை செய்த 21 வயதுடைய கூலிக்காரன் மற்றும் கொல்லப்பட்டவரின் 22 வயதுடைய மகன் உட்பட இருவரை கடந்த வியாழக்கிழமை (17) கைதுசெய்துள்ளதாக மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்புதிகாரி பி.எஸ்.பி.பண்டார தெரிவித்தார்.

கடந்த 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள ஈரலக்குளம் குடாவெட்டி வயல் பகுதியில் வேளாண்மை காவலுக்காக அமைக்கப்பட்ட கொட்டகை ஒன்றில் இருந்து வெட்டுகாயங்களுடன் விவசாயியான 54 வயதுடைய 4 பிள்ளைகளின் தற்தையான பரசுராமன் ஆறுமுகம் என்பவர் சடலமாக மீட்கப்பட்டார்.

குறித்த விவசாயிக்கு 3 பெண் பிள்ளைகளும் 22 வயதுடைய ஒரு ஆண் பிள்ளையுமாக 4 பிள்ளைகள். தற்தையான இவர் விவசாயம் மேற்கொண்டுவந்துள்ளார்.

இந்நிலையில் இவரின் 22 வயதுடைய மகன் சிந்துஜன் மதுபாவனைக்கு அடிமையானவர் என்பதனால் மதுபானம் வாங்க தற்தையிடம் பணம் கேட்பது மற்றும் தனது மாட்டுப்பட்டியிலுள்ள மாடுகளை திருடி விற்பது போன்ற நடவடிக்கையால் தற்தைக்கும் மகனுக்கும் இடையே தொடர்ந்து தகராறு ஏற்பட்டு வந்துள்ளது.

இதனையடுத்து சிந்துஜன் தனது தற்தையை கொலைசெய்ய கிரான் பகுதியைச் சேர்ந்த தனது நண்பனான இட்னராஜ நிரோசன் என்பவனை கடந்த முதலாம் திகதி சந்தித்து தனது தற்தையை கொலைசெய்ய 50 ஆயிரம் ரூபா பணம் தருவதாக அவனிடம் பேரம் பேசியுள்ளான். இதனைத் தொடர்ந்து அவனிடம் தொலைபேசியில் பலமுறை தொடர்பு கொண்டு தற்தை கொலை தொடர்பாக வினவி வந்துள்ளான்.

இதன் பின்னர் கொலை செய்வதற்கான திட்டம் தீட்டியிருந்த நிலையில், கடந்த 12ஆம் திகதி இரவு 9 மணியளவில் படுகொலை செய்யப்பட்ட பரசுராமன் வேளாண்மை காவலுக்காக வயலில் உள்ள கொட்டகைக்கு தனிமையில் சென்று காவலில் ஈடுபட்டிருந்தார்.பரசுராமன் தனிமையில் சென்றிருப்பதை அறிந்த கூலிக்கு கொலைசெய்ய அமர்த்தப்பட்ட இட்னராஜ நிரோசன் அந்த கொட்டகைக்கு சென்றபோது மகனின் நண்பனான நிரோசனை கண்ட பரசுராமன் அவனுடன் பேசிக்கொண்டு அவனுக்கும் இரவு உணவை கொடுத்து இருவரும் சேர்ந்து உணவு உண்டுள்ளனர்.

பின்னர் இங்கிருந்த கச்சாவை வறுத்து இருவரும் சாப்பிட்டு இரவு ஒரு மணியளவில் அங்கு கொலைசெய்ய சென்றவன் உறங்கியுள்ளான். அதன் பின்னரே கொலைச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. அதனைத்தொடர்ந்து அங்கிருந்து தப்பி அதிகாலை 4 மணியளவில் தனது நண்பனான தற்தையை கொலைசெய்ய சொன்ன சிந்துஜனிடம் கையடக்க தொலைபேசி ஊடாக நீ சொன்ன மாதிரி உனது அப்பாவை கொலை செய்துவிட்டேன் என தெரிவித்து வீட்டுக்கு சென்றுள்ளான்.

தற்தையை கொலை செய்தமைக்காக முன்னரே பேரம் பேசியவாறு பணத்தை கொடுப்புதற்காக தனது நண்பனைத் தேடி 14ஆம் திகதி திங்கட்கிழமை கிரான் பகுதிக்கு சென்று சந்தித்து பேசிவிட்டு, இருவரும் மோட்டார்சைக்கிளில் அங்கிருந்து வந்தாறுமூலை பகுதியிலுள்ள நகைக்கடை ஒன்றின் முன்னால் சென்று நண்பனை நிற்குமாறு தெரிவித்து, நகைக்கடைக்கு சென்று அங்கு தங்க ஆபரணம் ஒன்றை ஈடுவைத்து 50 ஆயிரம் ரூபா பணத்தை கொலைசெய்த நண்பனிடம் வழங்கியுள்ளான்.

பேரம் பேசிய பணத்தை பெற்ற நிரோசன் அங்கு ஏற்கனவே நகைக்கடை ஒன்றில் 23 ஆயிரம் ரூபாவுக்கு ஈடுவைத்த நகையை ஈட்டில் இருந்து மீட்டுக்கொண்டு அங்கிருந்து இருவரும் பிரிந்து சென்றுள்ளதாக கைதுசெய்யப்பட்ட இருவரிடமும் பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த கொலைக்கு பயன்படுத்திய கத்தி, கழுத்து இறுக்க பயன்படுத்திய நாடா மற்றும் நாடா, கல் என்பவற்றை மீட்டுள்ளதாகவும் இந்த கொலை தொடர்பாக முதலில் கொலைசெய்யப்பட்டவரின் மகனை கைதுசெய்து விசாரணையின்போது, கொலையாளியான கிரானைச் சேர்ந்த சிந்துஜனின் நண்பன் நிரோசனையும் கைதுசெய்துள்ளதாகவும் இருவரையும் விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு மற்றும் கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

சாவகச்சேரியில் முச்சக்கரவண்டி விபத்து

குடும்பப் பெண்ணொருவர் பலி

(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மீசாலை ஜயா கடைப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை (14) இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த குடும்பப்பெண் ஒருவர் நேற்று முன்தினம் (17) சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மீசாலை வடக்கு பகுதியைச் சேர்ந்த 49 வயதான செல்வராணி என்ற குறித்த பெண் தனது பிள்ளையை பாடசாலையில் இருந்து ஏற்றிவரச் சென்ற சமயம் விபத்தில் சிக்கி படுகாயமடைந்து வீதியில் கிடந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப் பட்டு சிகிச்சைப் பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார். குறித்த பெண்ணை முச்சக்கர வண்டி ஒன்று மோதி விட்டு தப்பித்துச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா சிறைச்சாலையிலிருந்து கைதியொருவர் தப்பியோட்டம்

பொலிஸார் வலைவீச்சு

(வவுனியா நிருபர்)

வவுனியா சிறைச்சாலையிலிருந்து கைதி ஒருவர் நேற்று முன்தினம்(18) அதிகாலை தப்பியோடியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வீடுகளில் கொள்ளையில் ஈடுபட்டவர் எனும் சந்தேகத்தின் பேரில் வவுனியா கூமாங்குளத்தினைச் சேர்ந்த 20 வயது மதிக்கத்தக்க இளைஞரே கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இவர் நேற்று அதிகாலை வேளையில் சிறைச்சாலையிலிருந்து தப்பிச் சென்றுள்ளதுடன், தப்பிச்சென்ற இக்கைதியைத் தேடி வவுனியா சிறைக்காவலர்கள் வவுனியா பொலிஸாருடன் இணைந்து தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தேங்காய் பிடுங்கச் சென்று தங்க நகைகள் கொள்ளை

(களகராசா சரவணன்)

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள ஞானசூரியம் சதுக்கப்பகுதியில் உள்ள வீடொன்றில் சிறுமி ஒருவரின் கழுத்தில் இருந்த தங்கச்சங்கிலி, காப்பு உள்ளிட்ட தங்க நகையை கொள்ளையிட்டு சென்ற மரங்கள் ஏறும் தொழிலாளி ஒருவரை கடந்த வியாழக்கிழமை(17) கைதுசெய்துள்ளதாக மட்டு. தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

தென்னை மரங்களில் தேங்காய் பிடுங்கும் தொழிலாளி குறித்த பகுதியிலுள்ள வீடு ஒன்றில் சம்பவ தினமான கடந்த 12ஆம் திகதி சென்று தென்னை மரத்தில் தேங்காய் பிடுங்கி தரவா எனக் கேட்டு அங்குள்ள தென்னைமரத்தில் ஏறி தேங்காய் பிடுங்கிக் கொண்டிருந்துள்ளார்.

இந்நிலையில் வீட்டுப் பெண் குளியலறைக்கு சென்று திரும்பிய நிலையில், தென்னை மரத்தில் தேங்காய் பிடுங்கச்சென்ற தொழிலாளியை காணவில்லை. அவரை தேடியபோது வீட்டினுள் இருந்த சிறுமியின் கழுத்தில் இருந்த ஒரு பவுன் தங்கச்சங்கிலி, அரை பவுன் கொண்ட இரு காப்புகளை கொள்ளையடித்துச் சென்றுள்ளமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டையடுத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில், கல்லடி வேலூர் பகுதியைச் சேர்ந்த மரங்கள் ஏறும் தொழிலை மேற்கொண்டுவரும் 36 வயதுடைய ஒருவரை கைதுசெய்ததுடன், கொள்ளையிடப்பட்ட தங்க ஆபரணங்களையும் மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

AIA இன்ஷுவரன்ஸ் இலங்கையின் மிகச் சிறந்த ஆயுள் காப்புறுதி நிறுவனமாக மூன்றாவது முறையாகவும்!

- மிகப் பெரிய மூலதனத் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்யக்கூடிய சதவீதம்[1]
- தொலைநோக்குடன் கூடிய பாதுகாப்பான முதலீட்டு வழிமுறைகள்
- காப்புறுதிதாரர்களுக்கு 30 வருடங்களாக பங்குலாபம் வழங்கப்பட்டமை
- 100 வருடங்களுக்கும் அதிக கால அனுபவம் வாய்ந்த AIA குழுமப் பின்னணி
- தொடர்ந்து 6 வருடங்களாக இலங்கையில் முதலிடம் வகிக்கும் MDRT அங்கத்துவம்[2]

1. பங்குப் பரிவர்த்தனைத் துறையில் 2021 ஆம் ஆண்டில் 5 முன்னணி நிறுவனங்களின் ஒன்று.
2. 2015, 2016, 2017, 2018, 2019, 2020.

குளோபல் பேங்கிங் அண்ட் பைனான்ஸ் நியூயோர்க் (2019, 2020) மற்றும் செய்யில் பைனான்ஸ் இன்டர்நெஷனல் (2021) ஆகியவற்றால் கௌரவிக்கப்பட்ட இலங்கையின் சிறந்த ஆயுள் காப்புறுதி நிறுவனம்.

HEALTHIER, LONGER, BETTER LIVES

AIA Insurance Lanka Limited (Co.No.PQ 18 PB) இணை வெளிப்படுத்தல் 03/19/2022

ஞாயிறு வெளியீடு
தமிழன்
THAMILAN WEEKLY
அரசியல் வாரமிரு முறை வெளியீடு
இல. 91, விநோதா மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1080
மின்னஞ்சல் : thamilanweekly@gmail.com/ thamilaneditor@gmail.com

கடன்காரர்களாகிய மக்கள்!

இலங்கைக்கு ஆதரவளிக்கும் வேலைத்திட்டம் தொடர்பில் இலங்கையுடன் கலந்துரையாடல்களை ஆரம்பிக்க, சர்வதேச நாணய நிதியம் உத்தேசித்துள்ளதாக அதன் பேச்சாளர் ஜெரி ரைஸ் தெரிவித்துள்ளார்.

தீவிரமாகி வரும் பொருளாதார நெருக்கடி அரசாங்கத்தை தனது கொள்கையை முற்றிலுமாக மாற்றுவதற்கு நிர்ப்பந்தித்துள்ளதைத் தொடர்ந்து இலங்கை அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்கனவே பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளது.

பொருளாதார நெருக்கடிக்கு உடனடித் தீர்வை காண்பதற்கும், மக்களிற்கு நிவாரணத்தை வழங்குவதற்கும் முயல்வதாக ஜனாதிபதி கடந்த புதன்கிழமை நாட்டு மக்களுக்கான உரையில் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான எனது பேச்சுவார்த்தைகளின் பின்னர் நான் அவர்களுடன் இணைந்து பணியாற்றத் தீர்மானித்துள்ளேன் என ஜனாதிபதி கோட்டாபய தெரிவித்தார்.

இந்த பேச்சுவார்த்தைகளின் மூலம் நாங்கள் எங்கள் வருடாந்த கடன்களையும், இறைமை பத்திரத்தையும், ஏனையவற்றையும் செலுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இலங்கையின் குறைவடைந்துள்ள அந்நிய செலாவணி கையிருப்பு, இறக்குமதிகள் மற்றும் எரிபொருள்களிற்கு பற்றாக்குறையை ஏற்படுத்தியதாலும், மின்தடை மற்றும் இரட்டை இலக்க பணவீக்கத்திற்கு காரணமாக அமைந்துள்ளதாலும், பல மாதங்களாக அதிகரித்து வரும் பொருளாதார நெருக்கடியின் வலியை இலங்கை அனுபவித்து வருகின்றது.

கொழும்பில் கடந்த வாரம் கூடிய எதிர்க்கட்சியினரும், ஆயிரக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்களும் பொருளாதாரத்தைக் கையாண்ட விதத்திற்காக அரசாங்கம் இராஜினாமா செய்யவேண்டும் என வேண்டுகோள் விடுத்தனர். வெள்ளிக்கிழமையன்றும் மக்களின் ஆர்ப்பாட்டமொன்று கொழும்பை முடக்கியது.

இதுவரையில் தன்னால் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியின்றி பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வை காணமுடியும் என அரசாங்கம் தெரிவித்து வந்தது. ஆனால், இப்போது வேறு வழியில்லாமல் சர்வதேச நாணய நிதியத்திடம் சரணடையவேண்டிய நிலைமை.

இந்தியா போன்ற அயல்நாடுகளிடமிருந்து கடனை பெறும் அரசாங்கத்தின் மூலோபாயத்தை யதார்த்தமற்றது என முதலீட்டாளர்கள் நிராகரித்துள்ளனர். இலங்கை இந்த வருடம் 7 பில்லியன் டொலர் கடனையும், வட்டியையும் திருப்பி செலுத்தவேண்டியுள்ளது என நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷ கடந்த ஜனவரியில் தெரிவித்திருந்தார். ஆனாலு, அது சாத்தியப்படவில்லை .

இலங்கையின் அந்நிய செலாவணி கையிருப்பு 500 மில்லியன் டொலர்களிற்குக் குறைவானதாக மாறியுள்ளது என பொருளாதார ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இலங்கையின் உடனடி ஏவாலாக ஒரு பில்லியன் டொலரை அது ஜூலை மாதத்தில் செலுத்தவேண்டும். ஆனால், இலங்கை உடனடி பொருளாதார மறுசீரமைப்பினை மேற்கொண்டால் மாத்திரமே அந்தக் கடனை திருப்பி செலுத்தமுடியும் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சர்வதேச நாணய நிதியத்துடனான இலங்கையின் இணக்கத் திட்டம், நாட்டின் கடன்களைப் பேணக்கூடிய நிலைக்கு கொண்டுவருவதற்கான மறுசீரமைப்பை அடிப்படையாக கொண்டிருக்கும் என நம்பப்படுகிறது.

சர்வதேச நாணய நிதியம் இந்த மாதம் வெளியிட்ட இலங்கை குறித்த கலந்தாய்வு அறிக்கையில் இலங்கையின் கடன்கள் பேணமுடியாத நிலைக்கு சென்றுவிட்டன - குறைந்தளவு அந்நிய செலாவணி கையிருப்புகள் காணப்படுகின்றன - எதிர்வரும் வருடங்களில் பெருமளவு நிதி தேவைப்படும் என்று தெரிவித்திருந்தது.

இலங்கை மறுசீரமைப்பினை உடனடியாக முன்னெடுக்காவிடின், பெருந்தொற்றினபோது கடன்களை திருப்பி செலுத்தத் தவறிய ஜாம்பியா, ஈக்குவடோர் போன்ற நாடுகளின் பட்டியலில் இலங்கை இணைந்துகொள்ளும். விரும்பியோ, விரும்பாமலோ சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை கைகோர்க்க வேண்டியுள்ளது. மக்களும் அதற்கான கடனை செலுத்த தயாராக வேண்டியுள்ளது. அரசின் மோசமான பொருளாதார மூலோபாயங்களே இவற்றுக்கான காரணங்கள். இறுதியில் கடன்காரர்களாகி மக்களைப் பலிக்கடாவாக்கியதே மிச்சம்.

சண்டே சாம்பார்

★ ஆட்சிக்குள் நடக்கப்போகும் அதிரடி மாற்றங்கள்...

★ பெசில் ராஜபக்ஷவிடமிருந்து நிதியமைச்சு பறிக்கப்படுமா?

★ மாகாண சபைத் தேர்தலா உள்ளூராட்சித் தேர்தலா முதலில் வரும்?

★ இலங்கை ஆட்சியாளர்களை மாற்றத் தீர்மானித்து வியூகங்களை வகுக்கும் நாடொன்று தொடர்பில் ஆட்சியாளர்கள் அதிர்ச்சியில்...

நாட்டின் பொருளாதார நெருக்கடி ஒரு பக்கம், அரசாங்கத்திற்குள் அரசியல் நெருக்கடி இன்னொரு பக்கம் என்று கொழும்பு அரசியல் திண்டாடிக்கொண்டிருக்கிறது.

விமல் அணி வெளியேறிய கையோடு அதில் அமைச்சராகத் தொடர்ந்து பதவி வகிக்கும் வாசுதேவவும் விரைவில் பதவியை இராஜினாமா செய்யவுள்ளார். அதேசமயம் ஆட்சியில் அதிரடி மாற்றங்களை செய்ய அரச மேல்மட்டத்தில் ஆராயப்பட்டு வருகிறது.

விமல் அணியின் இராஜினாமாவின் பின்னர் அவர்கள் வெளியில் தெரிவித்துவரும் கருத்துகள் அரசாங்கத்திற்கு, குறிப்பாக நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷவின் வகிபாகத்திற்கு பெரிதும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளன.

இந்தியா இலங்கைக்கு ஒரு பில்லியன் டொலர் கடனை வழங்கியிருக்கிறது. ஆனால், அவற்றினூடாக பொருட்களை வாங்கலாம். அதனால் இப்போது இருக்கும் டொலர் பிரச்சினை தீராது. மறுபுறம் சீன அரச வங்கிகளுக்கு இம்மாதம் 21ஆம் திகதி செலுத்த வேண்டிய கடன்களின் தவணைகளை இம்முறை செலுத்த முடியாத நிலை இலங்கைக்கு ஏற்பட்டுள்ளது. இலங்கை சீன அபிவிருத்தி வங்கிக்கு 53.596 மில்லியன் டொலர்களும், சீன எக்சிம் வங்கிக்கு 17 மில்லியன் டொலர்களும், அன்றைய திகதியின்படி 386.19 மில்லியன் யுவான்களும் செலுத்த வேண்டியுள்ளது.

ஆனால், இலங்கை இப்போது இந்தியா பக்கம் சென்றுள்ளதால் சீனா கடும் விசனத்தில் இருக்கிறது. ஏற்கனவே திருகோணமலை எண்ணெய் தாங்கிகள் தொகுதியை இந்தியாவுக்கு வழங்கியதால் அதிருப்தியடைந்துள்ள சீனா, யாழ்ப்பாணத்தில் பலாலி விமான நிலையம், காங்கேசன்துறை துறைமுகம் ஆகியவற்றை இந்தியாவுக்கு வழங்க இப்போது எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தால் பெரிதும் அதிர்ச்சியடைந்துள்ளது.

இப்போதைய ஆட்சியாளர்கள் தமக்கு சாதகமாக இருப்பார்கள் என்று நம்பிய சீனா, அது நடக்கவில்லை என்பதால் இப்போது விமல் அணியை அரசுக்குள்ளிருந்து வெளியேற்றி அந்த அணிக்கு ஆதரவை வழங்கி புதிய அரசியல் கூட்டணியொன்றை இப்போதைய அரசுக்கு எதிராக உருவாக்க முனைகிறது. இந்த தகவல் ஆட்சியாளர்களுக்கு தெரியவந்து அது அரச மேல்மட்டத்தில் அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ளது. பெசில் ராஜபக்ஷ இலங்கையின் அடுத்த ஜனாதிபதியாக வருவதற்கு இந்தியா ஏற்பாடுகளை செய்கிறது. ஆனால், அதனைத் தடுக்கும் முயற்சியில் சீனா ஈடுபட்டுள்ளது. சுருக்கமாக சொல்வதானால் அதுதான் கதை.

இந்தியாவிடம் உதவிகளைப் பெற்றுள்ள இலங்கை, அதற்கு கைமாறாக முக்கிய இடங்களை அபிவிருத்தி என்ற பெயரில் இந்தியாவிடம் கையளிக்கவுள்ளது. அத்துடன் நிற்காமல் மாகாணசபைத் தேர்தலை இவ்வருடம் நடத்த தீர்மானித்துள்ளது. உள்ளூராட்சித் தேர்தலையே நடத்த அரசு திட்டமிட்டிருந்தது. ஆனால், பெசிலின் இந்தியப் பயணத்தின் பின்னர், அந்தத் தீர்மானத்தில் மாற்றம் ஏற்பட்டு, முதலில் மாகாணசபைத் தேர்தலை நடத்த அரசு தீர்மானித்துள்ளது. அதற்கான உத்தரவாதத்தை இந்திய வெளியுறவுத்துறை அமைச்சருடனான சந்திப்பின்போது பெசில் ராஜபக்ஷ வழங்கியிருப்பதாக அறியமுடிகின்றது.

இந்த பின்னணியில் அரசாங்கத்திற்குள் அதிரடி மாற்றங்களை செய்வதற்கு ராஜபக்ஷ சகோதரர்கள் தீர்மானித்துள்ளனர். அண்மையில் இது தொடர்பில் நடந்த கலந்துரையாடல் ஒன்றின்போது முக்கிய விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன.

நிதியமைச்சு பதவியை மீண்டும் பிரதமரின் கீழ் கொண்டுவர ஆலோசிக்கப்பட்ட போதும், அதனை பெசிலின் கீழ் வைத்திருக்க வேண்டுமென பிரதமர் மஹிந்த தெரிவித்திருக்கிறார். அதேசமயம் அரசியலிலிருந்து சற்று ஓய்வெடுக்கலாமென பிரதமரிடம் ஆலோசனை தெரிவிக்கப்பட்டது. ஆனால், தம்மால் அரசியலில் தொடர்ந்து பங்களிப்பினை செய்யமுடியுமென பிரதமர் இங்கு தெரிவித்திருக்கிறார். ஏப்ரலில் பிரதமர் மஹிந்த ஓய்வு பெற முன்னர் ஆலோசிக்கப்பட்ட போதும், அந்த யோசனை இப்போது ஒத்திவைக்கப்பட்டது.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர், சர்வதேச நாணய நிதியத்திடம் கடன்பெறுவதை எதிர்ப்பதால் அவரை இராஜினாமா செய்யுமாறு கோரி அவரின் இடத்திற்கு வேறொருவரை நியமிக்க ஆலோசிக்கப்பட்டது. ஆனால், கப்ரால் வெளியேறி விமல் அணியுடன் இணைந்து அரசுக்கு எதிராக கருத்துகளை கூற ஆரம்பித்தால் அது அரசுக்கு மேலும் பாதிப்பைத் தரலாம் என்பதால் அவரைத் தொடர்ந்து ஆளுநர் பதவியில் வைத்திருக்கத் தீர்மானிக்கப்பட்டது.

அரசிலிருந்து வெளியேறிய விமல் அணி பெசில் ராஜபக்ஷவையும், அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகளையும் தாறுமாறாக விமர்சித்து வருகிறது. அதற்கு பதிலடியாக அரசாங்கத்தரப்பு உறுப்பினர்கள் கருத்து வெளியிட்டாலும் அது மக்கள் மத்தியில் எடுபடவில்லையென்பதே நிலைவரம்.

ரணிலின் சத்தியாக்கிரகம்

ஜக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 23 ஆம் திகதி விகாரமாதேவி பூங்கா முன்றலில் சத்தியாக்கிரகப் போராட்டமொன்றை நடத்தவுள்ளார். அன்றைய தினம் அனைவரும் வெள்ளை நிற ஆடையுடன் வரவேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நல்லாட்சி அரசுக்கு முன்னர், இதே இடத்தில் அப்போதைய அரசுக்கு எதிராக போராட்டத்தை ஆரம்பித்தார் ரணில். பின்னர் ஆட்சிமாற்றம் ஏற்பட்டு பிரதமரானார் ரணில். எனவே, இந்த இடம் ராசியானது எனக் கருதி இப்போதைய அரசுக்கு எதிராக போராட்டத்தை அதே இடத்தில் ஆரம்பிக்கிறார் ரணில்.

சஜித்துக்கு எதிரான விமர்சனங்கள்

ஜக்கிய மக்கள் சக்தி கடந்த 15 ஆம் திகதி கொழும்பில் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் ஏராளமான மக்கள் திரண்டபோதும், அதனை சரியாக எவரும் வழிநடத்தவில்லையென அக்கட்சிக்குள் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

மேற்படி பேரணி முடிவில் முக்கிய உரைகளை ஆற்ற ராஜித, பொன்சேகா, சம்பிக்க மற்றும் பங்காளிக்கட்சிகளின் தலைவர்களுக்கு வழங்கியிருக்கலாம். அப்படி வழங்காமல் சஜித் மட்டும் உரையாற்றத் தீர்மானித்தமை குறித்து அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் விசனம் தெரிவித்திருக்கின்றனர்.

ஜக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணிலின் அருகிலிருந்து, அவரைத் தவறாக வழிநடத்திய ஒருவர் இப்போது சஜித்தைத் தவறாக வழிநடத்துவதாக ஜக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் சுட்டிக்காட்டுகிறார்.

தனக்கு மக்கள் சக்தி இருப்பதாக சம்பிக்க ரணவக்கவுக்குக் காட்டும் பேரணியே அன்று நடத்தப்பட்டதே தவிர, அரசாங்கத்திற்கு எதிரான பேரணியல்லவென அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

- சிவா இராமசாமி -



பயங்கரவாதத் தடைச் சட்டமும் ஜெனீவாவும்

அ.நிக்ஸன்

இலங்கை அரசியல் யாப்பில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வேண்டிய அவசியம் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனிடம் கடிதம் ஒன்றைக் கையளித்துள்ளார். பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டுமென்பதே தனது ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாடு என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனாலு இந்தக் கடிதத்தை சஜித் பிரேமதாச, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடமே கையளித்திருக்க வேண்டும். ஏனெனில், சிங்களவர்களை மையப்படுத்திய இலங்கை அரசு என்ற கட்டமைப்பே பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க முழு அதிகாரமும் கொண்டிருகின்றது. மாறாக சுமந்திரனோ தமிழரசுக் கட்சியோ அல்ல.

ஆகவே சஜித் பிரேமதாவும் அவருடைய 54 உறுப்பினர்களும் முன்னர் அங்கம் வகித்திருந்த ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருந்தபோது. அமுல்படுத்தப்பட்டிருந்த இச் சட்ட மூலத்தை நீக்குவதற்கான முழுப் பலத்தையும் நோ்மையான விருப்பத்தையும் முதலில் வெளிப்படுத்த வேண்டும்.

மாறாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வேண்டுமென்பதே தமது கட்சி நிலைப்பாடு எனக் குறிப்பிட்டு கடிதம் ஒன்றை ஆட்சி அதிகாரம் இல்லாத தமிழரசுக் கட்சியிடம் கையளித்து விட்டு, அடுத்து வரவுள்ள ஜனாதிபதித் தோ்தலில் தமிழ் மக்களின் வாக்குகளை எதிா்பாா்க்கும் குறுகிய எண்ணம் கொண்ட அரசியலை அறவே கைவிட வேண்டும்.

வெள்ளிக்கிழமை மாலை இந்தக் கடிதம் கையளிக்கப்பட்டுள்ளது. பயங்கரவாதத் தடைச்சட்டம் முற்றாக நீக்கப்பட்டுச் சா்வதேச நியமங்களுக்கு ஏற்ற புதிய சட்டமொன்று அதனை பிரதியீடு செய்யவேண்டும் என சஜித் பிரேமதாச அந்தக் கடிதத்தில் பரிந்துரைத்துமுள்ளாா்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறு கோரி கையொப்பமிடும் போராாட்டம் ஒன்றை நடத்திவரும் சுமந்திரன், சமயத் தலைவா்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா உள்ளிட்ட முக்கியமான சிங்களப் பிரதிநிதிகளிடமும் கையொப்பங்களைப் பெற்று வருகின்றாா்.

ஆனால், கையொப்பமிடும் சிங்கள சமயத் தலைவா்கள் எவரும் போா் நடைபெற்றபோது இந்தச் சட்டமூலம் தமிழா்களுக்கு ஆபத்தானது என்ற கருத்தை எந்தவொரு இடத்திலுமே அன்று பதிவு செய்திருக்கவில்லை.

சந்திரிகா பதினொரு ஆண்டுகள் ஜனாதிபதியாக இருந்தபோது இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தியே தமிழ் இளைஞா், யுவதிகளை ஆயிரக் கணக்கில் கைது செய்துமிருந்தாா். சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்றிருந்த செம்மணிப் புதைகுழி விவகாரம் முக்கியமான இன அழிப்பு என்றே பலரும் பேசுகின்றனா்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை 1979ஆம் ஆண்டு இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்பில் முக்கியமானதொரு சட்டமாக அன்று கொண்டு வந்ததே ஐக்கிய தேசியக் கட்சிதான். அப்போதுகூட சந்திரிகாவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அந்தச் சட்டமூலத்தை எதிா்க்கவேயில்லை.

ஈழத் தமிழா்கள் தமது அரசியல் விடுதலைக் கோரிக்கையை வலியுறுத்தி வடக்குக் கிழக்கில் அஹிம்சைப் போராட்டங்களைத் தீவிரமாக நடத்திக் கொண்டிருந்த வேளையிலேயே இந்தச் சட்டம் இலங்கை ஒற்றையாட்சி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருந்தது.

ஜே.ஆா்.ஜயவா்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அன்று தமிழ் மக்களுக்கு எதிராக, இன ஒடுக்கல் வேலைத் திட்டங்களை கன கச்சிதமாக மேற்கொள்ளவே இந்தச் சட்டத்தை உருவாக்கியிருந்தது என்பதும் கண்கூடு.

பின்னா் தொடா்ச்சியாக பதவிக்கு வந்த சந்திரிகா உள்ளிட்ட அனைத்து சிங்கள ஆட்சியாளா்களும் இந்தச் சட்டமூலத்தைப் பயன்படுத்தியே தமிழ் இளைஞா், யுவதிகளைக் கருவறுத்தனா் என்பதும் பட்டவா்த்தனம்.

சஜித் பிரேமதாசவின் தந்தை ரணசிங்க பிரேமதாச 1989 ஆம் ஆண்டு முதல் 1993ஆம் ஆண்டு மே மாதம் வரை ஜனாதிபதியாக இருந்தபோது இச் சட்டத்தைப் பயன்படுத்தியே பல தமிழ் இளைஞா் யுவதிகளை விசாரணைகள் இன்றி சிறையில் நிலைப்பாடு என்று கூறி, அதுவும் தமிழரசுக் கட்சியின் பேச்சாளா் சுமந்திரனிடம் கடிதம் ஒன்றைக் கையளித்திருப்பதன் மூலம், சுமந்திரன் நடத்தும் போராட்டத்தின் அரசியல் பின்னணி வெளிப்படுகின்றது.

அதாவது சிங்கள அரசியல் கட்சிகளை நியாயப்படுத்திக் கொண்டு வெறுமனே ராஜபக்ஷ குடும்பம் மாத்திரமே போா்க் குற்றவாளிகள் எனவும் தமிழ் இன அழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டவா்கள் என்றும் காண்பிப்பதன் மூலமாக பௌத்த சமயத்தை மையமாகக் கொண்ட இலங்கை அரசு என்ற கட்டமைப்பைச் சுமந்திரன் சுத்தம் செய்கின்றாா் என்பது இங்கே வெளிப்படையாகின்றது.

1948ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில் ஒற்றையாட்சியை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட இலங்கை அரசியல் யாப்புகளே ஈழத் தமிழா்களின் அரசியல் விடுதலையை மறுதலித்து குறிப்பாக வடக்குக் கிழக்கு மாகாணத்தின் இணைப்பையும் தமிழா்களின் சுயநிா்ணய உரிமையும் புறக்கணித்து ஈழத்தமிழா்களின் மரபுரிமைகளையும் அழித்து வருகின்றன என்பதே யதாா்த்தமாகும்.

பிரித்தானியாின் ஆட்சிக்காலத்தில் உருவாக்கப் பட்ட அரசியல் யாப்புகளும் ஈழத்தமிழா்களின் அரசியல் விடுதலையை உறுதிப்படுத்தக்கூடிய குறைந்தபட்ச அடிப்படை நோ்மைகளை வெளிப்படுத்தியமிருக்கவில்லை.

இதன் பின்புலத்தில் 1979ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பின்னா், 1982ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியினால் உருவாக்கப்பட்ட மற்றுமொரு தடைச் சட்டமான ஆறாவது திருத்தச் சட்டம் பிரிவினைக்கு எதிரானதாகும்.

ஆனால், சுயநிா்ணய உரிமையை வலியுறுத்திப் பேசுவதற்கு ஆறாவது திருத்தச் சட்டம் தடையில்லை என்பதே சட்ட வல்லுநா்களின் கருத்தாகும். பங்கரவாதத் தடைச் சட்டம்கூட சுயநிா்ணய உரிமையைப் பற்றிப் பேசத் தடையில்லை.

ஆகவே ஈழத் தமிழா்கள் பற்றி சிங்கள மக்களிடம் தவறான நச்சு உணா்வை ஊட்டிக் கொண்டிருக்கும் ஆறாவது திருத்தச் சட்டத்தை நீக்க வேண்டுமென்று கோருவதற்குத் தமிழரசுக் கட்சிக்கு முடியாமல் இருக்கும் ஒரு சூழலில், பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிரான சுமந்திரனின் கையொப்பமிடும் போராாட்டம் எதனைக் காண்பிக்கின்றது என்ற பமான கேள்விகள், சந்தேகங்கள் விஞ்சிக் காணப்படுகின்றன.

2009ஆம் ஆண்டு மே மாதத்துக்குப் பின்னரான சூழலில் புதிதாக நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கும் இலங்கைத் தேசிய பாதுகாப்பு என்பதே தற்போது தமிழா்களின் அரசியல் விடுதலைக் கோரிக் கைக்கு எதிரான மற்றுமொரு பிரதான பயங்கர ஆயுதமாகும்.

இலங்கைத் தேசிய பாதுகாப்பு என்பது தமிழா்களின் அரசியல் விடுதலைக் கோாிக்கைக்கான அஹிம்சை வழிப் போராாட்டங்களை அடக்குவதற்கே என்று குறிப்பிட்டு வாதிடுவதற்குத் தமிழரசுக் கட்சி உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு துயக்கம் உண்டெள்பது பகிரங்கமாகத் தெரிந்த உண்மை.

ஆகவே ஜெனீவா மனித உரிமை சபையின் தீா்மானத்தில் ஆறாவது திருத்தச் சட்டத்தை நீக்க வேண்டுமெனக் கோராமல், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறு கோாியுள்ளதன் பின்னணியிலேயே சுமந்திரன் நடத்தும் கையொப்பமிடும் போராாட்டத்தை அவதானிக்க வேண்டும்.

தனது நிலைப்பாட்டையும் தனது அரசியல் பின்னணியையும் தனிப்பட்ட முறையில் சுமந்திரன் பகிரங்கமாகவே வெளிப்படுத்துகின்றாா். அதனைப் பகிரங்கமாகவே பலரும் விமா்சிக்கின்றனா். குற்றம் சுமத்துகின்றனா்.

ஆனால் தமிழரசுக் கட்சியின் ஏனைய உறுப்பினா்களும் தமிழரசுக் கட்சியை மையப்படுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய உறுப்பினா்களும், மற்றைய தமிழ்த் தேசியக் கட்சிகளும் சுமந்திரனின் செயற்பாடுகளைக் கண்டித்து அச்சாப்பிள்ளை அரசியல் நடத்துகின்றன.

ஈழத்தமிழா்களின் அரசியல் விடுதலை குறித்த பிரதான நகா்வுகளின்போது. தமிழரசுக் கட்சியின் ஏனைய உறுப்பினா்களும் மற்றைய தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவா்களும் மதிமேல் பூனைபோன்றிருப்பதே பெரும் ஆபத்து என்பதை மக்கள் தற்போது உணரவும் ஆரம்பித்துவிட்டனா்.

ஆனால் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் இந்த உணா்வுகளைப் பயன்படுத்தி நிவாரண அரசியல், சலுகை அரசியலில் ஈடுபட்டு வரும் கொழும்பை மையமாகக் கொண்ட பிரதான சிங்கள அரசியல் கட்சிகளின் வடக்கு கிழக்கு தாயகப் பகுதிகளுக்கான தமிழ் முகவா்கள் தமக்குரிய வாக்குகளை அதிகாிக்கும் ஆபத்துகளே நிறைந்திருக்கின்றன. சுமந்திரனும் அதற்கு விதிவிலக்கல்ல.

ஜெனீவா மனித உரிமைச் சபையின் தீா்மானத்தில் ஆறாவது திருத்தச் சட்டத்தை நீக்க வேண்டுமெனக் கோராமல், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறு கோாியுள்ளதன் பின்னணியிலேயே கையொப்பமிடும் போராாட்டத்தை அவதானிக்க வேண்டும்



கட்டுரையாளர்:
யோ.தர்மராஜ்
dharmarajmyuran@gmail.com

கொந்தளிக்கும் மக்கள்



"இருந்தால் இருக்கிறது எனச் சொல்லுங்கள். இல்லையென்றால் இல்லை எனக் கூறுங்கள்" இருக்கிறதா,இல்லையா எனத் தெரியாது வெயிலில் காய்ந்து மழையில் நனைந்து இரவு, பகலாக பட்டினியுடன் வரிசையில் காத்துக்கொண்டிருக்கவா நாங்கள் உங்களுக்கு வாக்களித்தோம்?" என எரிபொருளுக்காக வரிசையில் காத்திருக்கும் மக்கள் கொந்தளிக்கின்றனர்.

நாட்டில் என்ன நடக்கிறது என சிந்தித்து பார்க்கக்கூட முடியாதளவுக்கு நாடு பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குண்டுள்ளது. கொரோனாவால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை சரிசெய்வதற்குள் நாட்டின் நிலைமையே தலைகீழாக மாறிவிட்டது.

நாட்டில் என்னென்ன இருக்கிறது, என்னென்ன இல்லை எனக் கூட தெரியாது மக்கள் சாரை சாரையாக வரிசையில் காத்திருக்கின்றனர். அரசாங்கத்திலிருக்கும் அதிகாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் தவறான அறிவிப்புகளே எரிபொருட்கள் உள்ளிட்டவற்றின் தட்டுப்பாட்டுக்கான காரணம் என ஒரு தரப்பு குற்றம் சுமத்தினாலும் முறையான நிர்வாகம் மற்றும் முறையாக வகுக்கப்படாத பொருளாதார கொள்கைகளே இன்றைய நெருக்கடிக்கு காரணம் என மற்றொரு தரப்பும் குற்றம் சுமத்திக் கொண்டிருக்கின்றனர்.

இவர்களுக்கிடையில் நாட்டின் எதிர்காலமே சிறப்பாக மாறும் என எதிர்பார்த்து வாக்களித்த மக்கள் சிக்கித் தவிக்கின்றனர். மக்களின் பிரச்சினைகளுக்கு ஏதேனும் தீர்வுக்காக அரசாங்கத்திடமிருந்து அறிவிப்புள் கிடைக்கும் என காத்திருந்தாலும் என்ன நடக்கக் கூடாது என மக்கள் எதிர்பார்க்கின்றனரோ, அதுவே நடந்தேறுகிறது.

நாட்டுக்கு தேவையான எரிபொருளுடன் கப்பல்கள் வருகின்றன என அமைச்சர் அறிவித்தாலும் எரிபொருளை பெற்றுக்கொள்ள காத்திருக்கும் மக்களின் வரிசைகளும் நீண்டுகொண்டே செல்கிறது.

உண்மையில் நடந்தது என்ன?

நாட்டின் அந்நிய லொனவினியின் கையிருப்பில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் டொலருக்கான தட்டுப்பாடும் இலங்கை ரூபாவுக்கு நிகரான டொலருக்கான பெறுமதியும் வீழ்ச்சியடைந்தது. எங்கள் நாட்டில் டொலர் அச்சிட முடியாது என்பதால் எரிபொருள் உள்ளிட்ட பொருட்களை இறக்குமதி செய்யும் இறக்குமதியாளர்களுக்கான டொலரை வழங்குவதில் பெரும் நெருக்கடி ஏற்பட்டது.

இந்த நெருக்கடியினால் இறக்குமதி செய்யப்படும் எரிபொருளடங்கிய கப்பல்களை துறைமுகத்திலிருந்து விடுவிப்பதற்கு முடியாத நிலைமை ஏற்பட்டதால், எரிபொருளை தரையிறக்குவதில் காலதாமதம் ஏற்பட்டது. இதற்கிடையில் நாட்டிலிருந்த எரிபொருட்கள், பொது போக்குவரத்து, மின் உற்பத்திகளுக்கு பயன்படுத்தியதால் கையிருப்பிலும் வீழ்ச்சி ஏற்பட்டது.

இதனால், கையிருப்பிலுள்ள எரிபொருட்கள் எத்தனை நாட்களுக்கு போதுமானது என அமைச்சர்களும் அதிகாரிகளும் வெளியிட ஆரம்பித்தனர். இது மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியதால் தங்களுக்கு தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு விரைய ஆரம்பித்தனர். இது நாளுக்கு நாள் அதிகரிக்க எரிபொருட்களுக்கான வரிசைகள் நீடித்தன.

மக்களின் வரிசைகள் நீடித்தாலும் துறைமுகத்துக்கு வருகைதந்த கப்பலை விடுவித்து அதிலிருக்கும் எரிபொருளை தரையிறக்குவதில் அரசாங்கம் காலதாமதம் ஏற்படுத்தியதால் கையிருப்பிலுள்ள எரிபொருட்கள் தீர்ந்துபோயின. இதனால், ஏற்பட்ட வரிசைகள் இன்றுவரை நீடித்துள்ளன.

இலங்கையில் நகரு என்னெய் சுத்திகரிப்பு நிறுத்தப்பட்டது. வெளிநாடுகளிலிருந்து டீசல், பெற்றோல், விமானத்துக்கான எரிபொருள் என்னெய் தேவையாக இருக்குமதி செய்யப்படுவதால் குறிப்பிட்ட தொகை குறிப்பிட்ட காலப்பகுதிகளுள் நிறைவடைவதால் எமக்கு தேவையான எரிபொருளை கஷ்டப்பட்டுத்தான் பெறவேண்டியுள்ளது. இது நாட்டின் எரிபொருள் தட்டுப்பாட்டை உக்கிரமடையச் செய்துள்ளது.

நீண்ட வரிசைகள் - மூடப்பட்ட எரிபொருள் நிலையங்கள்

எரிபொருள் தட்டுப்பாடு உக்கிரமடைந்த நிலையினால் தங்களுடைய வாகனங்களுக்கு தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு மக்கள் முன்னுரிமையுத்துக்கொண்டு வரிசைக்கு வந்ததால் நாளுக்குள் நாள் அந்த வரிசைகள் நீண்டுகொண்டே சென்றுள்ளன.

இந்த மக்கள் வரிசைகள் எல்லாம் சாதாரணமாக ஒரு கிலோமீற்றர் வரையிலும் வானங்களின் வரிசைகள் 2 – 4 கிலோ மீற்றர் வரையிலும் நீடித்துள்ளன. வரிசைகள் இவ்வாறு நீடித்திருக்கின்றமையால் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் போதியளவான எரிபொருள் இருப்பதில்லை. வருகின்ற எரிபொருளும் இரண்டு அல்லது மூன்று மணித்தியாலங்களுக்குள் தீர்ந்துவிடுவதால் வரிசையில் காத்திருக்கும் மக்களுக்கு தேவையான எரிபொருளை விநியோகிக்க முடியாது நாட்டின் பெரும்பாலான எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.



எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்பட்டிருந்தாலும் மக்கள் அங்கு சாரை சாரையாக குவிந்து நிற்கின்றனர். காத்திருக்கும் எங்களுக்கு எங்கிருந்து எவ்வாறு எரிபொருளை வழங்கும் இந்த அரசாங்கம் என தெரியாது கொந்தளிக்கின்றனர் மக்கள்.

அதிகாரிகளாக இருக்கட்டும் அமைச்சராக இருக்கட்டும். எரிபொருள் தொடர்பாக உண்மையான நிலவரத்தை மக்களுக்கு தெளிவூட்ட தவறுவதால் நாளுக்கு நாள் மக்களும் வெயிலில் காய்ந்து மழையில் நனைந்து இரவு பகலாக வரிசையில் காத்திருக்க வேண்டியுள்ளது.

திருட்டுத்தன விநியோகமும் கைகலப்புகளும்

எரிபொருள் கிடைக்குமா? கிடைக்காதா? என்பதைக் கூட அறியாது முடிந்தவரை வரிசையில் காத்திருந்தாவது பெற்றுக்கொள்ள வேண்டும். பல மணி நேரம் வரிசையில் காத்திருக்கும் மக்களுக்கு எரிபொருளை விநியோகிக்காது பல நெருக்கமானவர்களுக்கும் அதிகாரம் படைத்தவர்களுக்கும் திருட்டுத்தனமான எரிபொருள் விநியோகமும் முன்னெடுக்கப்படுவது மக்களை மேலும் கொதிப்படையச் செய்துள்ளது.

தட்டுப்பாடுகள் நிலவுவதாகவும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் இல்லையெனவும் கூறிவிட்டு, லொறி உள்ளிட்ட பார ஊர்திகளில் வரும் சிலருக்கு திருட்டுத்தனமாக விநியோகத்தை பல எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்கள் முன்னெடுக்கின்றனர்.

பெரல் போன்றவற்றை சாக்கினால் மூடி 100 இற்கும் அதிகமான வீற்றர்களை திருட்டுத்தனமாக பெற்றுக்கொள்வதால் பல எரிபொருள் நிலையங்களில் மனிக்கணக்கில் வரிசையில் காத்திருக்கும் மக்களுக்கு எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை ஏற்படுகின்றது.

இந்த கீழ்த்தரமான செயலால் பல எரிபொருள் நிரப்பு நிலையங்களின் ஊழியர் மற்றும் வரிசையில் காத்திருக்கும் மக்களிடையே கைகலப்பும் ஏற்படுகின்றன. வரிசையில் நின்று துன்பப்படுவதோடு நின்று விடாது முரண்பாடுகளையும் எதிர்கொள்ள வேண்டியதுவதற்காக

நிறுவனங்களில் வேலை நாட்களை கட்டுப்படுத்துவதற்கும் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. எரிபொருளை நம்பியுள்ள நிறுவனங்களின் வியாபார செயற்பாடுகளும் தொடர்து முடங்கும் நிலைமைகள் ஏற்பட்டுள்ளன.

முடங்கிய துறைகள்

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக போக்குவரத்து, மின்சாரம், தொழிற்சாலைகள், பொருள் விநியோகம், அலுவலக போக்குவரத்துகள் மற்றும் செயற்பாடுகள், மீன்பிடித்துறை, வைத்தியசாலை போக்குவரத்துகள் மற்றும் மருந்து விநியோகம், விவசாயம், மரக்கறி விநியோகம், ஹோட்டல் துறை, எரிவாயு விநியோகம் உள்ளிட்ட பல்வேறு துறைகள் முற்றாகவே பாதிக்கப்பட்டுள்ளன.

நாடளாவிய ரீதியில் நாளுக்கு நாள் பல எரிபொருள் நிலையங்களில் எரிபொருள் இல்லை என்ற அறிவித்தல்கள் வைக்கப்படுவதால், வாகனங்களும் மக்களும் தீர், ஆகாரம் இன்றியும் துக்கமின்றியும் பல மணி நேரமாக வரிசையில் காத்திருக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

பொருட்களை கொண்டுச் செல்லும் கொள்கலன்களின் போக்குவரத்துகளும் தடைப்பட்டுள்ளன. 02 ஆயிரத்துக்கு மேற்பட்ட கனரக வாகனங்கள் போக்குவரத்திலிருந்து விலகியுள்ளன. பொருட்கள் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளதால் நாட்டில் பல பகுதிகளில் பொருட்களுக்கான தட்டுப்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

ஹோட்டல் மற்றும் பேக்கரி உற்பத்திகளும் பாதிக்கப்பட்டுள்ளன. உற்பத்திகளை கொண்டுச் செல்வதற்குக்கூட எரிபொருள் இல்லாத நிலைமை காணப்படுவதால் பல பேக்கரி உற்பத்தியாளர்கள் கடைகளை மூட வேண்டியுள்ளதாகவும் தெரிவித்தனர். நடமாடும் பேக்கரியாளர்களை தற்போது பாதைகளில் காண முடியாத நிலைமையும் ஏற்பட்டுள்ளது. பல்வேறு உறுதிமொழிகளை வாரி வழங்கியே இந்த அரசாங்கம் ஆட்சி பீடமேறியது. அரசுக்கு வந்த ஒவ்வொரு வாக்கும் ஆயிரம் கனவுகளையும் எதிர்பார்ப்புகளையும் கூறத்தே வந்தன. மக்களிடையே ஆசைகள், எதிர்பார்ப்பு, புதுப்புது கனவுகளை துண்டிவிட்ட அரசு, அனைத்தையும் இன்று சுக்குநூறாக்கியுள்ளது.

பொருளாதார நெருக்கடியான சூழ்நிலையில் அவற்றை எதிர்கொள்ள நிபுணர்களின் ஆலோசனைகளை கோருவது கட்டாய தேவையாகவுள்ளது. அவர்களின் ஒத்துழைப்பின்றி இந்த அரசாங்கம் எடுக்கும் முடிவுகள் பல தோல்வியுற்றுள்ளதையும் மறுக்க முடியாது.

நாட்டின் உண்மை நிலைமையை மக்களுக்கு கூறி அவர்களை தெளிவுபடுத்த வேண்டும். உண்மைகளை மூடிமறைத்து சாய் நகர்த்தல்களை முன்னெடுப்பதால் சவால்களை வெற்றிக் கொள்ள முடியாது.

(படப்பிடிப்பு: பிரதீப் தம்பரகே)

எதிர்ப்புக் கோஷங்கள்

"இறந்தவர்களின் உடல்களை எடுத்துச் செல்வதற்குக் கூட எரிபொருள் இல்லை. நான் இரவு 2 மணிக்கு இறந்தவரின் சவப்பெட்டியுடன் வரிசையில் நின்றிருக்கின்றேன். இறந்தும் இந்த நாட்டில் நிம்மதி இல்லை"

"உண்ண உணவில்லை. எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியாது நடுத்தெருவில் நிற்கின்றோம்"

"அரசின் இயலாமையினாலேயே நாங்கள் துன்பப்படுகின்றோம். நடுத்தெருவில் நிர்க்கதியாகி நிற்கின்றோம்"

"உங்களால் முடியும் என்றுதானே ஆட்சியை பொறுப்பெடுத்தீர்கள். முடியாது என்றால் வீட்டுக்குச் சென்றுவிடுங்கள். நாங்கள் வரிசையில் நிற்க வாக்களிக்கவில்லை"

"எரிபொருளை பெற்றுக்கொள்ள வரிசைகள் இல்லை என அமைச்சர் கூறுகின்றார். வரிசை இருக்கின்றதா இல்லையா என ஏசி வாகனத்தில் செல்லும் உங்களுக்கு தெரியுமா இறங்கிப் பாருங்கள் தெரியும்"

"அரசாங்கம் எங்களுக்கு நல்ல பாடத்தை கற்பித்துள்ளது. அடுத்த தேர்தலில் நாங்களும் இதே பாடத்தை அரசுக்கு கற்பிப்போம்"

"நாங்கள் வாக்களித்ததன் சாபமே எங்களை நடுத்தெருவிற்கு கொண்டுவந்துள்ளது"

"அமைச்சரவை அமைச்சர்களை நீக்கிவிட்டு, நிறுவன தலைவர்களிடம் பொறுப்பை ஒப்படையுங்கள். பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும்"

ஆரோக்கியமான சமூகத்தை நோக்கி பல்துறையில் பிரகாசிக்கும் 'மருதம் நபாயிஸ்'

இலங்கை தேசத்தின் சேரற்றுப்பசியாற்றும் பிரதான நெல்லுற்பத்தி மாவட்டமான அம்பாறையில் கைத்தறியும், கல்விமான்களும், கடலும், இலக்கியமும், எழுத்தும், கலையும் அழகு சேர்க்கும் மருதமுனை எனும் ஊரிலுள்ள எஸ்.எம். வீதியில் வசிக்கும் ஓய்வுபெற்ற அதிபர் அப்துல் றஹுமான் அப்துல் றாஸிக - ஆதம்பாவா கயறுனிஸா தம்பதியினரின் மூத்த புதல்வரான ஊடகவியலாளர் நபாயிஸ் என அறியப்படும் ஏ.ஆர்.அஹமட் நபாயிஸ் ஒரு பட்டதாரியாவார். இவர் தனது ஆரம்ப உயர் கல்வியினை மருதமுனை ஸம்ஸ் மத்திய கல்லூரியில் (இப்போது தேசிய பாடசாலை) பெற்றதோடு தனது தொழில்வாண்மையான உயர் கல்வியினை (2005/2006) கொழும்பு சமூக சேவைக் கல்லூரியில் சமூகப்பணி உயர் டிப்ளோமா (2017/2018) சிறுவர் பாதுகாப்பு டிப்ளோமாக்களையும் பெற்றுக்கொண்டார்.

2015இல் இந்தியா காமராஜன் பல்கலைக்கழகத்தில் சமூகவியல் துறையில் முதுமாணி கற்கைநெறியையும் பூர்த்திசெய்துள்ள இவர், கொழும்பு மாஸ் மீடியா நிறுவனத்தில் ஊடகவியல் சம்பந்தமான டிப்ளோமா மற்றும் ஒலிபரப்பு டிப்ளோமா, கொழும்பு மனித உரிமைகள் நிறுவனத்தில் மனித உரிமை டிப்ளோமா, கிழக்குப் பல்கலைக்கழகத்தில் அனர்த்த முகாமைத்துவ சான்றிதழ், கொழும்பு பல்கலைக்கழகத்தில் பெண்களும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் டிப்ளோமா, இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் இளைஞர் அபிவிருத்திப் பணியில் டிப்ளோமா போன்ற டிப்ளோமா பாடநெறிகளையும் பூர்த்திசெய்துள்ள இவர், சமூக தொழில்நுட்ப கற்கைகள் நிறுவனத்தில் அனர்த்த முகாமைத்துவ டிப்ளோமா, அலுவலக முகாமைத்துவ டிப்ளோமா நெறிகளையும் பூர்த்திசெய்து மருதமுனைக்கே உரித்தான மகன்.

தனது ஆரம்பகாலம் முதல் சமூக சேவை ஆர்வம் மிக்கவராக இருந்துவந்ததினால் இன்றும் பல சமூக சேவைகளை முன்னின்று செய்துவருவது இவரின் சிறப்பியல்வாக நோக்கப்படுகிறது. பிரதேச, கிராம மட்டங்களில் பல்வேறு சமூக முன்னேற்ற அமைப்புகளில் ஸ்தாபகராகவும், உயர்பீட உறுப்பினராகவும், நிர்வாகியாகவும், அங்கத்தவராகவும் பல்வேறு அமைப்புகளில் இணைந்து சேவையாற்றிவரும் இவர், கடந்த 2009ஆம் ஆண்டுமுதல் அகில இலங்கை சமாதான நீதவானாகவும் ஒரு ஊடகவியலாளராகவும் சேவையாற்றி வருகின்றார். முதுமாணி பட்டதாரியான இவர், தற்போது கல்முனை பிரதேச செயலகத்தில் அனர்த்த முகாமைத்துவ நிவாரண சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தராகவும் கடமையாற்றி வருகிறார்.

தனது தொழில் ஆரம்பத்தில் பெண்கள், முதியோர், சிறுவர் தொண்டர் அமைப்பில் சமூதாய அபிவிருத்தி அலுவலகர் மற்றும்

பயிற்றுவிப்பாளராகவும், மனிதாபிமான சகோதரத்துவ அமைப்பில் சமூதாய அபிவிருத்தி அலுவலகராகவும், சர்வோதய சாந்தி சேனா கல்முனை மாவட்ட இணைப்பாளராகவும், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தில் அனர்த்த முன்னாயத்த கள உத்தியோகத்தராகவும், சமுதாய நம்பிக்கை நிதியம் நிறுவனத்தில் அனர்த்த முகாமைத்துவ அலுவலகராகவும், பெண்கள் அபிவிருத்தி நிறுவனத்தில் சிறுவர் அபிவிருத்தி அலுவலகராகவும் கடமையாற்றியுள்ளார். இவரது சமூகப்பணிகளை பாராட்டி பல்வேறு அமைப்புகளும் சமாதீ, தேசகீர்த்தி, இரத்தின தீபம், தேச அபிமானி, கீர்த்தி ஸ்ரீ, சமூக சாகரம் போன்ற பட்டங்களையும் வழங்கி கௌரவித்துள்ளது. தற்போது கல்முனை பிரதேச செயலகத்தில் அனர்த்த நிவாரண சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தராகவும் கடமையாற்றிவருகின்ற இவர், ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் உறுப்பினராகவும் அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் உறுப்பினராகவும் இருந்து வருகிறார்.

1982.மே மாதம் 26 அன்று மருதமுனையில் பிறந்த நபாயிஸ், 2000ஆம் ஆண்டளவிலிருந்து இலங்கையின் தேசிய பத்திரிகைகளுக்கு கவிதைகள் எழுதியதனூடாக எழுத்துலகில் காலடித்தார். இலங்கை தேசத்தில் அதிகமான முன்னணி இலக்கிய வித்தகர்களையும் ஆளுமைகளையும் கொண்ட கிழக்கில் இவரது எழுத்துகளும் அன்றைய நாட்களில் தனக்கான இடத்தைப் பிடிக்கத் தவறவில்லை. அதன் வெளிப்பாடாக பாடசாலை மாணவராக இருந்த நபாயிஸ், 2000ஆம் ஆண்டு உயர் தரம் கற்கும்போது பொது அறிவுத் தொகுப்பு நூலை வெளியிட்டு தன்னை நூலாசிரியர்களின் பட்டியலிலும் இணைத்துக்கொண்டார்.

அதுமட்டுமன்றி யூரோ நானய அறிமுகம் உலகை வந்தடைந்தபோது "யூரோ நானய அறிமுகம் தொகுப்பு" எனும் நூலையும் பாடசாலை மட்டத்தில் வெளியிட்டார். அப்போதெல்லாம் அவருக்கு உறுதுணையாக இருந்த அதிபர் சமட். இந்தப்பொழுதில் நினைவுபடுத்தப்படவேண்டியவர்.

ஆசிரியர், அதிபர் என்பதையெல்லையாம் தாண்டி நல்ல வாசகராக - விமர்சகராக இருந்த நபாயிஸின் தந்தை ஓய்வுபெற்ற அதிபர் அப்துல் றகுமான் அப்துல் றாசீக் தனது மகனை வாசிகசாலையின் பக்கம் நாட்டம்கொள்ள அறிவுறுத்திய முயைையும் அப்போதைய ஊடக கலாசாரத்தின் மீது கொண்ட அரை சீற்றத்தின் பலனாகவும் 2007இல் தந்தையின் வழிகாட்டலுடன் ஊடகத்துறைக்குள் பகுதியளவில் நுழைந்தார் நபாயிஸ். மருதமுனை பிரதேசம் அடங்கலாக பல்வேறு பிரதேசங்களின் பிரச்சினைகள், தாக்கங்கள், தாகங்கள், சடங்குகள்,

சம்பிரதாயங்கள், நிகழ்வுகள், குறைநிறைகள் என தனது எழுத்துகளினால் உயிர்கொடுத்து 15 ஆண்டுகள் போட்டி, பொறாமை, கழுத்தறுப்புகள் கடந்து இன்று வெற்றிகரமான எழுத்தாளனாக - ஊடகவியலாளனாக தன்னை நிரூபித்துள்ளார்.

கடந்த 15 வருடங்களில் 60 கட்டுரையளவில் எழுதியுள்ள நபாயிஸ், அதில் 23 சமூகம்சார் கட்டுரைகளை தோண்டெடுத்து "ஆரோக்கியமான சமூகத்தை நோக்கி" எனும் கட்டுரை தொகுப்பு நூலை ஆவணக்காப்பகத்தின் வெளியீடாக இன்று தன்னுடைய பிறந்த மண்ணான மருதமுனையில் வெளியிடுகிறார். பிரதேச செயலாளர், பேராசிரியர்கள், கல்விமான்கள், இலக்கியவாதிகள், ஊர்ப் பிரமுகர்கள், ஊடக ஆளுமைகள் என பலரும் புடைசூழ வெளியாக இருக்கும் இந்தக் கட்டுரை தொகுப்பு நூலை தான் ஒரு எழுத்தாளன் என்பதை நிரூபித்த பின்னர் நபாயிஸ் வெளியிடுகிறார் என்பது சிறப்பம்சமாக நோக்கப்படுகிறது. மருத நியூஸ் நிறுவன ஸ்தாபகராகவும், மருதமுனை ஆவணக்காப்பகத்தின் ஸ்தாபகராகவும் இருக்கும் நபாயிஸ், எழுத்தின் மீது தீரா சாதல் கொண்ட ஒருவராக இருக்கிறார் என்பதை காட்டுகிறது.

அரச பணியாளன், எழுத்தாளன் என்பதையெல்லாம் கடந்து தான் ஒரு சமூக சேவையாளன் என்பதை நபாயிஸ் எப்போதும் முன்னிறுத்தத் தவறுவதில்லை. அதன் வெளிப்பாடாக சேவைகளை மருதமுனை குட்லக் சமூக சேவை அமைப்பு – (01.01.2004 - 10.08.2004), சர்வோதய சாந்தி சேனா கல்முனை மாவட்ட இணைப்பாளர் (01.02.2008 - 31.10.2008), இலங்கை செஞ்சிலுவைச் சங்க அம்பாறை மாவட்ட அக்கரைப்பற்று பிரதேச முன்செல்சிக்கை கள உத்தியோகத்தர் (01.11.2008 - 31.12.2010), சமுதாய நம்பிக்கை நிதிய அம்பாறை மாவட்ட - கள உத்தியோகத்தர் (01.06.2011 - 31.01.2012),அக்கரைப்பற்று பெண்கள் அபிவிருத்தி நிலைய கள உத்தியோகத்தர் (01.02.2012 - 06.06.2012) ஆகியவற்றில் சேவையாற்றி தன்னுடைய அரச சேவையிலும் கடந்த 2019ஆம் ஆண்டு ஒரு மாதகாலம் சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் அனர்த்த நிவாரண சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தராகவும், 2013.06.07ஆம் திகதிமுதல் கல்முனை பிரதேச செயலகத்தில் அனர்த்த நிவாரண வேலைகள் அபிவிருத்தி உத்தியோகத்தராகவும் கடமையாற்றி வருகிறார்.

தனது அடிப்படையிலிருந்து சேவைகளை சிறப்பாக செய்த நபாயிஸ் 15.08.2004 அன்று மருதமுனை மக்கள் மன்பட இளைஞர் சேவை மன்றத்தின் அனுசரணையுடன் மருதமுனை கிளிஸ்டன் இளைஞர் கழகத்தினால் சிறந்த இளைஞர்களுக்கான பட்டமும் பரிசும் வழங்கி கௌரவிக்கப்பட்டார். 'திண்மக்கழிவு முகாமைத்துவம்' எனும் தலைப்பில் செயற்றிட்டத்தை முன்மொழிந்ததன் மூலம். 2007ஆம் ஆண்டு பண்டாரநாயக்கா சர்வேதேச கல்வி நிறுவனத்தால் சிறந்த இளம் தலைவர்களுக்கான தெரிவில் அம்பாறை மாவட்டத்திலிருந்து இவர் தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. 2008ஆம் ஆண்டு மகுர் மெளலன விளையாட்டுத் தொகுதியில் இளைஞர் சேவை மன்றத்தினால் நடத்தப்பட்ட பிரதேச விளையாட்டுப் போட்டியில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற கழகமான கோரல் இளைஞர் கழகத்தின் தலைவராக இருந்து வெற்றிபெற்றதன் மூலம் கின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். கடந்த 24.03.2012ஆம் ஆண்டு அகில இன நல்லுறவு ஒன்றியத்தினால் காத்தான்குடி ஹிஸ்புலாஹ் அரங்கீழ் வைத்து 'சமஸ்ரீ தேசகீர்த்தி' பட்டமும், சான்றிதழும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இவர் 10.03.2013ஆம் ஆண்டு கண்டி மலையக கலை, கலாசார சங்கத்தினால் எம்.சி.சித்திலெப்பை ஞாபகார்த்த விருது, பட்டம் மற்றும் சான்றிதழ் பெற்றதுடன், 07.04.2013ஆம் ஆண்டு கண்டி மலையக கலை, கலாசார சங்கத்தினால் அக்கரைப்பற்று அதாவுல்லாஹ் அரங்கீழ் வைத்து "இரத்தின தீபம்" விருதும் பட்டமும் சான்றிதழும் வழங்கி கௌரவிக்கப்பட்டார். மகுர் மௌலன விளையாட்டுத் தொகுதியில் நடைபெற்ற மாண்புறும் மருதமுனை நிகழ்வுவில் கௌரவிக்கப்பட்ட நபாயிஸ், 2017ஆம் ஆண்டு கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் கலைஞர் சுவதம் விருதையும் வென்றார். அத்துடன், 17.01.2019ஆம் ஆண்டு கண்டி மலையக கலை, கலாசார சங்கத்தினால் எம்.ஜி.ஆர். ஞாபகார்த்தமாக தேசாபிமானி விஸ்வகீர்த்தி பட்டம் பெற்றார்.

31.03.2019 அன்று கல்முனை ஆளாத் பிளாசா மண்டபத்தில் அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தினால் நடத்தப்பட்டு நாட்டின் முக்கிய அமைச்சர்கள் பலரும் கலந்துகொண்ட ஊடக ஆளுமைகளுக்கான பாராட்டு நிகழ்வில் கிழக்கு மாகாண ஊடகவியலாளர் விருதை பெற்ற இவர், அகில இலங்கை சமாதான பேரவையினால் 'கீர்த்தி ஸ்ரீ' விருதை 2019ஆம் ஆண்டு கொழும்பு கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மண்டபத்தில் பெற்றுக் கொண்டார். இதுதவிர, முக்கிய அமைப்புகள் பலதினதும் கௌரவங்களையும் பாராட்டுகளையும் பெற்ற நபாயிஸ், பிரதேச மக்களினால் நன்றாக அறியப்பட்ட ஊடகவியலாளராகவும் எழுத்தாளராகவும் சமூக சேவகராகவும் திகழ்ந்து வருகிறார்.

நவமணி, தினகரன், தமிழ்த்தற்தி அடங்கலாக பல்வேறு பத்திரிகைகளிலும் எழுதிவந்த நபாயிஸ், 'தமிழன்' பத்திரிகையில் மருதமுனை நிருபராகவும் இப்போது மருதமுனை மேலதிக நிருபராகவும் தனது செய்திகளை கட்டுரைகளை எழுதி வருகிறார். இவரது எழுத்துத்துறை பிரகாசிக்க வாழ்த்துகிறோம்.

தொகுப்பு :
நூருல் ஹுதா உமர்
மாளிகைக்காடு நிருபர்

குறிப்பு : கடந்த மார்ச் 06.2022 அன்று 'தமிழன்' வார வெளியீட்டில் 10.11ஆம் பக்கங்களில் வெளியான "பல்லிருந்தும் பக்கோடா சாப்பிட முடியாத முஸ்லிம் சமூகம்' எனும் தலைப்பிலான கட்டுரையையும் நூருல் ஹுதா உமர் எழுதியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

'வெடி'மணியம்

- தொடர்ச்சி

இளமெயில் சீனா கொஞ்சம் மெதுவாக தன்னுடைய காணி பிடிக்கும் நகர்வை சிறிலங்காவில் செய்யும்.

ஆனால் இந்தியா கொஞ்சம் வெளிப்படையாக வடக்கு கிழக்கில் தன்னுடைய முதலீடுகளை இறக்கும்.

இதற்கிடையில் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்கு உதவிய அமெரிக்காவுக்கு ஒரு சில கொப்பம்வகளை சிறிலங்கா திருப்பி கொடுக்கவேண்டியுள்ளது.

அந்த கொடுப்பனவுகளை சீனா-ரஸ்யா-இந்தியா பார்த்துக்கொள்ளும்.

ஆக;

உக்கிரேன் யுத்தத்தின் முடிவில் உலக ஒழுங்கில் நிகழும் மாற்றத்தில் சிறிலங்கா "ரஸ்யா -இந்தியா-சீனா" என்ற அணியோடு இணைந்துகொள்ளும்.

இதனால எங்களுக்கு என்ன பிரயோசனம் எண்டு கேப்பியள்!

அஞ்சு சதத்து பிரயோசனமும் எங்களுக்கு இல்லை.

மீண்டும் ஒருமுறை இந்தியா ஈழத்தமிழர்களை காட்டி பேரம் பேசி சிறிலங்கா அரசோடு ஒரு புதிய "பொருளாதார ஒப்பந்தத்தை" செய்துள்ளது.

இந்த ஒப்பந்தத்தில் ஈழத்தமிழர்களின் நலன் பற்றி சொட்டுக்கூட இருக்காது.

முழுக்க முழுக்க பிராந்திய வல்லாதிக்க நலன் சார்ந்த ஒப்பந்தம் அது.

சிறிலங்காவை "பொருளாதார" ரீதியாக இந்தியாவில் சார்ந்திருக்க வைத்திருப்பதன் மூலம் அரசியல் விவகாரங்களில் ஒரு 'பிடியை' வைத்திருப்பதே அதன் குட்சுமம்.

"உணவு, மருந்து,போக்குவரத்து,தொழில்நுட்பம்" போன்ற மிக முக்கியமான துறைகளை இந்தியாவுக்கு சிறிலங்கா ஆட்சியாளர்கள் தாரைவார்ப்பதன் பலனை எதிர்கால சிங்கள சமூகம் உணரத்தலைப்படும்.

அழிவில் கிடக்கும் நாட்டை அருகே இருக்கும் தமிழர்களின் கைகளை இறுகப்பற்றி மீட்காமல்;

சீனாக்காறன், ஹிந்திக்காறன் கால்களில் விழுந்து சிறிலங்காவை சிங்கப்பூராக மாற்றும் "பகற்கனவில்" சிங்களப்பேரினவாதம் நகர்கிறது.

அது நடக்கவே நடக்காது என்பது சிங்களப்பேரினவாத ஆட்சியாளர்களுக்கு தெரியாதா என்ன?

நல்லாவே தெரியும்.

இலங்கையில் ஒன்றாக வாழும் தமிழர்களோடு வளங்களை பகிரவிருப்பாத சிறிலங்கா பேரினவாதம் சீனாவோடும் இந்தியாவோடும் அமெரிக்காவோடும் பகிர்வது "மோட்டுத்தனமான" செயல்.

இந்த மோட்டுத்தனமான செயலில் விளைவுகளைத்தான் கடந்த ஒரு சில மாதங்களாக கண்கூடாக பார்த்தும் அனுபவித்தும் வருகிறோம்.

பொருளாதார ரீதியாக வல்லாதிக்க நாடுகளின் காலடியில் விழுந்து கிடந்து நக்குவதால்;

நாட்டுக்கும் மக்களுக்கும் நல்லது நடக்காது என்பது வெளிப்படை உண்மை.

கடந்தகாலங்களில் அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் ரஸ்யாவுக்கும் அடிமைகளாக இருந்த நாடுகளின் "எதிர்காலம்" எப்படி சின்னாபின்னமாக சிதறிப்போனது என்பதை வரலாறு சொல்கிறது.

ஆக;

சிறிலங்காவும் மெல்ல மெல்ல அந்த நாடுகளின் வரிசையில் நிற்கிறது.

ஆட்சியாளர்கள் தங்கள் சுயநல அரசியல் தேள்வைகளுக்காய் நாட்டை அடைவு வைச்சுப்போட்டு முடிவில் நாட்டை விட்டு ஓடிவிடுவார்கள் அல்லது அவர்களின் வாழ்க்கை முடிந்துவிடும்.

தென்னிலங்கை மக்கள் விழித்துக்கொண்டு தமிழ்மக்களுடன் கைகோர்த்து நாட்டை மீட்டால் மட்டுமே;

சிறிலங்காவில் மனிதர்கள் வாழமுடியும்.

நாடு பேற போக்கைப்பாத்தால்;

நாட்டின் டொலருக்கு எதிரான பணப்பெறுமதி இந்தோனேசியா, வியட்னாம், லாவோஸ் நாடுகளை விட மிக மோசமாக மாறும் போல கிடக்கு!

வேண்டுமென்றே சிறிலங்காவில் "பணவீக்கம்" உருவாக்கப்படுகிறதா? அல்லது உண்மையில் சிறிலங்காவின் பணப்பெறுமதி வீழ்ந்துவிட்டதா என்று சத்தியமாக புரியவேயில்லை.

"கொள்ளையடிச்சு வைச்சிருக்கிற டொலருகளை வெளியில எடுங்கடா" என்று தற்போதைய ஆட்சியாளர்களை நோக்கி எதிர்க்கட்சி வீதியில் இறங்கி கூச்சல் போடுகிறது.

நாடு மீளமுடியாத மிகப்பெரிய பொருளாதார வீழ்ச்சிக்கு போய்க்கொண்டு இருக்கிறது.

திரும்பதிரும்ப மிகத்தெளிவாக ஒன்றைமட்டும் சொல்லிப்போட்டு மணியத்தார் இந்தவார பத்தியை சுருக்கமாக முடிக்கப்போறார்.

இனவாதத்தையும் பகையுணர்வையும் விட்டுப்போட்டு;

ஈழத்தமிழர்களின் கைகளை உளச்சுத்தியோடு இறுகப்பற்றினால் மட்டுமே சிறிலங்காவை "பேரழிவில்" இருந்து காப்பாற்றமுடியும்.

அதற்கு முன்பாக பல "நல்லெண்ண சமிக்கைகளை" தமிழர்களுக்கு காட்டவேண்டியது மிக மிக முக்கியம்.

வெறுமனே "வாய்வார்த்தைகளையும் ஒப்பந்தங்களையும்" நம்பும் நிலையில் இழிச்சவாயர்களாக தமிழச்சனம் இனிமேல் இருக்காது.

ஆக;

சம்பந்தரும் பரிவாரங்களும் கோத்தபாயவுடன் பேசப்போகும் போது இந்த விடயத்தை மிக தெளிவாக இறுக்கமாக முடிவாக சொல்லிப்போட்டு வரவேணும்.

பேரினவாதத்தின் சூழ்ச்சிக்குள் மாட்டுப்படாமல் தமிழ்ச்சனத்தையும் எங்களின் அரசியல் இருப்பையும் நாங்கள் மிக அவதானமாக பாத்துக்கொள்ளவேணும்.

அரைவாசி மூழ்கிப்போன கப்பலின் மேற்தளத்தில் இருந்து கோத்தபாயவுடன் பேசும் சம்பந்தரின் பேச்சுக்கள் ஒவ்வொன்றும் "வெட்டு ஒண்டு துண்டு ரண்டாக" இருக்கவேணும்.

காரணம் மூழ்கப்போகும் கப்பலில் வாழ்வோ சாவோ நாங்கள் இருந்தே ஆகவேண்டும்.

கோத்தபாய "அமெரிக்காவில்" போய் வாழ்வதற்கான வாய்ப்பு இருக்கிறது.

திகதி 17.03.2022
வியாழக்கிழமை
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4709
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 8,651,900.00
ஆங்கில எழுத்து M
வெற்றி இலக்கங்கள் 4 7 6 0 3 7
அடுத்த சீட்டிழுப்பில் கப்பற் பரிசு
ரூ. 11,752,030.00
தேசிய லொத்தர்
Mega POWER
மெகா பவர்
மெகா பவர்
23+
சீட்டிழுப்பு இலக்கம் 1057
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,980,060.00
அடுத்த மெகா கப்பற் பரிசு
ரூ. 242,338,342.00
அடுத்த பவர் கப்பற் பரிசு
ரூ. 10,000,000.00
அடுத்த கோடீஸ்வர கப்பற் பரிசு
ரூ. 10,000,000.00
U 06 19 22 37 70
தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 739
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,750,880.00
C 32 54 71 80
அடுத்த சீட்டிழுப்பில் கப்பற் பரிசு
ரூ. 102,938,670.40
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
இலக்கம் 10, ஒழுங்கை 1ஏ, ஜுமுஆ மாவத, கொழும்பு 01
தொலைபேசி : 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416

கச்சதீவுக்கு ஒரு கடற்பயணம்

அனுபவப்பகிர்வு

- யோ. தர்மராஜ் -

இந்திய – இலங்கை மக்களை ஓர் இடத்தில் இணைக்கும் உறவுப்பாலம் கச்சதீவு. வருடத்தில் ஓர் இரவும் இரு நாட்களும் அங்கு நடக்கும் அந்தோனியார் திருவிழா, இம்முறையும் எங்களை அழைத்தது. அழைப்பை ஏற்று, கடல் அலைகளை கிழித்துக்கொண்டு படகு செல்ல, சில்லென வீசும் உப்புக்காற்றோடு கச்சதீவுக்கான கடற்பயணம் ஆரம்பானது.

கச்சதீவை தெரியுமா?

யாழ். குடாநாட்டின் மேற்கில் அமைந்துள்ள சப்த தீவுகள் எனப்படுகின்ற பிரதான ஏழு தீவுகளுடன் பாலைதீவு, இரணை தீவு, கக்கிர தீவு என்பவற்றுடன் கச்சதீவையும் சேர்த்து பதினொரு தீவுகள் அமைந்துள்ளன. இவற்றுள் இரணைதீவு தவிர்ந்த கச்சதீவு, பாலைதீவு, கக்கிரதீவு ஆகிய மூன்றும் மக்கள் புழுதிமற்ற வெறும் தீவுகளாகவே காணப்படுகின்றன.

கச்சதீவானது நெடுந்தீவிற்கு தென்மேற்கே ஏறக்குறைய 14.4 கிலோமீற்றர் தொலைவிலும் பாம்பன் – இராமேஸ்வரத்திலிருந்து வடகிழக்கே 16 கிலோமீற்றர் தொலைவிலும் அமைந்துள்ளது. இலங்கையையும் இந்தியாவையும் ஊடறுத்துச் செல்லும் ஒடுங்கிய பாக்குநீரிணையின் மையப்பகுதியில் இத்தீவு அமைந்துள்ளது.

இத்தீவின் நீளம் சராசரியாக 1.6 கிலோமீற்றராகவும் அகலம் சராசரியாக 275 மீற்றராகவும் காணப்படுகிறது. இதன் பரப்பளவு 82 ஹெக்டேயர்கள் (285 ஏக்கர் –1.15 சதுர கிலோ மீற்றராகும்) ஆகும். இங்கு வரண்ட வலயத்திற்குரிய முற்புதர்கள் தவிர, சிறிய புற்றரைகளும் கற்கரையோரத் தாவரங்களும் படர்ந்துள்ளன. இதன் கிழக்கு அரைப்பகுதி முருகைக் கற்களால் ஆனது. மற்றைய பகுதி மணற் திட்டுகளைக்கொண்டு காணப்படுகின்றது. நன்னீர் நிலைகள் எதுவுமற்ற இத்தீவில் எவ்வித மிருகங்களும் இல்லை.

1974ஆம் ஆண்டுவரை இந்தியாவின் கட்டுப்பாட்டில் இருந்த இத்தீவு, இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி மற்றும் இலங்கை பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவும் கையொப்பமிட்டு, 1974ஆம் ஆண்டு ஜுலை 8ஆம் திகதிமுதல் இலங்கைக்குச் சொந்தமானது.

இத்தீவில் மீனவர்களின் தெய்வமாக கருதப்படும் புனித அந்தோனியாருக்கு அர்ப்பணம் செய்யப்பட்ட புகழ்பெற்ற புனித அந்தோனியார் தேவாலயம் ஒன்று உள்ளது. 20ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில், தொண்டி அருகே உள்ள நம்புதாளை என்ற ஊரைச் சேர்ந்த சீனிஅப்பன் என்பவர் இந்தத் தேவாலயத்தை கட்டியுள்ளதாக வரலாறுகள் கூறுகின்றன. மீன் பிடித்துவிட்டு ஓய்வெடுப்பதற்காக ஒதுங்கியபோது, அலையில் அடித்துவரப்பட்ட அந்தோனியார் சிலையைக்கொண்டு இந்த தேவாலயத்தை அவர் கட்டியுள்ளதாகவும் வரலாறுகள் கூறுகின்றன. இத்தனை பிரசித்துபெற்ற அந்தோனியார் தேவாலயத்தின் நடப்பாண்டின் இரு நாள் திருவிழாவில் கலந்துகொண்டு எனக்கு கிடைத்த அனுபவத்தையே இங்கு நான் பகிர்ந்துகொள்கின்றேன்.

கச்சதீவுக்கு சென்றது எப்படி?

1974ஆம் ஆண்டு கச்சதீவை இந்திய அரசாங்கம் இலங்கைக்கு கொடுத்திருந்தாலும் வருடத்தில் இரு நாட்கள் நடக்கும் அந்தோனியார் திருவிழாவிற்கு இலங்கை மற்றும் இந்திய பக்தர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும், கச்சதீவுக்குச் செல்வதற்கு சில விதிமுறைகளும் உள்ளன.

இந்தியாவிற்கு 10 கிலோமீற்றர் தூரமாக இருந்தாலும் இலங்கையின் தீவு என்பதால் இந்திய பக்தர்களுக்கு விதிமுறைகள் அதிகம். இருந்தாலும், கச்சதீவு இலங்கைக்கு வழங்க முன்னர், இராமேஸ்வர மன்னர்களின் ஆட்சியில் இருந்ததால் அங்குள்ள மக்களுக்கு சில சலுகைகளும் உள்ளன.

இப்போது, இது இலங்கையின் தீவாக இருப்பதால் இங்குள்ள பக்தர்களுக்கு விதிமுறைகள் இருப்பதில்லை. எனினும், கொரோனா தொற்று காரணமாக முதல் முறையாக நெடுந்தீவு மக்களுக்கு மாத்திரம் முன்பதிவு செய்யப்பட்ட அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

வருடத்தில் இருமுறை இடம்பெறும் திருவிழாவிற்கு நெடுந்தீவு, வேலணை, மன்னார், கற்பிட்டி, புத்தளம், சிலாபம், யாழ்ப்பாணம், புங்குடுதீவு என நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் வருகை தருவார்களாம். 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வருகை தருகின்றபோதிலும், கொரோனா தொற்று அச்சுறுத்தல் காரணமாக முதல் முறையாக வரையறுக்கப்பட்டு, முன்பதிவு செய்யப்பட்டவர்களுக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. கச்சதீவுக்கு நெருக்கமான நெடுந்தீவு மக்களுக்கே இம் முறை அனுமதி வழங்கப்பட்டிருந்தமையால், அங்கிருந்து 50 பேரும் அதிகாரிகளுமாக 100 பேருக்கு கச்சதீவு செல்ல அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இந்திய பக்தர்கள் கச்சதீவுக்கு செல்லவேண்டுமென விரும்பினால், இராமேஸ்வரத்திலுள்ள தேவாலயத்திற்கு தங்களுடைய ஆதார் அட்டை உள்ளிட்டவற்றை கொண்டு முன்பதிவு செய்ய வேண்டுமாம். அங்கு முன்பதிவு செய்யப்பட்டதும், கச்சதீவுக்கு செல்வோரின் தகவல்கள் தாசில்தார் அலுவலகத்திற்கு அனுப்பப்படுமாம். அதன்பின் பொலிஸார் ஒவ்வொருவரின் வீட்டுக்கும் சென்று தகவல்களை உறுதிசெய்து, சுங்க வரி, வருவாய் வரி, பொலிஸ், கடற்படை என 5 துறைகளின் அனுமதியும் கிடைத்துடனே கச்சதீவுக்கான பக்தர்கள் அனுமதிக்கப்படுவார்களாம்.

ஒரு நாட்டை விட்டு மற்றொரு நாட்டுக்குச் செல்வதற்கு வீசா மற்றும் கடவுச்சீட்டு மாத்திரம் இல்லாது ஏனைய அனைத்து விதிமுறைகளுக்கு அமையவே இந்திய பக்தர்கள் கச்சதீவுக்கு அழைத்துவரப்படுவர். இராமேஸ்வர கடற்கரையிலிருந்து இந்திய கடற்படையால் அழைத்துவரப்பட்டு, இந்திய – இலங்கை கடல் எல்லையில் இலங்கை கடற்படையிடம் அவர்கள் ஒப்படைக்கப்படுவார்களாம். அதன்பின்னர் அவர்களை இலங்கை கடற்படை கச்சதீவுக்கு அழைத்துவரும்.

இலங்கையில் முன்பதிவு செய்யப்பட்டவர்களில் நான் உள்ளிட்ட ஊடகவியலாளர்களை கடற்படையினர் அழைத்துச் சென்றனர். நாங்கள் மார்ச் 10ஆம் திகதி காலை கொழும்பு கடற்படை தலைமையகத்திலிருந்து யாழ்ப்பாண காங்கேசன்துறைக்குச் சென்று, அன்றிரவு அங்கு தங்கினோம். அங்கிருந்து மறுநாள் (12 ஆம் திகதி) காலை புங்குடுதீவு வழியாக குறுவிட்டுகான் கடற்பரப்பை சென்றடைந்தும், அங்கு எங்களுடைய தகவல்கள் சரிபார்க்கப்பட்டன. தகவல்கள் சரியாக இருந்தமையால் கச்சதீவுக்கு படகில் செல்வதற்கு தயாராக இருந்த வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் இயங்கும் கல்யாணி படகிற்கான நீல நிறத்திலான ஒருவகை அனுமதி அட்டையும் எங்களுக்கு வழங்கப்பட்டது.

அந்த அனுமதி அட்டையுடன் நாங்கள் படகில் ஏறினோம். என்னுடைய முதல் படகு பயணம் என்பதால் படகு பயணத்தின் மீதான எதிர்பார்ப்பும் அதிகமாகவே இருந்தது. 100 பேர் வரை அழைத்துச் செல்லக்கூடிய கல்யாணி படகில் ஏறி, எங்களுடைய பைகளை ஓரமாக வைத்துவிட்டு எங்களுக்கான இருக்கைகளில் அமர்ந்தோம். அமரும்போது, தொட்டிலில் தாலாட்டுவதுபோல் கடல் அலையால் படகு ஆடிக்கொண்டே இருந்தது.

வர்ணிக்க முடியாதளவான அழகு. கடல் அலைகளை கிழித்துக்கொண்டு செல்லும் படகின் சத்தம் என் காதுகளுக்கு புதிதாக இருந்தாலும் ஒருவகை இசைபோலவே இருந்தது. வெளிப்புறத்திலிருந்து பயணித்த நான், கடல் பயணத்தின் முழு அனுபவத்தையும் பெற்றேன். படகு அலைகளை கிழித்துச் செல்லும் அழகே தனிதான். நான்கு மணித்தியால பஸ் பயணம் எனக்கு சலிப்பு தட்டுவதுண்டு, ஆனால், நான்கு மணித்தியால கடற்பயணம் எனக்கு இன்னும் சில மணிநேரம் நீடிக்கக்கூடாதா எனத் தோன்றியது.

நான்கு மணித்தியாலம் படகின் வெளிப்புற மேல் தட்டில் பயணித்தபோது, கடலின் நடுப்பகுதியின் ஆழத்தையும் அதன் நிறத்தையும் ரசித்ததுடன், நண்பர்கள் உள்ளிட்டு நானும் பல புகைப்படங்களையும் எடுத்தோம். அதிலும் அங்கிருந்து கடலை ரசித்துக்கொண்டு பகல் உணவை உண்டது வேறொரு அனுபவத்தைக் கொடுத்தது. உடைந்த பாதையில் பயணத்திருக்கும் நான், கடல் பயணத்தில் கடல் அலைகளால் படகு அசைக்கப்படும்போது, தொட்டிலில் தாலாட்டுவது போன்று உணர்ந்தேன்.

இவ்வாறு தாலாட்டுகளுடன் நான்கு மணிநேர படகு பயணத்திற்கு பின்னர் கச்சதீவை அடைந்தோம். பார்ப்பதற்கு குட்டித்தீவாக இருந்தாலும், இது எனது கச்சதீவுக்கான முதல் பயணம் என்பதால் தீவின் தூரத்து அழகை என் கண்கள் புதுவிதமாக கண்டது.

கச்சதீவு எப்படி இருக்கும் தெரியுமா?

நீண்டநேர கடற்பயணத்துக்குப் பின்னர் கச்சதீவை நாங்கள் அடைந்தபோது, கடலுக்குள் மூழ்கிய மலைகளின் மூழ்காத உச்சியே தீவுகள் என தண்ணீர் தேச புத்தகத்தில் கவிஞர் வைரமுத்துவின் கவிவரிகள்தான் ஞாபகத்திற்கு வந்தது. நான்குபறமும் பச்சை நிற கடல் நீரால் சூழப்பட்ட அழகின் உச்சமாக விளங்கியது கச்சதீவு.

எங்கள் படகு கரையை அடைந்தது. இலங்கை அரசின் கீழுள்ள நெடுந்தீவின் கடற்படை, பொலிஸார் என நீலம் மற்றும் வெள்ளை நிறத்திலான சீருடை அணிந்துகொண்டு சிரித்த முகத்துடன் எங்களை வரவேற்றனர். வருடத்தில் இரு நாட்களுக்கு மாத்திரமே இங்கு நாம் விருந்தாளிகள் என்பதால் வரவேற்பு சிறப்பாகவே இருந்தது.

தீவுக்கு செல்ல முன்னர் பலத்த சோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. இத்தீவுக்கு இந்தியா மற்றும் இலங்கை நாட்டவரும் வருவதால், நுழைவாயிலில் "இலங்கை உங்களை வரவேற்கின்றது" 'இந்தியவர்களுக்கான பகுதி' "இலங்கையர்களுக்கான பகுதி' என பிரிவுகளும் வைக்கப்பட்டிருந்தன. இதில் இரு நாட்டவரின் பைகளையும் பரிசோதனைக்கு உட்படுத்தியே தீவுக்குள் அனுமதித்தனர். பரிசோதனைகளுக்குப் பின்னர் தீவின் நுழைவாயிலுக்குள் சென்றதும் வருடத்திற்கு இரு நாட்கள் மாத்திரம் மனித பாதங்கள் படும் நிலப்பரப்பு. தீவைச் சுற்றி இதுவரை நாம் பார்த்திராத மரங்களும் மூலிகைச் செடிகளும் நிறைந்திருந்தன.

சிப்பி, முருங்கை கற்கள், மீன் தொட்டிக்குள் வைக்கக்கூடிய அழகான கற்கள் என அனைத்தும் குவிந்து மணற்பரப்பே தெரியாதளவிற்கு கடற்கரை முழுவதும் பரவி கிடந்தன. இவற்றை கடந்த நான் தீவுக்குள் நுழைந்தேன். அங்கு செல்ல வாகனங்கள் இல்லை என்றாலும் நடந்து செல்ல முடியாதவர்களை அழைத்துச் செல்ல உழவு இயந்திரம் ஒன்று இருந்தது. அதில் இந்திய மற்றும் இலங்கை பக்தர்கள் தங்களின் உடைகளுடன் ஏறிச் சென்றனர்.

நாங்கள் தீவின் அழகை ரசிப்போம், புகைப்படங்கள் எடுப்போம் என நடந்து சென்றபோது பலத்த பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்தாலும் சிரித்த முகத்துடன் வரவேற்றனர். கடந்த வருடங்களில் சாரை சாரையாக மக்கள் வந்தாலும் இம் முறை குறிப்பிட்ட தொகையான மக்கள் என்பதால் சிறு சிறு கூட்டமாக ஆங்காங்கே இருக்கும் பெரிய மரங்களின் கீழ் கூடாரங்கள் அமைத்து அமர்ந்திருந்தனர்.

யோசித்துக்கொண்டே நகர்ந்தபோது, அந்தோனியார் ஆலயம் கண்களுக்கு பட்டது. அதை பார்த்துக்கொண்டே ஊடகவியலாளர்களுக்காக அமைக்கப்பட்டிருந்த வெள்ளை நிற கூடாரத்திற்கு சென்றோம். உள்ளே நுழைந்த போது, வெயிலின் அனல் சுட்டெரித்தது.

இருந்தும் எங்களுடைய உடைமைகளையும் பொருட்களையும் வைத்துவிட்டு வெளியில் வந்தோம்.



நாம் வருவது புனிதத்தலம், மக்கள் வாழாத இடம் என்பதை புரிந்துகொண்டு, அங்குவரும் பக்தர்கள் தங்குவதற்கான படுக்கை விரிப்புகள், கூடாரம், முதல் நாள் இரவுக்கான உணவு என அனைத்தையும் எடுத்துவந்திருந்தனர். தனித்தீவு என்பதால் மதுவுக்கு அனுமதியே (நோ) இல்லை.

கொடியேற்றமும் திருவிழாவும்

கச்சதீவு அந்தோனியார் ஆலய நடப்பாண்டு திருவிழா கடந்த 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் நடைபெற்றது. அன்று அங்கிருந்த காலிக்கப்பங்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்து, சிலுவைபோன்று தயார் செய்யப்பட்டது. மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமாகியது. இதன்போது, தங்களுடைய எண்ணங்கள் நிறைவேற வேண்டுமென அனைவரும் பிரார்த்தித்து கொடி மரத்தில் கொடிகளையும் தொங்கவிட்டனர். கொடியேற்றத்தைத் தொடர்ந்து திருச்சிலுவை பாதை தியானமும் இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து திருப்பலி, நற்கருணை ஆசீர்வாதமும் இடம்பெற்றது.

திருச்சிலுவை பாதை ஒப்புக்கொடுக்கப்பட்போது, இயேசுவின் வாழ்க்கை வரலாறு முழுவதும் கதையாகக் கூறப்பட்டமை அங்கு விசேட அம்சமாக இருந்தது. சிலுவை பாதை ஒப்புகொடுக்கப்பட்டதையடுத்து, இரவு 8 மணிக்கு யேசுவின் உருவச்சிலை ஏந்திய தேர் பவனியும் இடம்பெற்றது.

மாங்கள் வண்ண வண்ண, மின்குமிழ்களால் அலங்கரிக்கப்பட்டிருந்து கண்ணுக்கு மேலும் மேலும் கச்சதீவின் அழகை மெருகூட்டியது. அதனை பார்த்துகொண்டே என் கால்கள் நகர நகர, ஒவ்வொரு இந்திய மற்றும் இலங்கை உறவுகளையும் சந்தித்து கலந்துறையாடினேன். அவர்களின் கலந்துறையாடல்கள் எனக்கு புதுப்புது அனுபவத்தையும் உறவுகளையும் தந்தது. அப்படியே, என் கால்கள் கடற்கரையை நோக்கி நகர்ந்தன. இரவுநேரத்தில் கடல் அலைகளின் சந்தத்தை அமைதியாக கேட்கும்போது, காதுக்குள் ஒருவித இசை கேட்பதுபோலவே இருந்தது. நானும் அதைக் கேட்டுகொண்டு நண்பர்களுடன் கடற்கரையில் நடந்தேன். கடற்கரையெங்கும் சங்குகளும் சிப்பிகளும் கொட்டிக்கிடந்தன. அதில் வண்ண வண்ண சிப்பிகளை என் கைகள் எடுத்துக்கொண்டு, அங்குள்ள இயற்கை மூலிகையால் கடல் நீர், பச்சை நிறத்தில் இருக்குமாம். அதனையும் பார்த்துவிட்டு எங்கள் கூடாரத்தை நோக்கிவந்தோம்.

இரவு 11.30 மணியிருக்கும் திரந்த வெளியில் நிலவின் ஒளியோடு நாங்களும் மக்களோடு மக்களாக உறங்கினோம். அந்த இரவு தூக்கம் வாழ்க்கையில் மீண்டும் ஒருமுறை கிடைத்திடாதா எனத் தோன்றும் அளவிற்கு மூலிகை, உப்பு கலந்த கடற்காற்றோடு கலந்தது நித்திரை.

சரியாக 4.30 மணியிருக்கும் ஆலயத்தின் ஒலிபெருக்கிகளில் ஒலித்த இயேசுவின் பாடலோடு என் கண்கள் விழித்துக்கொண்டன. கண் விழித்தபோது, கால்களில் பனி படர்ந்திருந்து எனக்கு குளிராக இருந்தாலும் அந்த அனுபவமே தனிதான்.

திருவிழாவின் 2ஆம் நாளான 12ஆம் திகதி (சனிக்கிழமை) திருவிழாவின் பூசையில் கலந்துகொண்டோம். பூசைகளுக்காக யாழ். மாவட்ட அதிபர், யாழ் இந்திய துணைத்தூதுவர், யாழ். மாவட்ட கடற்படைத் தளபதி எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இராமேஸ்வரம் வேர்க்கோடு ஆலய பங்குத்தந்தையும், திருவிழா கூட்டியின் ஒருங்கிணைப்பாளருமான தேவசகாயம் தலைமையில் 4 பங்குத்தந்தைகள் மற்றும் யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் ஜெகரட்ணம் இணைந்து திருப்பலி பூஜைகள் ஒப்புகொடுத்தனர். இதனையடுத்து, கத்தோலிக்கர்களுக்கு அப்பம் கொடுக்கப்பட்டு, ஆசீர்வாதமும் வழங்கப்பட்டது.

தொடர்ந்து கொடியிறக்கப்பட்டதுடன், மீண்டும் திருப்பலி பூஜைகள் நடைபெற்று கச்சதீவு திருவிழா நிறைவுக்கு வந்தது.

பேச்சுவார்த்தைகளும் பேரினவாத அரசுகளும்

கூட்டமைப்புக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் கடந்த 15ஆம் திகதி நடைபெறவிருந்த பேச்சுவார்த்தை தவிர்க்கமுடியாத காரணத்தினால் எதிர்வரும் மார்ச் 25ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் செயற்பாடுகளை கண்டித்து எதிர்க்கட்சியினர் முன்னெடுத்த ஆர்ப்பாட்டம் காரணமாக இச்சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று வருடங்களுக்கும் மேலாக இரு தரப்பினருக்குமிடையில் பேச்சுவார்த்தை நடைபெறும் என்று எதிர்பார்த்தபோதும் அது நடைபெறவில்லை. ஜனாதிபதி கோட்டாபயவின் அழைப்புக்காக தமிழ்த் தேசியக் கட்டமைப்பு காத்திருந்த நாட்கள் அதிகம்.

கடந்த 2021ஆம் ஆண்டு ஆனி மாதமளவில் கூட்டமைப்புடன் ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடத்துவதற்கான திகதி தீர்மானிக்கப்பட்டிருந்தபோதும் இறுதிநேரத்தில் அது ஒத்திவைக்கப்பட்டது என்பதைவிட இரத்துசெய்யப்பட்டது என்பதே உண்மை. இதற்கு பல காரணங்கள் கூறப்பட்டாலும் ஜனாதிபதியுடன் மிக நெருக்கமான நெற்கு அரசியல்வாதிகளின் வலியுறுத்தல் காரணமாக சந்திப்பு இரத்துசெய்யப்பட்டதாக தகவல் வெளிக்கொண்டுவரப்பட்டது.

சான் ஏற மூழம் சறுக்குவதுபோல் இந்தத் திகதியும் சறுக்கியிருக்கிறதாக கூறப்பட்டாலும் அரிடதார் கலுவதுபோல் இராகுவும் கேதுவும் ஒன்றாக சந்திப்பதற்கு இன்னும் நேரம் கைகூடவில்லைபோலும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்ட நாளிலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பேச்சுவார்த்தைக்கு அழைப்பார் என்று பல தரப்பினராலும் எதிர்பார்க்கப்பட்டபோதும் அந்தக் காரியம் இதுவரை கைகூடாத நிலையில்தான் இலங்கைக்கு அண்மைக்காலமாக கொடுக்கப்படுவரும் அழுத்தம் காரணமாகவே கூட்டமைப்பை அழைத்து பேசும் முடிவுக்கு அரசாங்கம் வந்துள்ளது என்ற கருத்து விமர்சன முறையில் எடுத்துக்கூறப்படுகிறது.

மனித உரிமைகள் பேரவையால் ஏற்படுத்தப்பட்டுவரும் மறைமுக அழுத்தம், இந்தியப் பிரதமர் நரேந்திரமோடிக்கு தமிழ்க் கட்சிகளால் அனுப்பிவைக்கப்பட்ட கடிதம். கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி (24.2.2022) ஜனாதிபதி மாளிகைக்கு முன்பாக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் காணி அபகரிப்புக்கு எதிராக நடத்திய போராட்டம், நாட்டின் இறுக்கமான பொருளாதார நெருக்கடிகள் என்பவற்றை சமாளிக்கும் விதத்தில் இந்த அழைப்பை ஜனாதிபதி கூட்டமைப்புக்கு விடுத்திருக்கலாம் என்பது பொதுவான கருத்தாக கருதப்படுகிறது.

ஆனால், இந்த சந்திப்புத் தொடர்பில் புலம்பெயர் அமைப்புகள், தாயகப் பற்றாளர்கள், கூட்டமைப்பின் பங்காளி கட்சியைச் சேர்ந்தவர்கள் மற்றும் இன்னும் தமிழ்த் தேசியத்தை முன்னிலைப்படுத்தும் கட்சியை சார்ந்தவர்கள் திருப்தியான அல்லது ஆரவமான தமது சமிக்ஞையை காட்டவில்லை என்றே கறலாம். காரணம். அரசுடனான பேச்சுவார்த்தை என்பது வெறும் ஏமாற்று நாடகமாகவும் காலம் கடத்தும் செப்படி வித்தையாகவும் இருப்பதனால் இந்த வெறுப்பை அல்லது எதிர்ப்பை தெரிவிப்பதாக கூறப்படுகிறது.

நடைபெறவுள்ள பேச்சுவார்த்தை தொடர்பில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், கூட்டமைபின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு அண்மையில் கடிதமொன்ற எழுதியிருந்தார். அக்கடிதத்தில் ஜனாதிபதியுடனான பேச்சுவார்த்தைக்கு நாம் அவசரப்படவேண்டியதில்லை. தற்போதைய சூழலில் ஏற்புட்டுள்ள உள்ளூர், சர்வதேச நெருக்கடிகளை தவிர்த்துக்கொள்வதற்காகவே பேச்சுவார்த்தைக்கான அழைப்பு ஜனாதிபதியால் விடுக்கப்பட்டுள்ளது ஆகவே, சந்தித்து ஏமாறவேண்டாம் என்ற அவநம்பிக்கையோடு இக்கடிதத்தை அனுப்பிருக்கிறார் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்.

இதேவேளை, புலம்பெயர் சமூகத்தின் சார்பில் பிரித்தானியாவிலிருந்து ஓர் அமைப்பு தமது கருத்தை பதிவு செய்தபோது கூட்டமைப்பினர் ஜனாதிபதியை சந்திப்பதற்கு முன்பு

★ ஜனாதிபதி என்ன நிகழ்ச்சி நிரலின்கீழ் பேச அழைக்கிறார் என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

★ ஜனாதிபதி பதவியேற்ற காலத்திலிருந்து மேற்கொண்டுவரும் காணி சுவீகரிப்பு, பௌத்த சின்னங்களின் விஸ்தரிப்புகளை உடன் நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

★ பல வருடங்களாக அரசியல் கைதிகளாக அடைக்கப்பட்டிருக்கும் கைதிகளை எந்தவித நிபந்தனையுமின்றி விடுவிக்க வேண்டும்.

★ வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் பிரச்சினைக்கு உடன் தீர்வு வழங்க செயற்பட வேண்டும்.

★ பயங்கரவாதத் தடைச்சட்டம் உடன் நீக்கப்பட வேண்டும்.

★ 13ஆவது திருத்தம் முழுமையாக அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

★ காத்திரமான அரசியல் தீர்வு கொண்டுவரப்பட வேண்டும்.

இவற்றை நடை முறைப்படுத்தும் உறுதிமொழியை ஜனாதிபதி தருவதாக நம்பினால் பேச்சுவார்த்தைக்கு செல்லுங்கள். இல்லையேல், இலங்கை ஜனாதிபதி கோட்டாபயவின் பொறிக்குள் விழுந்துவிட வேண்டாம். அழைப்பை மறுபரிசீலனை செய்யுங்கள் என்று அந்த அமைப்பு தமது கருத்தை பதிவு செய்திருப்பதோடு, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பை ஏதேதோ காரணங்காட்டி இழுத்தடிப்பு செய்துவிட்டு ஜனாதிபதியின் அழைப்பை கனம்பண்ணி விழுந்தடித்து ஓடவேண்டுமா? என கேள்வி எழுப்பியிருக்கிறது அந்த அமைப்பு.

ஆனால், இது தொடர்பாக கருத்துத் தெரிவித்திருக்கும் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் பேச்சுவார்த்தைக்கான கதவு திறக்கப்படும்போது அச்சந்தர்ப்பத்தினை கை நழுவ விட்டுவிட முடியாது. தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வினை அமுத்தமாக வலியுறுத்துவதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம்.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் நடைபெறுகின்ற முதலாவது பேச்சுவார்த்தையாக இது அமையப்போகிறது. நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. சந்தர்ப்பத்தை நாம் பயன்படுத்திக்கொள்வதில் எந்தவித தவறுமில்லை என சம்பந்தன் தமது பக்க கருத்தை நியாயப்படுத்தியுள்ளார்.

இது தொடர்பில் பங்காளிக் கட்சியான புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தனுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு, கூட்டமைப்புக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பு தொடர்பில் விசனங்களும் விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டு வருகிறதே இதுபற்றி தங்கள் கருத்தென்ன என்று வினவியபோது அவர் தெரிவித்த கருத்து.

மக்களின் அபிப்பிராயத்தில் நியாயம் இருக்கலாம். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். தமிழ்த் தலைமைகளுடன் பேசுவதற்கு ஜனாதிபதி கடந்த இரண்டு வருடங்களாக அரவம் காட்டவில்லை என்பது உண்மைதான். ஆனால், தற்போது பேச அழைத்திருக்கிறார் என்றால் அவர் தானாக முன்வந்து பேச அழைக்கவில்லை. சூழ்நிலை அவ்வாறு அமைக்கப்படுருக்கிறது.

தங்களுடனான பேச்சுவார்த்தைக்கு நேரம் ஒதுக்கித் தாருங்கள் என கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஏலவே கடிதம் எழுதியிருக்கிறார். இதுதவிர, இன்னொரு முக்கிய விடயம் தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் அண்மையில் (24.02.2022) ஜனாதிபதி மாளிகைக்கு முன்பாக ஆர்ப்பாட்டமொன்றை நடத்திநோம். அந்த ஆர்ப்பாட்டத்தின்போது ஜனாதிபதியை சந்திக்கவேண்டுமென்ற கோரிக்கையை நாம் முன்வைத்திருந்தோம்.

இவை ஒருபுறமிருக்க, சர்வதேசம் என்ன கறுகிறது? இலங்கை ஜனாதிபதிக்கு நாம் அழுத்தம் கொடுத்துவருகிறோம். தமிழ்க் கட்சிகளுடன் பேசி பிரச்சினைக்குத் தீர்வு காணுங்கள் என்று. அதேவேளை, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாங்கள் முன்வந்து இலங்கைப் பிரச்சினையை பேசி முடிப்போம் என்று சர்வதேசமோ இந்தியாவோ கூறவில்லை. இதுதான் உண்மை. ஆனால், அவர்களுடைய அழுத்தம் காரணமாகவே ஜனாதிபதி தற்போது தமிழ்த் தரப்பினருடன் பேச முன்வந்துள்ளார் என்பது பகிரங்கமாக தெரிந்த விடயம்.

மிக நீண்டகாலத்துக்குப் பின் அண்மையில் இந்தியா, இலங்கை அரசாங்கத்தை நோக்கி ஓர் அழுத்தத்தைப் பிரயோகித்துள்ளது. 13அவது திருத்தத்துக்கப்பால் சென்று தமிழ் மக்களுடைய பிரச்சினைக்குத் தீர்வு காணுங்கள் என்று இவ்வாறு ஒரு சாதகமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கும் நிலையில் அதை நாம் தவற விட முடியாது.

தமிழ் மக்களுடைய பிரச்சினை தீர்க்கப்படவேண்டுமாயின் இலங்கை ஜனாதிபதியுடனையே நாம் பேசியாக வேண்டும். இதுதான் யதார்த்தம். ஜனாதிபதி எப்போது பலவீனப்பட்டிருக்கிறாரோ அப்போதுதான் நாம் பேசமுடியும். இப்பொழுது அந்த நிலை ஏற்பட்டுள்ளது. அவர் தற்போது பலவீனப்பட்டிருக்கிறார். நாங்கள் பலப்பட்டிருக்கிறோம். அதுதான் பேச உடன்பட்டோம். என சித்தார்த்தன் தனது கருத்தை தெரிவித்தார்.

சித்தார்த்தனும் கூட்டமைப்பின் தலைமைகளும் இத்தகைய கருத்துகளை கொண்டிருந்தாலும் பங்காளிக் கட்சியான ரெலோவின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தரப்பினர் திட்டவட்டமாக தாம் இச்சந்திப்பில் கலந்துகொள்ளமாட்டோம் எனவும் ஒத்திவைக்கப்பட்டுள்ள மார்ச் 25ஆம் திகதி சந்திப்பில் கலந்துகொள்வதா, இல்லையா என்பது பற்றி ரெலோவின் மத்திய குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்படுமென அடித்துக் கூறியள்ளனர். ரெலோ அமைப்பு மிக நீண்டகாலமாகவே கூட்டமைப்புடன் ஒருமித்து பயணித்துவரும் ஒருகட்சி என்பது கவனத்தில் கொள்ளப்படவேண்டும்.

இவற்றையெல்லாம்றையும் ஆராய்ந்து பார்க்கிறபோது சந்திப்பு தொடர்பில் கூட்டமைப்பினருக்கிடையில் ஒருமித்த கருத்து உண்டாக்கப்படவில்லை என்பது மட்டுமன்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கிடையில் நேரெரான்த கருத்துகள் இல்லை என்பது புலனாகிறது. இதற்குரிய வரலாற்றுக் காரணங்கள் பலவுள்ளன என்பது மறைமுகமாக உணர்த்தப்படுகிற விடயமாக இருக்கலாம். உதாரணமாக,

இலங்கை சுதந்தரமடைந்த காலத்திலிருந்து இலங்கை அரசாங்கங்களுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள், ஒப்பந்தங்கள், வட்டமேசை மாநாடுகள், புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், அரசியல் மயப்பட்ட பேச்சுவார்த்தைகள், சந்திப்புகள் ஆகிய எவையுமே முற்பயனும் தரவில்லை; பிற்பயனும் தரவில்லை என்பதுதான் உண்மை. இந்த யதார்த்தமே மக்களுக்கும் அரசியல் தலைமைகளுக்கும் பேச்சுவார்த்தை தொடர்பான வெறுப்பையும் விரக்தியையும் தந்து நிற்பதற்கான காரணங்களாக இருக்கலாம்.

2011ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்துடன் கூட்டமைப்பு 18 தடவைகள் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருக்கிறது. முடிவில் என்ன நடந்தது? ஆதியும் காணாமல் அந்தமும் காணாமல் அரசாங்கம் திட்டமிட்ட முறையில் பேச்சுவார்த்தையை தானாகவே முறித்துக்கொண்டது.

யுத்தம் முடிவுற்ற காலத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பாங் - கீ-மூனும் சேர்ந்து வெளியிட்ட அறிக்கையில் தமிழ் மக்களின் நீண்டகால பிரச்சினைக்கு முறையான தீர்வை வழங்குவோம் என இலங்கை அரசாங்கம் அளித்த வாக்குறுதிக்கு என்ன நடந்தது?.

1983ஆம் ஆண்டு இடம்பெற்ற திம்பு பேச்சுவார்த்தை, 1989ஆம் அண்டு ஜனாதிபதி பிரேமதாஸ காலத்தில் வரையப்பட்டமங்கள முனசிங்க தீர்வு ஆலோசனைகள், 2000 ஆம் ஆண்டு சந்திரிக்கா அம்மையார் காலத்தில் நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்ட தீர்வுப்பொதி, 2006ஆம் ஆண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட சர்வகட்சி பிரதிநிதிகள் மற்றும் நிபுணர் குழு நியமனமும் அதன் சிபார்க்களும். 2016ஆம் ஆண்டு ஜனாதிபதி மைத்திபால சிறிசேன நல்லாட்சி கால அரசியல் நிர்ணய சபை விவகாரங்கள் - இவை அனைத்துக்கும் என்ன நடந்தது?

இதற்கப்பால் விடுதலைப் புலிகள் காலத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் ஆகியோருக்கிடையில் நடந்த உடன்படிக்கை, 2003ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற பிரான்ஸ், சுவீஸ், நோர்வே மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளில் இடம்பெற்ற சமாதான பேச்சுவார்த்தைகள், எல்லாமே அர்த்தமற்றவகையில் இத்துப்போனது. இந்தத் தோல்விகள் பற்றிய மக்களின் அவநம்பிக்கைகளே பேச்சுவார்த்தையென்று உச்சரிக்கப்படும் சந்தர்ப்பங்களிலெல்லாம் மக்கள் வெறுப்படைவதும் விரக்தியுறுவதும் அரசியல் தலைமைகள் நம்பிக்கை இழப்பதும் வழமையாகிவிட்டது.

தமிழ் மக்களின் பொதுவான எதிர்பார்ப்புகளின் மத்தியில் பேச்சுவார்த்தை என்ற பதம் அருவருப்புக்குரியதாகவும் அவநம்பிக்கையுடையதாகவும் மாறிப்போனமைக்கு கடந்த கால வரலாற்று அனுபவங்களே காரணமாக இருக்கின்றன.

குறிப்பாக, இன்றைய ஆட்சியாளர்களுடனான பேச்சுவார்த்தை தொடர்பில் தமிழ் மக்கள் தங்கள் விசனங்களை வெளிப்படுத்துவதற்கு காரணமாக இருப்பவை ஆட்சியாளர்களின் - குறிப்பாக, ஜனாதிபதிவர்களின் உதாசீனப் போக்கும் சிறுபான்மை சமூகத்தின்மீது அவரால் கட்டவிழ்த்துவிப்படுகிற ஜனநாயகத்தன்மை மீறிய அரசியல் அதிகாரப் பிரயோகங்களுமாகும்.

கடந்த மூன்று வருடங்களாக ஜனாதிபதின் இரானுவமயமாக்கும் போக்குகள், தொல்லியல் அகழ்வாராச்சிகள், வனவிலங்கு பாதுகாப்பு, வனப் பாதுகாப்பு என்ற போர்வையில் தற்போது இம்பெற்றுவரும் காணி சூறையாடல்கள், காணமலாக்கப்பட்போர் விவகாரத்தில் காசினை காட்டாமல் மூழமறைப்புசெய்தல், அரசியல் கைதிகள் விடுதலை விவகாரத்தில் உதாசீனமாக நடந்து கொள்ளல், யுத்த காலத்திலும் அது மௌனித்த காலத்திலும் மரணித்த சிவில் சமூகம் மற்றும் ஊடகத்துறையினரை - குடும்ப உறுப்பினர்களை நினைவுகூருவதை தடுப்பதும் அவர்களை கைதுசெய்வதும், தமிழ் மக்களை அவர்தம் காணிகளில் மீளக்குடியேற விடாது தடுப்பது, கலாசாரு மையங்கள், பௌத்த விஸ்தரிப்புகள், இரானுவ விஸ்தரிப்புகள் என்ற வகையில் குமியிருப்புக் காணிகள் மத ஸ்தலங்களுக்குரிய நிலங்களை கையகப்படுத்தல் என்ற நிகழ்ச்சி நிரல்களை அமுல்படுத்த மேற்கொள்ளும் முயற்சிகள் அரசாங்கத்தின் அபாயடித்தனங்களை படம்பிடித்து காட்டுவனவாக இருக்கின்றன என்று எடுத்துக்கறப்படுகிறது.

இவை அனைத்துக்கும் அப்பால் தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் பிரச்சினைக்குத் தீர்வுகானும் வழிமுறைகளை ஏற்றுக்கொள்ள மறுப்பதும் உதாசீனப்படுத்துவதும் யுத்தகால குற்றங்கள் மனித உரிமை மீறல்கள் என்பவற்றை ஏற்றுக்கொண்டு பொறுப்புக்கூறும் விடயத்தை ஏற்றுக்கொள்ள மறுப்பதும் போன்ற பல்வேறு செயலாட்டங்கள் தற்போதைய அரசாங்கத்தின்மீது சர்வதேச சமூகத்துக்கும் உள்ளூர் மக்களுக்கும் நம்பிக்கைக் குறைவை ஏற்படுத்தியிருப்பதனாலேயே பேச்சுவார்த்தை என்ற வாசகம் தமிழ் மக்களுக்கு புளிச்சப்போன வார்த்தைகளாக காணப்படுகின்றன.

அண்மையில் இந்தியவுக்கு சென்று நாடு திரும்பியுள்ள வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகானும் வகையில் ஜனாதிபதி தமிழ்க் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவார் என்று கூறியிருப்பதுடன், இந்தியப் பிரதமருக்கு கடிதம் அனுப்பலாம். அதைவிட எங்கள் பிரச்சினையை எங்கள் நாட்டிலேயே தீர்த்துக்கொள்ள வேண்டும் என அவர் கூறியிருப்பது எந்தளவுக்கு சாத்தியமானது என்பதை சந்திப்பின் முடிவில்தான் தெரிந்துகொள்ள முடியும்.

கூட்டமைப்புக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பு தொடர்பில் பல்வேறு கருத்துகள், விமர்சனங்கள், விசனங்கள், முரண்பாடுகள் வெளிப்படுத்தி காட்டப்பட்டாலும் காலத்தின் நியதி கருதி கூட்டமைப்புக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பு அவசியமானதாக ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் அச்சந்திப்பு பயனற்றதாக போகுமாயின், அது நீண்டகால அபகீர்த்தியை உண்டாக்கிவிடும் என்பதை சந்திப்பாளர்கள் புரிந்துகொள்ள வேண்டும். அதை மாற்றும் வகையில் ராஜதந்திரர்களை கையாள்வதில்தான் தமிழ் மக்கள் மத்தியில் எதிர்கால நம்பிக்கைகளை ஊட்ட முடியும்.

- திருமலை நவம் -

பசறை பஸ் விபத்தினால் பரிதவிக்கும் குடும்பங்கள்

அனர்த்தம் இடம்பெற்று இன்றுடன் ஒருவருடம் பூர்த்தியாகின்ற நிலையில் பாதிக்கப்பட்டோருக்கு நீதி நிலைநாட்டப்பட்டதா?

எஸ்.கோகிலவாணி

அழுகையில் தொடங்கி அழுகையில் முடிவது தான் வாழ்க்கை. முதல் அழுகை எப்படி வாழப்போகிறோம் என்பதையும் கடைசி அழுகை எப்படி வாழ்ந்தோம் என்பதையும் குறிக்கிறது. மண்ணில் இறக்கப் போகிறோமே தவிர மீண்டும் மண்ணில் பிறப்பதில்லை. எனவே வாழும்போது அனைவருடனும் நட்பாக வாழ கற்றுக்கொண்டே வாழ்க்கையை வாழ்ந்துவிட வேண்டும்

சட்டியிலிருந்து நெருப்பில் விழுந்த கதையாக பதுளை பசறை 13ஆம் கட்டை பகுதியில் கடந்த வருடம் 20ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.40மணியளவில் இடம்பெற்ற வேகக்கட்டுப்பாட்டை மீறி 200அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளான பஸ் குறித்த விபத்துச் செய்தி நாம் அனைவரும் மறந்திருக்கும் இந்நிலையில், குறித்த குடும்பங்களுக்கு அதன் இழப்பு என்பது எவராலும் ஈடுசெய்ய முடியாதது.

இந்த விபத்து நடந்து இன்றுடன் (20.03.2021) ஒரு வருடமாகியுள்ள நிலையில் பொறுப்புள்ள தரப்பினரின் நடவடிக்கைகள் குறித்து மீட்டிப்பார்ப்பதும் அவசியமானதாகும்.

"ஸ்கூல் போரம்போது வீட்டுக் சுவரில் மாட்டியிருக்கிற அம்மா அப்பாவோட போட்டோவுக்கு முன்னால போய் 'நான், தங்கச்சி, தம்பி மூணுபேரும் நல்லா படிக்க உதவி செய்ங்க அம்மா, அம்மம்மாவும் தாத்தாவும் நல்லா இருக்கணும். நான் ஸ்கொலஷிப்ல பாஸ் ஆகணும் அதுக்கு உதவி செய்ங்க அம்மா"னு வேண்டிக்கிட்டே ஸ்கூலுக்கு போவேன். இப்ப(17.03.2022) காலையிலேயே அம்மா அப்பாவின் கல்லறைக்கு போய் துப்பரவாக்கிட்டு கல்லற கட்டிட்டு வந்தோம்" என தனது பெற்றோரை இழந்த பியூஜினியா தெரிவித்தார். மேலும் எங்க மாமாவும் எங்களுக்கு வேணுங்கறத வாங்கி தருவாரு. பாதரும் சாச குடுப்பாரு அவருட்டு உதவியாலதா நாங்க படிக்கிறம்"

இவ்வாறு தெரிவித்தார் பஸ் விபத்தின்போது உயிரிழந்த லுணுகலை, அடாவத்தை தோட்ட அந்தோனி நோவா- பெடிக்க மெரோனா தம்பதிகளின் மூத்தபிள்ளை.

பதுளை வைத்தியசாலையில் கண்சிகிச்சை மேற்கொள்ள சென்ற குறித்த தாயை காலன் காவு வாங்கியது குறித்து அப்போது அவர்கள் மூவருக்கும் பெரிதாக தெரியவில்லை. பெற்றோரை இழந்த இவர்களுக்கு இப்போது பெரிதாக வலிகள் தெரியாது. ஆனால் நாளை அவர்களின் அப்பத்தாவும் இறந்துபோவார். அந்நேரம் இவர்களின் உலகம் இருண்டு போகலாம்.

விபத்துக்குள்ளான பஸ்லில் பயணித்தவர்களில் 14பேர் மரணமடைந்திருந்த அதேவேளை சுமார் 47பேர் வரை படுகாயமடைந்திருந்தனர். இவர்களில் நிரந்தர ஊனமுற்றவர்கள், பெற்றோரை இழந்தவர்கள், அநாதைகளாக்கப்பட்டவர்கள் என பலர் தற்போதும் வாழ்ந்து வருகின்றனர்.

குறித்த 13ஆம் கட்டைப் பகுதியில் பாரிய கற்பாறை ஒன்று சரிந்து விழுந்து 06 மாதங்களுக்கு மேலாகியும் அது அகற்றப்படாதிருந்துள்ளது. குறித்த பாதையானது இரு ஒழுங்கை கொண்ட பாதையாயிலும் பெரிய பாறாங்கல் சரிந்திருந்தமையினால் ஒரு ஒழுங்கையில் மாத்திரமே வாகனங்கள் பயணிக்க முடியுமாக இருந்தது. இந்நிலையில் எதிர் திசையில் பயணித்த டிப்பர் ரக வாகனம் ஒன்று குறித்த கற்பாறை சரிந்த இடத்தை கடக்க முற்பட்ட வேளையில், எதிர்த்திசையில் வந்த அந்த பஸ் வேகத்துடன் அந்த திசையில் பெரிய பள்ளம் ஒன்று இருப்பதையும் ஒற்றை ஒழுங்கைக்குள் இரு பெரிய வாகனங்கள் பயணிக்க முடியாதது குறித்து தெரிந்தும் குறித்த டிப்பரை கடப்பதற்கு முயன்று சாரதியின் கட்டுப்பாட்டை மீறி பள்ளத்துக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானது. குறித்த விபத்தில் பலரின் உடல்கள் சிதைந்திருந்தமையினால் அடையாளம் காணக்கூட முடியாத நிலையில் இருந்தன.

சாரதியின் கவனக்குறைவாலும் போட்டி மனப்பான்மையினாலும் அதீத மெத்தனப்போக்காலுமே குறித்த விபத்து சம்பவம் ஏற்பட்டுள்ளது. ஆனால் அதிர்ஷ்டவசமான பஸ் சாரதியும் நடத்துனரும் உயிர்த்தப்பியிருந்தனர். பின்னர் சில மாதங்கள் கடந்த நிலையில் குறித்த பஸ்லின் சாரதி உயிரிழந்துள்ளார். இவரினால் காவுகொள்ளப்பட்ட அப்பாவி மக்களின் பூதவுடல்கள் நாட்டு மக்களின் கண்ணீருக்கு

மத்தியிலும் பசறை பிரதேச மக்களின் அழுகைக்கு மத்தியிலும் நல்லடக்கம் செய்யப்பட்டது. அன்றைய தினம் பசறை வீதிகள், கடைகள் நேரோம் வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டு துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

குறித்த வீதியில் 06 மாதங்களாக வீழ்ந்து கிடந்த பாறாங்கல்லை அகற்றுவதற்கு வீதி அதிகார சபையினரோ போக்குவரத்துத்துறையினரோ முன்வரவில்லை. குறித்த பாறாங்கல் அகற்றப்பட்டிருந்தால் ஒருவேளை விபத்து தவிர்க்கப்பட்டிருக்கலாம்.

மேலும் குறித்த வீதி புனரமைப்புப் பணிகளை பொறுப்பேற்றிருக்கும் தரப்பினர் அந்த இடத்ில் அபாய சமிக்ஞைகளை பொருத்தியிருக்க வேண்டும். அல்லது காட்சிப்படுத்தியிருக்க வேண்டும். அவ்விடத்தில் அதற்கான எந்த ஆதாரங்களும் காணப்படவில்லை. பின்னரே சமிக்ஞை விளக்குகளை பொருத்தியிருந்தனர்.

"கவர்மன்டாக இன்னு எங்களுக்கு எந்தவொரு நஷ்டஈடும் கெடக்கல்ல. எனது வருமானத்துலதான் இந்த குடும்பத்த நடத்துறேன். எங்களுக்கு ரெண்டு பிள்ளைங்க. ஸ்கூல் செலவு, வீட்டுசெலவு, அவர்ட அம்மா அப்பாவும் என்கூடதா இருக்காங்க. அவங்க மருந்து செலவுன்னு எல்லாமே நான்தா பாக்குறன். இன்னு எனக்கு அவர்ட 'தெத் செடிபிகேட்' (மரண சான்றிதழ்) கூட கெடக்கல்ல. அதனால என்னால வேறு எந்த தேவைகளையு செஞ்சிக்க முடியாம இருக்கு பேங்குக்கு போனாலும் அவர்ட தெத் செடிபிகேட்தா வேணுன்னு கேக்குறாங்க. நானு GS (கிராமசேவை அதிகாரி) கிட்டபோய் இது சம்பந்தமா கதச்சன். ஆனா இன்னும் எதுவு செஞ்சிக்க ஏலாம இருக்கு

எங்கிடன் ஆகின பஸ் ஓனர் சம்பவம் நடந்து ஒருமாச காலத்துக்குள்ள வந்து 15,000ரூபா காச கொடுத்துட்டு போனார். அவனோதான். என் அஸ்பன்ட இழப்பு எனக்கும் என் ரெண்டு புள்ளங்களுக்கு தான். அத யாராலு ஈடுசெய்ய முடியாது" என்றார்.

காலை 06.15 மணியிருக்கும். வீட்டுல இருந்து மீட்டிங் ஒன்னுக்காக போனாரு. ஆனா திரும்பி வரக்குள்ள பொணமா தா வந்தாரு. இத நான் கொஞ்சமு எதிர்பார்க்கல்ல.

அவரு செத்த நேரம் போட்ட சம்பளத்த கூட நான் இன்னு எடுக்கல. 19ஆம் திகதி சம்பளம் போட்டாங்க. ஆனா 20ஆம் திகதி அவர் உயிருடன் இல்ல. பேங்க் காட்ல அவரு பேஸலா இருந்துச்சி. அவரோட அதுவு போய்ருச்சி. இவரு இல்லாதனால வெளில தேவைகளுக்கு எங்கயு போக கஷ்டமா இருக்கு, மகன கிளாஸ் கூட்டிட்டு போகணும். அபார் பண்ணிருக்க ஆட்டோவும் சரியான நேரத்துக்கு வாரதில்ல. இப்படி தான் எங்க வாழ்க்க ஓடிட்டு இருக்கு

இந்த ஒரு வருஷத்துக்குள்ள நானும் என் வலிகள எல்லாம் மறந்து குடும்பத்துக்காக உழைச்சிக்கிட்டிருக்கேன்" என்றார் சம்பவத்தில் உயிரிழந்த மடுல்சீமை தமிழ் மகா வித்தியாலய ஆசிரியர் பெருமாள் முரளிதரனின் மனைவி.

"நண்பர்களுடனும் நெருங்கிய உறவினர்களுடனும் பயணம் செய்வதெல்லாம் ஒரு நாளும் சலித்துபோகாது. இது காலத்தாலும் அழியாத பொக்கிஷ நினைவுகள். சம்பவ தினம் நானும் எனது நண்பர் முரளிதரனும் ஒன்றாகவே பஸ்லில் சாரனர் கூட்டத்துக்காக போனோம். நான் பஸ்ல தூங்கிட்டன். ஏதோ ஓர் இடத்தில் பஸ் சாய்வது போல எனக்கு தெரிஞ்சது. முழிச்சி பாத்தா பஸ்ல இருந்த எல்லாரு 'காப்பாத்துங்க காப்பாத்துங்க' னு கத்திக்கதறிக்கிட்டு இருந்தாங்க. என் கை பஸ் கம்பிக்குள்ள இறுகிக்கிச்சி. நானும் 'என்ன காப்பாத்துங்க'னு சத்தவச்சன். அங்க இருந்தவங்க தண்ணீ கொண்டுவந்து குடுத்துட்டு பொறுத்துக்கங்க ஐயா. பஸ்ல 04 கீட்ட கழட்டி தான் உங்கள காப்பாத்தணு' னு சொன்னாங்க. கொஞ்ச நேரத்துல என்ன தூக்கும்போது எனக்கு கீழ ரெண்டு பேத்துட சடலம் இருந்துச்சி. மரணத்த என் கண் முன்னாடி காட்டி விட்டு எமன் போயிருக்கான். இப்ப நெனச்சாலும் மெய் சிலிர்க்குது"

விபத்தில் பெற்றோரை இழந்த பிள்ளைகள்

இது பஸ்லில் முரளிதரன் ஆசிரியருடன் ஒன்றாக பயணித்த பழனிவேல் பாரிநேசன் - ஸ்ரீகணேசா தமிழ் வித்தியாலய ஆசிரியரின் அனுபவப்பகிர்வு.

பணத்தை பார்த்துவிட்டால் பாசத்தை மறந்துவிடும் உறவுகளுக்கு மத்தியில், பேரப்பிள்ளைகளை தானே வளர்த்து ஆளாக்க வேண்டும் எனக்கூறி பலரும் இவர்களைதூக்கெடுக்க முன்வந்தபோதிலும் அவர்களிடம் கொடுக்கவுது. இந்த தள்ளாடும் வயதிலும் பேரப்பிள்ளைகளுடன் காலம் கழியட்டும் அவர்களுக்கு நல்ல எதிர்காலம் கிடைக்க வேண்டும் என வாழ்ந்து வருகின்றனர் பெனடிக் மெரோனாவின் பெற்றோர். "பதுளை சேர்ச் மூலமா எங்களுக்கு மாசமாசம் 30,000 ரூபா கெடக்கும். அதுல தான் வீட்டு கூலி கட்டி இந்த புள்ளங்கள ஸ்கூலுக்கு அனுப்புறன். சாப்பாடு, வீட்டு தேவைகளையு பாத்துக்கிறன். எங்களுக்கு சொந்தமா வீடு ஒன்று இல்ல. கூலி வீட்டுல தான் இருக்கம். எனது மகளும் மருமகனும் தான் செத்துபோனது. 'மரண சாத்திக்க' இன்னு கெடக்கல. நான் உயிரோட இருக்கும்போதே இதல்லா எடுத்து வச்சிறணு. நானு என் புள்ளகிட்ட போய்டா இந்த புள்ளங்க கஷ்டபடுங்க. பாவம்மா இந்த புள்ளங்க. அவங்க அம்மா அப்பாவ பெருசா தெரியாது. சின்ன வயசுலருந்தே நான் தான் அதுகள வளக்குறன். வீட்டுல புள்ளங்கள வச்சி எல்லாரு அழுதுட்டு இருக்கம். இதுக மூணும் விளையாடிட்டு இருந்துகிச்சுங்க. இதுகள எப்படிம்மா நான் மத்தவங்க கேக்குறாங்கணு குடுக்குறது. அதுக தவிச்சி போயிறாதுகளாம்மா? கோட்ல வழக்கு போகலுது. இன்னவரக்கும் 'மரண சாத்திக்க' கெடக்க. அதுக்காக நானும் பசற பொலிஸுக்கு அலையாத அலைச்சலே இல்லம்மா. அது மட்டும் வாங்கி குடுங்கம்மா"னு கேட்டுக்கிட்டார் உயிரிழந்த பெனடிக் மெரோனாவின் தாய்.

"நானு எனது ரெண்டு பிள்ளைகளும் வாடக வீட்டுலதான் இருக்குறம். எனக்கு எந்த நிரந்தர வேலயும் இல்ல. மேலதிக வருமானமோ இவர்ட குடும்பத்தோட உதவியோ எதுவும் கெடக்கிறது இல்ல. என் அஸ்பன்ட்க்கு சொந்தமான வேண்ட ஒன்னு இருக்கு. அதுல வீடு கட்டிகொள்ள பெரியபாடு படுறன். இப்ப அதுக்கான வசதி எதும் எனக்கு இல்லடா. 'பேஸ்மண்ட்' (அத்திவாரம்) போட்டு குடுத்தா வீட்ட கட்டித் தரேன்னு நிவாச அதிகாரிகளு வேல்ட் விஷன்ல இருந்து வந்துருந்தாங்க அவங்களும் GS ல இருந்தும் வந்துருந்தாங்க. போன கெழம கூட வந்து வீட்டுக்கு அடிக்கல் நாட்டிட்டு போனாங்க. இப்ப அந்த வேலய செஞ்சிக்க என்கிட்ட காச இல்ல அதனால நானு பேசாம இருக்கன்.

நான் மருந்து போடும் கவர்கள் ஒட்டி பக்கத்துல உள்ள பாமசி, ஒஸ்பிட்டல்களுக்கு குடுப்பன். அதுல மாசம் ஒரு வருமானம் வரும். அதுதான் குடும்பம் நடத்திக்கிட்டு இருக்கன்.

இவருக்கு எங்க சின்ன மகன ரோம்ப புடிக்கும். அவர்கிட்ட அப்பா பத்தி கேட்டா 'அப்பாவை பெட்டுல (BAD) வச்சி கட்டி தூக்கிட்டு போய்ட்டாங்க அப்பா பொட்டோவுல இருக்காரு'னு தான் சொல்லுவாரு. மூத்த மகளுக்கு கொஞ்சம் அவங்க அப்பாவ தெரியும். ஆனா சின்னவருக்கு பெருசா அவரு இப்ப ஞாபகிருக்காதுனு நெனக்கிறன்.

'தெத் செடிபிகட்' கேட்டு பதற பொலிஸிக்கு போனப்போ அவங்க, விபத்துக்கு காரணம் கேக்குறாங்க. விபத்து யாருனாலு நடந்ததுனு தெரியல அதனால இப்ப எங்களால எதுவு செய்ய முடியாதுனு சொல்லிட்டாங்க.

என்ன கண்கலங்க வச்சிட்டு, தனியா விட்டுட்டு போய்ட்டாருன்றுதுக்காக அவரு நான் வெறுத்துட்டு போகமுடியாது. இன்னும் அதிகமாக நேசிச்சிட்டே இருப்பேன்" என்றார் விபத்தில் பலியான புகைப்படக் கலைஞரின் மனைவி.

இவ்வாறான நிலையிலேயே தற்போது பல குடும்பங்கள் வசித்து வருகின்றன. அதிகாரிகளின் அசமந்தப்போக்கால் இன்று பல குடும்பங்கள் நிர்க்கதி இன்றி தவித்துக்கொண்டிருக்கின்றன. இழப்பு என்பது ஒருவருக்கே சொந்தம். முழுஊரட்டையும் உறையவைத்த இச்சம்பவம் குறித்து பொறப்புக்கூற வேண்டியவர்களின் மனதை ஒருவருடம் ஆகியும் உறைய வைக்கவில்லை.

சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் விளவும் போது அவர்கள் பொறுப்பற்ற பதிலையே தெரிவிக்கின்றனர். எனவே இவ்வாறான இழப்பை எமது குடும்பம் சந்தித்தால் நாம் என்ன முடிவுகளை எடுப்போமோ அந்த நிலையில் நின்று பாதிக்கப்பட்ட குறித்த குடும்பத்தினருக்கு உதவி முன்வாங்கங்கள். ஏதோ ஒருவருட பூர்த்தி என்பது கேக் வெட்டி கொண்டாடும் கொண்டாட்டம் அல்ல என தெரிவித்து பொறுப்பற்ற வகையில் பதில் கூறாமல், பாதிக்கப்பட்டவர்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்க முன்வர வேண்டும் என்பதே தாழ்மையான வேண்டுகோளாகும்.

கணவனை இழந்த பலரும், பெற்றோரை இழந்த பிள்ளைகளுமாக பலர் சமூகத்தில் வாழும்போது குறைந்தபட்சம் அவர்களுக்கான வாழ்வாதாரத்தையும் வீட்டுத் திட்டத்தையுமாவது செய்து கொடுத்தால் இனிவரும் காலத்தை அவர்கள் கடத்திவிட முடியும்.

மேலும் சாரதிகளுக்கென சட்டவிதிமுறைகள் உண்டு. அதை குறித்த பஸ்லின் சாரதி மதிக்கவில்லை. எத்தனை சாரதிகள் குறித்த விதிமுறைகளை பின்பற்றுகின்றார்கள்?. வீதி விபத்துகளில் அதிக உயிர்களை

"பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் செய்யப்பட்டுள்ளன. இதற்காக ஒவ்வொரு வருடமும் 'அவார்ட் பங்சனா' செய்யமுடியும்? வீடுகளும் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன. எல்லா தந்தாங்க திரும்ப எதுவும் தேவையில்ல னு சொற்றவங்க யாராவது நாட்ல இருக்கங்களா? இனி அரசியல்வாதிகள் தான் இதனை பார்க்கவேண்டும்" - ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மில்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும் பிரதமரின் இணைப்புச் செயலாளருமான செந்தில் தொண்டமானிடம் தொடர்புகொண்டு கேட்டபோது அவர் தனது செயலாளரிடம் கேட்குமாறு தெரிவித்தார்.

"சம்பவ தினத்தன்று குறித்த இடத்துக்கு சென்று பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் செய்துகொடுக்கப்பட்டுள்ளன. மேலும் சம்பவத்தின் பிறகு எவரும் தன்னிடம் வந்து எந்த உதவிகளையும் கேட்கவில்லை. அவ்வாறு தன்னிடம் கேட்கும் பட்சத்தில் அவர்களுக்கு தான் உதவிசெய்ய தயாராக இருப்பதாக செந்தில் தொண்டமான் தெரிவித்ததாக" ஊடக செயலாளர் தெரிவித்தார்.

காவுகொள்ளும் நாடாக இலங்கையும் பெயரிடப்பட்டுள்ளது. நாளொன்றுக்கு குறைந்தது 10 பேரையாவது வாகன விபத்து பலிபெடுக்கின்றது. வளர்ந்து வரும் நாட்டில் சட்டவிதிகளும் அவசியமாக பின்பற்றப்பட வேண்டும்.

இலங்கையில் மலையகப் பிரதேசம் அதிக விபத்துகளை சந்திக்கும் இடமாக காணப்படுகின்றது. இதற்கு புவியியல் அமைவும் ஒரு காரணமாகும். இது இவ்வாறான விபத்துகளுக்கு வழிவகுக்க வாய்ப்புளை ஏற்படுத்தும். காரணம், மலையகத்தில் பல பகுதிகளில் காலை மாலை வேளைகளில் பனி மூட்டம் அதிகமாகவே காணப்படும். இவ்வாறான வேளைகளில் வாகனத்தை செலுத்துவதும் சற்று சிரமமே.

வீதி பாதுகாப்பு குறித்து எவரும் பெரிதாக அலட்டிக் கொள்வது இல்லை. சாரதிகள் தமக்கான பொறுப்பை தட்டிக் கழித்தே செயற்படுகின்றனர். பொதுவாக அதிக வேகம் என்பது ஆபத்தில் கொண்டு போய்விடும். இதுபோலவே பாதசாரிகளுக்கான விதிமுறைகளையும் பின்பற்றுவது கட்டாயமாகும்.

சாரதிகள் தொலைபேசியில் பேசிக்கொண்டு வாகனம் ஓட்டுவது, நினைத்த இடத்தில் பாதைகளை கடக்க முனைவதற்கு வழிவகுப்பது, மது பாவனை, கவனமின்மை, அனுபவமற்ற சாரதிகள், அதிக ஆவேசம், எதிரில் வரும் வாகனம் பற்றிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பின்பற்றாமை, வளைவுகளை கடக்கும் போது கவனமின்மை, போட்டிபோட்டுக்கொண்டு வாகனம் ஓட்டுதல், போக்குவரத்து குறியீடுகளை பின்பற்றாமை, துக்க கலக்கம் போன்றவையும் அதிக விபத்துகளுக்கு காரணமாகும்.

மேலும் அவர்கள் காலநிலையையும் கவனத்தில் எடுப்பதில்லை. மலையக பாதைகள் இன்னும் அபிவிருத்தி செய்யப்படாமல் குண்டும்குழியுமாகவே காணப்படுகின்றன. தோட்ட நிர்வாகங்களே அபிவிருத்தி செய்யவேண்டும் என்ற நிலையிலிருந்து மாறி அரசாங்கமும் வீதி போக்குவரத்து அதிகாரிகளும் கவனம் செலுத்துவது இன்றியமையாதது. விபத்துகள் தொடர்பில் கடுமையான சட்டங்களும் விழிப்புணர்வுகளுமே காலத்தின் தேவையாகவுள்ளது.

ராகுல் காந்திக்கு எதிராக மூத்த தலைவர்கள் போர்க்கொடி

உத்தர பிரதேசம், கோவா, பஞ்சாப் உட்பட ஐந்து மாநில சட்டமன்றத் தேர்தலில் பாரம்பரியம் மிக்க காங்கிரஸ் கட்சி கடும் தோல்வியை சந்தித்துள்ளது. தோல்வியைப் பற்றி ஆராய்வதற்காக கட்சியின் செயற்குழு கூட்டம் சமீபத்தில் டில்லியில் நடந்தது. இதில், கட்சித் தலைவர் பதவியில் இருந்து சோனியா விலகப் போவதாகத் தெரிவித்தார். ஆனால், சோனியாவே நீடிப்பார் என ஒருமனதாக முடிவு எடுக்கப்பட்டது. ராகுலும், பிரியங்காவும் தமது பொறுப்புகளில் இருந்து விலகத் தீர்மானித்தனர். செயற்குழுக் கூட்டம் அதற்குரு அனுமதி கொடுக்கவில்லை.

தேர்தல் தோல்விக்கு பொறுப்பேற்று ஐந்து மாநில காங்., தலைவர்கள் இராஜினாமா செய்ய வேண்டும் என சோனியா உத்தரவிட்டார். தோல்வியைப் பற்றி ஆராய்வதற்காக குழு அமைக்கப்பட்டுள்ளது. காங்கிரஸ் இல்லாத பாரதம் என்பதே மோடியின் கோஷம். ராகுல் இல்லாத காங்கிரஸ் உருவாகப் போகிறதோ என்று அச்சம் உருவாகி உள்ளது.

கடந்த 2014 இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் இருந்து, காங்கிரஸ் தொடர்ந்து பல தேர்தல்களில் தோல்வியை சந்தித்து வருவது, கட்சித் தலைமை, நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஏற்கனவே, கட்சியில் சீர்திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என 23 மூத்த தலைவர்கள், கட்சித் தலைவர் சோனியாவுக்கு 2020இல் கடிதம் எழுதியிருந்தனர். தற்போதைய தோல்விகளுக்குப் பின், அவர்கள் அதை மீண்டும் வலியுறுத்தினர். இதையடுத்து, தேர்தல் தோல்வி குறித்து ஆராய்வதற்காக, கட்சியின் உயர்நிலை அமைப்பான செயற்குழுவின் கூட்டம் சமீபத்தில் நடந்தது.

இதில், உட்கட்சி தேர்தல் நடக்கும் வரை, சோனியாவே கட்சித் தலைவராக தொடருவார் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சோனியா, அவருடைய மகனும், முன்னாள் தலைவருமான ராகுல், மகளும், பொதுச் செயலருமான பிரியங்கா ஆகியோர் கட்சியில் இருந்து விலகியிருக்க தயாராக இருந்ததாகக் கூறப்படுகிறது. ஆனால், அவர்களுக்கு ஆதரவான கட்சியின் மூத்த தலைவர்கள், இதை நிராகரித்தனர்.

இந்தியாவில் நடைபெற்ற 50 தேர்தல்களில் ஒன்பது தேர்தல்களில் மட்டும்தான் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றது. அதுவும் மாநிலக் கட்சிகளின் பலத்தில்தான் காங்கிரஸ் வெற்றி பெற்றது. உத்தரப் பிரதேசத்தில் காங்கிரஸ் பலமான கட்சியாக ஒரு காலத்தில் விளங்கியது. 400க்கும் அதிகமான தொகுதிகளில் இரண்டு தொகுதிகளில் மட்டுமே காங்கிரஸ் வெற்றி பெற்றுள்ளது.

மாநிலத்தில் செல்வாக்குள்ளவர்கள் புதிய கட்சிகளை ஆரம்பித்து காங்கிரஸுக்கு விழுந்த முதல் அடியாக இருந்தது. தொடர் தோல்விகளால் துவண்ட மூத்த தலைவர்கள் பாரதிய ஜனதாவிலும் வேறு கட்சிகளிலும் இணைந்ததும் தோல்விக்குப் பிரதான காரணம்.

தேர்தல் தோல்விக்கு காரணம் தேட., காங்கிரஸ் கட்சியில் தொடர்ந்து பல்வேறு கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்நிலையில், ராகுல் மீது எங்களுக்கு நம்பிக்கையில்லை என, ஜீ- 23 என்று அழைக்கப்படும் 23 மூத்த அதிருப்தி தலைவர்கள் வெளிப்படையாக தெரிவித்துள்ளனர்.

23 அதிருப்தி தலைவர்கள் கூட்டம், டிலியில், மூத்த தலைவர் குலாம் நபி ஆசாத் வீட்டில் நடந்தது. இது, பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அனைவரையும் அரவணைத்து செல்லும், திடமான முடிவுகள் எடுக்கக்கூடிய தலைமை தான் கட்சிக்கு தேவை என, கூட்டத்தின் முடிவில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இக்கூட்டத்தின் நோக்கம் குறித்து சோனியாவிடம், தொலைபேசி வாயிலாக குலாம் நபி ஆசாத் பேசி விளக்கியதாகவும் கூறப்படுகிறது.

"ராகுல் மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை. கட்சி பிளவுபடுவதை நாங்கள் விரும்பவில்லை. பிளவை தாங்க முடியாத அளவுக்கு கட்சி மிகவும் பலவீனமாக உள்ளது.

கட்சி மீண்டும் வலு பெற வேண்டும்; அனைவரும் ஒன்றாக இணைந்து செயல்பட வேண்டும் என்பதே எங்களுடைய விருப்பம். தனக்கு பொய்யான தகவல்களை கூறி வரும் தலைவர்களை, சோனியா ஒதுக்கி வைக்க வேண்டும். அனைத்து தரப்பினரும் ஏற்கக்கூடிய மிகவும் வலுவான தலைமை கட்சிக்கு தேவை. இதற்கு உடனடி நடவடிக்கை எடுக்காவிட்டால், கட்சி மிக மோசமான விளைவுகளை சந்திக்க நேரிடும்" என்றார்.

இந்த பரபரப்பான சூழ்நிலையில் காங்கிரஸ் கட்சியின் 23 அதிருப்தி தலைவர்கள், மூத்த தலைவர் குலாம் நபி ஆசாத்தின் டிலி இல்லத்தில் கூடி ஆலோசனை நடத்தினர். இதில் கபில்சிபல், ஆனந்த்ஷர்மா, பூபிந்தர்சிங் ஹுடா, சசிதரூர், மனிஷங்கர ஐய்யர், அம்பிகா சோனி, மனீஷ் திவாரி உள்ளிட்டோர் பங்கேற்றனர். இந்நிலையில் பூபிந்தர்சிங் ஹுடா, காங். எம்.பி., ராகுலை சந்தித்து பேசினார். 45 நிமிடம் இந்த சந்திப்பு நிகழ்ந்தது. விரைவில் மற்ற அதிருப்தி தலைவர்களும் சந்தித்து பேசலாம் என கூறப்படுகிறது.

ஐந்து மாநிலத் தேர்தலில் பாரதீய ஜனதா வெற்றி பெற்றது. கடந்தகால வெற்றியுடன் ஒப்பிடும்போது குறைந்த தொகுதிகளில் பாரதீய ஜனதா வெற்றி பெற்றது. இதன் காரணமாக நான்கு மாநிலங்களில் ஆட்சியைத் தக்க வைத்துள்ளது. காங்கிரஸ் ஆட்சி செய்த பஞ்சாப்பில் ஆம் ஆத்மி வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தது. இது பாரதீய ஜனதாவுக்குக் கிடைத்த தோல்வியாகும். தேசியக் கட்சிகளை வீழ்த்தி மாநிலக் கட்சிகள் ஆட்சியைப் பிடிப்பது வழமைதான். டிலியில் மையம் கொண்ட ஆம் ஆத்மி, பஞ்சாப்பில் தேசியக் கட்சிகளை வீழ்த்தியது இந்தியத் தேர்தல் வரலாற்றில் புதிய பாய்ச்சலைத் தோற்றியுள்ளது.

எதிர்க்கட்சிகள் தனித்தனியாகப் போட்டியிட்டதே பாரதீய ஜனதாவின் வெற்றிக்கு பிரதான காரணம். ஆய்வாளர்கள் பலமுறை இதனைச் சுட்டிக் காட்டியும் பதவி ஆசை கண்ணைக் கட்டியது. தோல்வியின் பின்னர் காங்கிரஸுடன் இணைந்து செயற்படத் தயாராக இருப்பதாக மம்தா அறிவித்துள்ளார்.

மோடி, அமித் ஷா ஆகியோருக்கு எதிரான வலிமை மிக்க தலைவர் காங்கிரஸில் இல்லை. வலிமை மிக்க புதிய தலைவரைத் தேட வேண்டிய நிலைக்கு காங்கிரஸ் தள்ளப்பட்டுள்ளது. சரத் பவார், மம்தா போன்ற மூத்த தலைவர்கள் ராகுல் காந்தியின் தலைமையை விரும்ப மாட்டார்கள். அனுபவம் மிக்க மூத்த தலைவர் காங்கிரஸ் கட்சிக்குத் தலைமை ஏற்க வேண்டும்.

திராவிட முன்னேற்ற கழகம் எதிர்க் கட்சியாக இருந்தபோது கருணாநிதி மறைந்தார். அப்போது கட்சிக்குத் தலைவரான ஸ்டாலின், தனது சாதுரியமான அரசியல் நகர்வுகளால் கட்டணித் தலைவர்களில் ஆதரவைப் பெற்று தமிழக முதல்வராக வீற்றிருக்கிறார். அப்படியான பல சந்தர்ப்பங்கள் கிடைத்தபோதும் ராகுல் அதனைத் தவற விட்டார். பாரதீய ஜனதாவை எதிர்க்க பலமான தலைவர் காங்கிரஸுக்குத் தேவை. அதுதான் மத சார்பற்ற இந்தியாவின் அடையாளம்.

அபி

முயற்சிக்கு கண்பார்வை தடையல்ல; மன வெளிச்சமே மாபெரும் வெற்றி

நிப்தி அலி

'கண் பார்த்தால் கை வேலைசெய்யும்' என்பார்கள். இங்கே கண் பார்க்காமலே ஒருவரின் கை வேலை செய்துகொண்டிருக்கிறது. அவர் கையால் பார்த்தே மின் உபகரணங்களை திருத்துகிறார்.

அவர் பெயர் எம்.கலீஞர் ரஹ்மான். கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஓட்டமாவடி பிரதேசத்தின் காவத்தமுனை கிராமத்தில் தற்போது வாழ்ந்துவருகின்ற இவர், கடந்த 16 வருடங்களாக மின் உபகரண திருத்துனராக செயற்படுகின்றார்.

இதற்கு முன்னர் சுமார் இரண்டு வருடங்கள் இவர் தச்சு தொழிலிலும் ஈடுபட்டுள்ளார். குறிப்பாக, திருவுளை செய்தல், கோழிக்கூடு அடித்தல் போன்ற வேலைகளையும் இவர் செய்துள்ளார். எனினும், இந்தத் தொழிலில் ஆர்வமின்மையினால் இத்தொழிலை நிறுத்தி விட்டு மின் உபகரணங்களை திருத்தும் வேலையில் ஆர்வம் கொண்டு அத்தொழிலை மேற்கொண்டு வருகின்றார்.

தற்போது கலீஞர் ரஹ்மானினால் ஹீட்டர், வோசிங்க் மெசின், ரைஸ் குக்கர் போன்ற பல மின் உபகரணங்களை பழுதுபார்க்க முடிகிறது. இவரால் எவ்வாறு இந்த வேலையை செய்யமுடிகிறது என்பதை மிகவும் ஆச்சரியத்துடன் எம்மை திரும்பிப்பார்க்க வைத்தார்.

"நீங்கள் உங்கள் கண்களால் பொருட்களை பார்ப்பீர்கள். நான் என் கைகளால்தான் பொருட்களை பார்த்து உணர்கிறேன். இந்த மின்விசிறிக்கு என்ன பிரச்சினை என்பதை கையினால் தொட்டுப் பார்ப்பதன் ஊடாக உணர்வேன்" என்றார் கலீஞர் ரஹ்மான்.

"அவ்வாறு மின் விசிறிக்கு கொயில் சுட்டுபோச்சு என்பதனை உணர்ந்தால், அதனை கழற்றி கொயில் அடித்துக் கொடுப்பேன். அவ்வாறில்லாவிட்டால் நல்ல பாகங்களை கடையில் வாங்கி திருத்திக் கொடுத்துவிடுவேன்" என்று உற்சாகத்துடன் கூறுகிறார் கலீஞர் ரஹ்மான்.

தனக்கு கண் பார்வை இல்லையே என்று தான் ஒருபோதும் கவலைப்பட்டதே இல்லை என்கிறார் இவர். சமூகத்திலிருந்து ஒருபோதும் ஒதுக்கப்படாமையே இதற்கான பிரதான காரணமாகும். இவருக்கு நிறைய நண்பர்கள் இருக்கின்றனர்.

"என்னை யாரும் ஒதுக்கவில்லை. சமூகம் நல்ல முறையில் என்னுடன் பழகுகின்றது" எனவும் அவர் கூறினார். இவர், 1972.06.20ஆம் திகதி வாழைச்சேனை, பிறைந்துரைச்சேனை கிராமத்தில் பிறந்துள்ளார். எட்டு பிள்ளைகளைக் கொண்ட பெற்றோருக்கு ஏழாவது பிள்ளையாக பிறந்துள்ளார்.

நான்கு சகோதரிகளும் மூன்று சகோதரர்களையும் கொண்ட இவரின் மூன்றாவது வயதில் அம்மை நோய் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாகவே கண் பார்வையினை இழந்ததாக அவர் குறிப்பிட்டார்.

அம்மை நோயை குணப்படுத்த முட்டை இதேவேளை, கண் பார்வை இழந்தமையினால் கலீஞர் ரஹ்மான் பெரியளவில் படிக்கவில்லை. இதற்கு பிரதான காரணம், அவருடைய ஊர் கிராமத்தில் அந்த வசதிகள் இல்லாமையினாலாகும்.

இதனால் தூர இடத்திற்குச் சென்று கல்வி கற்க அவருடைய பெற்றோரும் அனுமதிக்கவில்லை. அங்கலீனர்களுக்கான பாடசாலைகள் இருக்கும் விடயமும் எனக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் நிச்சயம் போயிருப்பள் என்கிறார் அவர்.

எனினும், இன்றைய நவீன காலகட்டத்தில் விழிப்புலனற்றோருக்காக பல கல்வித் திட்டங்களை இலங்கை அரசு ஏற்படுத்தியுள்ளது. அது மாத்திரமல்லாமல், இவ்வாறானவர்கள் பரீட்சைகளில் தோற்றுவதற்கும் பல்வேறு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதனை வினைத்திறனாக பயன்படுத்தி பலர், பல்கலைக்கழக பட்டங்களைப் பெற்று அரச தொழிலை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான நிலையில் எந்தவித கல்வியறிவுமற்ற நிலையில் மின் உபகரணங்களை கலீஞர் ரஹ்மான் திருத்துவதற்கு நண்பர் ஒருவரே கற்றுக்கொடுத்துள்ளார்.

எனினும், குறித்த நண்பனின் பெயரை குறிப்பிட அவர் மறுத்துவிட்டார். தொடர்ச்சியாக ஆறு மாதங்கள் அவரிடம் பயிற்சி பெற்றே இந்தத் தொழிலை கற்றுக்கொண்டதாகக் கூறும் அவர், தற்போது வரும் மின் உபகரணங்கள் தொடர்பில் எதுவும் ஆலோசனை தேவையென்றால் எனது சிறமம் பார்க்காமல் வீடு வந்து சொல்வித் தருவார் எனவும் கூறினார். இதனால் தெரியாத எல்லா விடயங்களையும் அவரிடம் கேட்டு படித்துகொள்வேன் என்றார் கலீஞர் ரஹ்மான். இந்த தொழில் மாத்திரமல்லாமல், கதவு லொக் செய்தல் போன்ற பல வேலைகளும் இவரால் சிறப்பாக மேற்கொள்ள முடிகின்றது.

"என்னிடம் எந்த கணக்கும் யாரும் விட முடியாது. நான் அவர்களுக்கு சொல்லிக் கொடுப்பேன்" என அவர் குறிப்பிட்டார். இதேவேளை, தொழில் முயற்சியினை ஆரம்பிக்க விரும்பும் இவருக்கு அரசாங்கத்தினாலோ அல்லது அரச சார்பற்ற அமைப்புகளினாலோ எந்த உதவியும் இதுவரை கிடைக்கவில்லை என அவர் கவலை வெளியிட்டார்.

கண் பார்வையற்றவர்கள் உள்ளிட்ட அங்கலீனர்களுக்கு மாதாந்த கொடுப்பனவு திட்டமொன்று மாத்திரமே அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்றதே தவிர, வேறு எந்த உதவித் திட்டங்களும் வழங்கப்படுவதில்லை. இதன் காரணமாகவே கலீஞர் ரஹ்மான் போன்ற பலர் தொழில் முயற்சிகளை ஆரம்பிக்க கஷ்டப்படுகின்றனர்.

இதேவேளை, சில அரச சார்பற்ற நிறுவனங்களினால் விழிப்புணர்வற்றோர் தொழில் முயற்சிகளை மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனினும், குறித்த உதவித் திட்டங்கள் கலீஞர் ரஹ்மான் போன்ற கிராம பிரதேசங்களில் வாழ்பவர்களுக்கு சென்றடைவதில்லை என்பது முக்கிய விடயமாகும்.

"எனக்கு மனம் திருப்தியில்லாமல் பொருட்களை கொடுக்கமாட்டேன். மனம் திருப்திக்கு செய்துகொடுப்பேன். பொய்யுமில்லை, களவுமில்லை. நீதியும் நியாயமும். அதிக கட்டணம் வசூலிப்பதுமில்லை" என்றார் கலீஞர் ரஹ்மான். இதனை உறுதிப்படுத்தும் வகையிலேயே இவரிடம் மின் உபகரணங்களை திருத்துவதற்காக வழங்கியவர்கள் எம்மிடம் தெரிவித்தனர்.

அது மாத்திரமல்லாமல் இவர் மிகவும் நம்பிக்கைக்குரியவர் என அக்கிராம மக்கள் எம்மிடம் தெரிவித்தனர். எனினும், வாழைச்சேனை பிரதேசத்தில் கடந்த பல தசாப்தங்களாக வசித்து வந்த இவர், தற்போது ஓட்டமாவடி காவத்தமுனை பிரதேசத்தில் கடந்த சில மாதங்களாக வசித்து வருகின்றார்.

இப்பிரதேசத்துக்கு இவர் புதியவர் என்பதனால், இவருக்கான தொழில் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. இதனால் இவர் பல சிரமங்களை தற்போது எதிர்நோக்கியுள்ளனர்.

தற்போது வீட்டிலிருந்தே மின் உபகரணங்களை திருத்தும் பணியினை மேற்கொள்ளும் இவரின் நீண்டநாள் ஆசையாக காணப்படுகின்ற விடயம் பிரதான நகரொன்றில் கடையொன்றினை திறப்பதாகும். கடையொன்று திறப்பதன் மூலம் அதிக வேலைகள் கிடைக்கப்பெற்று பலருக்கு தொழில் வாய்ப்பினை வழங்க முடியும் என இவர் நம்புகின்றார்.

எனினும், பணப் பற்றாக்குறை காரணமாக இதனை முன்னெடுக்க முடியாதுள்ளது. இதற்கு யாரும் உதவ முன்வரமாட்டார்களா என்ற அங்கலாய்ப்பில் இவர் காணப்படுகின்றார்.

இதனூடாக இவரின் தொழில் துண்டுதலை நிச்சயம் மேற்கொள்ள தேவை. வீழ்ந்து கிடைக்கும் ஒருவரை எழுப்பிவிட வேண்டியது சமூகத்தின் பொறுப்பாகும்.

"கம்பியூட்டர்போல நமது மூளைகள் இருக்க வேண்டும் கண் தெரியாதென்றுவிட்ட ஒதுங்கி இருக்கக்கூடாது. அத்துடன், மன வெளிச்சம் உறுதியாக இருக்கவேண்டும். பார்வையில்லை என்று முடங்கி இருக்காமல் முயற்சிசெய்ய வேண்டும் என தன்னை தன்னை கண் பார்வையற்றிருப்பவர்களுக்கு இவர் ஆலோசனை வழங்குகின்றார்.

இவரை தொடர்புகொள்ள விரும்புகின்றவர்கள் 0752281398 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தொடர்புகொள்ள முடியும்.

அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினர், அக்கரைப்பற்று அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனத் தலைவர், அக்கரைப்பற்று பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளர், அக்கரைப்பற்று ஜாம்மா பெரியபள்ளிவாசல் தலைவர், கிழக்கின் கேடயம் ஸ்தாபகர், பிரதான செயற்பாட்டாளர், கொழும்பு பிஸ்னஸ் கொலேஜ் முகாமைத்துவப் பணிப்பாளர் என பல்வேறு அடையாளங்களைக் கொண்ட அல்-ஹாஜ் எஸ்.எம்.சபீல் 'தமிழன்' வார வெளியீட்டுக்கு வழங்கிய விசேட செவ்வி.

நாட்டின் பொருளாதார நிலைமையால் நிம்மதியின்றி அங்கலாய்க்கும் மக்கள்

ஆன்மீகப் பணி, சமூகப் பணி, அரசியல் பணி என மூன்று துறைகளிலும் இயங்குபவர்கள் உலகில் மிகச்சிலரே இருக்கின்றார்கள். நீங்களும் இந்த மூன்று தளங்களிலும் இயங்குபவர். இதை எவ்வாறு நோக்குகின்றீர்கள்? இதிலுள்ள சமைகள், சங்கடங்கள், சவால்களை எவ்வாறு எதிர்கொள்கின்றீர்கள்?

இந்த மூன்று பணிகளையும் ஒருசிலர் வேறுவேறாக பார்க்கின்றனர். ஆனால், என்னால் இவற்றை வேறாக பிரித்துப் பார்க்க முடியாதுள்ளது. இவை யாவும் இறைபணியே என நம்புபவர்களில் நானும் ஒருத்தன்.

அரசியலாக இருந்தாலும் சரி, சமூக சேவையாக இருந்தாலும் சரி அல்லது ஆத்மீகப் பணியாக இருந்தாலும் சரி பொதுவாக சவால்கள் நிறைந்தே காணப்படும். அவற்றை நேருக்கு நேர் நின்று துணிச்சலோடு முகங்கொடுக்கும் பக்குவத்தையும் ஆற்றலையும் இறைவன் எனக்கும் தந்துள்ளான், அதனால் எந்த சவால்களும் என்னை சங்கடப்படுத்தியதில்லை. அதேபோன்று மனதுக்கு நிம்மதியை தரக்கூடியது. இறைபதையில் பணிபுரியும்போது ஏற்படும் இடர்களை ஒருபோதும் நாங்கள் சுமையாக கருதுவதுமில்லை.

தேசிய காங்கிரஸின் தலைவரால் உங்களுக்கு அக்கரைப்பற்று மேயர் பதவி தருவதாக வாக்குறுதி வழங்கப்பட்டு ஏமாற்றப்பட்டதாக கூறப்படுவதன் உண்மைத்தன்மை என்ன?

தேசிய காங்கிரஸ் தலைவர் அதாஉல்லா சூழற்சி முறையில் மாநகர முதல்வர் பதவியை மாற்றி வழங்குவதாக உயர்பீட உறுப்பினர்கள், ஊர்ப் பிரமுகர்கள், பள்ளிவாசல் தலைவர்கள், கட்சி முக்கியஸ்தர்கள் முன்னிலையில் வாக்குறுதி வழங்கியது உண்மைதான். ஆனால், ஏன் அவர் தனது வாக்குறுதியை காப்பாற்றவில்லை என்ற காரணத்தை அவரிடம் (அதாஉல்லா) தான் நீங்கள் கேட்கவேண்டும். எனக்குத் தெரியாது. இறைவன் நாடாத எதனையும் நாங்கள் யாரிடமும் கேட்டது கிடையாது.

கிழக்கின் கேடயம் ஏன் உருவாக்கப்பட்டது? அது அரசியல்வாதிகளின் பினாமியாக இயங்குவதாக கூறப்படும் தகவல் பற்றி உங்கள் கருத்தென்ன ?

இந்த அமைப்பில் மரம், மயில், குதிரை, தோடம்பழம், சுயேட்சை போன்ற கட்சிகளின் உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். அப்படியென்றால் எந்தக் கட்சியின் பினாமியாக நாங்கள் இருக்கலாம்

கிழக்கின் கேடயம் உருவாக்கப்பட்டது சமூகத்தின் குரலாகவும், சிவில் அமைப்பாகவும் இயங்கவே. அதன்மூலம் சிறுபான்மை மக்களுக்கு நடக்கும் அநீதிகளுக்கு எதிராக குரல்கொடுக்கவும், பிரச்சினைகளை மக்கள்மயப்படுத்தி தீர்வை பெற்றுக்கொடுக்கவும் இதனை நிறுவியுள்ளோம்.

கிழக்கின் கேடயம் உருவாக்கி நீங்கள் வெற்றிகண்ட விடயமாக எதை பார்க்கிறீர்கள்?

சமூகத்திற்கு தேவையான பெரும் விடயங்களை சாதித்ததாகவே நாங்கள் உணர்கிறோம். சாணக்கியன் எம்.பி. வடக்கு - கிழக்கு இணைக்கப்பட வேண்டும் என்றும் அதன் முதலமைச்சராக தான் வர ஆசை கொண்டுள்ளதாகவும் தெரிவித்துவந்த நிலையில் சத்தமிட்டு பேசுபவனின் கூற்று உண்மையாகிவிடக்கூடாது என்பதற்காக கிழக்கு மக்களின் சார்பில் எங்களின் பலமான எதிர்ப்பை முன்வைத்தோம். அதன்பின்னர் வடக்கு - கிழக்கு இணைப்பு பேச்சுகளை அவர்கள் நிறுத்தியுள்ளார்கள்

அதேபோன்று இந்திய அரசாங்கத்துக்கு அனுப்பப்படவிருந்த முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளை குழிதோண்டி புதைக்கும் வரலாற்றுத் துரோக கடிதத்தில் முஸ்லிம் தலைவர்கள் ஒப்பமிடாமல் கிழக்கின் கேடயம் முழுமையாக களமாடி அதனை தடுத்து நிறுத்தியது. அதனால் இன்னும் 20 வருடங்களுக்குப் பின்னர் வரும் சந்ததியினர் தலைவர்களை நொந்துகொள்ளும் சந்தர்ப்பத்தினை இல்லாமல் செய்திருக்கின்றோம் . ஏன் இதனை தடுத்து நிறுத்தினீர்கள் அதனை வைத்து கட்சி, அரசியல் செய்திருக்கலாம்தானே என்று கேட்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

அடுத்ததாக மட்டக்களப்பில் வாழும் முஸ்லிம்களின் காணிகள் முறையானவகையில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்றும், அங்குள்ள நிர்வாக சேவை அதிகாரிகளுக்கு இடம்பெறும் அநீதிகள், கொடுமைகளுக்கு எதிராகவும் குரல்கொடுத்து பிரச்சினைகளை மக்கள் மயப்படுத்தி பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாக இருந்துள்ளதுடன், செயல்வடிவங்களையும் செய்துள்ளோம். விரைவில் அதற்கான தீர்வொன்று கிட்டும் என நம்புகின்றோம்.

மற்றும் திருகோணமலை கண்முகா பாடசாலையில் இடம்பெறும் அடக்குமுறைகள் தொடர்பில் கரிசனை செலுத்தி ஜனாதிபதி மட்டம் வரை கொண்டுசென்று தீர்வுக்கான முஸ்தீபுகளை செய்துள்ளோம். பொது மக்களுக்கு உள்ள காணி விடயங்கள், உரிமை சார்ந்த பிரச்சினைகள் போன்றவற்றில் முன்னின்று செயற்பட்டுக் கொண்டிருக்கிறோம். அன்மையில் கூட முஸ்லிம்களின் காணிகளில் திடீரென முளைக்கும் சிலைகள், காணி அபகரிப்புகள் தொடர்பிலும் கட்சி, பிரதேசவாத எல்லைகள் எல்லோருடனும் இணைந்து செயற்பட்டுக்கொண்டிருக்கின்றோம் .

மட்டக்களப்பு மாவட்டத்தில் எவ்வாறான தீர்வுகளை நீங்கள் எதிர்பார்க்கின்றீர்கள்?

மட்டகளப்பு மாவட்டத்திலுள்ள SLAS அதிகாரிகள் உரிய விதிதாரர அடிப்படையில் அங்குள்ள நிர்வாக சேவையில் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும். அவ்வாறில்லை என்றால் அங்குள்ள முஸ்லிம் பிரதேச செயலகங்களிலாவது முஸ்லிம் நிர்வாக சேவை அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும் என்பதுடன், மேலதிக அரசாங்க அதிபராக தகுதியான முஸ்லிம் நிர்வாக சேவை அதிகாரி ஒருவர் மட்டக்களப்பு கச்சேரியில் நியமிக்கப்பட வேண்டும் என்பதோடு எல்லைகளை சரியாக அடையாளப்படுத்தி உரியவர்களின் காணிகள் நீதியுடன், முறையாக பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என்பதே எங்களின் எதிர்பார்ப்பாக இருக்கிறது.

தம்தர் ஜெய்லானி பள்ளிவாசலின் முன்கோபுரம் உடைக்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் கிழக்கின் கேடயத்தின் பார்வை எப்படி இருக்கிறது ?

நல்லாட்சிக் காலத்தில் நடந்த சம்பவங்களுடன் ஒப்பிடும்போது இது விித்தியாசமானதாக உள்ளது. நல்லாட்சிக் காலத்தில் படையினரால் பாதுகாப்பு வழங்கப்பட்டு முஸ்லிம் மக்கள் தாக்கப்பட்டார்கள். இங்கு தம்தர் ஜெய்லானி பள்ளிவாசலை வரவேற்கும் தோரணத்தை இனந்தெரியாத நபர்கள் உடைத்துவிட்டுச் சென்றுள்ளார்கள். ஆகவே அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு அந்த தோரணத்தை மீள நிர்மாணித்துக் கொடுப்பதோடு குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை வழங்குவதன் மூலம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடந்த சுதந்திர தின விழாவில் உரையாற்றிய எல்லா இன மக்களும் நிம்மதியாக வாழக்கூடிய நாட்டை உருவாக்கியுள்ளோம் எனும் கூற்றுக்கு வலுச்சேர்க்கும் ஒன்றாக அமையும்.

தேசிய காங்கிரஸில் உங்களுக்கும் - தலைவருக்குமிடையில் வெட்டுகுத்துகள் நிறைய இருக்கத்தக்கதாக தொடர்ந்தும் தே.காவில் பயணிப்பீர்களா?

தேசிய காங்கிரஸ் தனிநபரின் சொத்தல்ல. பொதுமக்கள், பிரமுகர்கள், செல்வந்தர்கள், இளைஞர்கள் போன்றபலரின் உழைப்பினூடாக உருவாக்கப்பட்ட கட்சி. கடந்த நல்லாட்சிக் காலத்தில் பலம்பொருந்திய அமைச்சர்கூட எங்களை நாடிவந்து அவர்களின் கட்சியில் இணைந்துகொள்ளுமாறு அழைப்பு விடுத்திருந்தார். ஆனால், நாங்கள் அவற்றை யெல்லாம் நிராகரித்திருந்தோம். காரணம், தேசிய காங்கிரஸின் ஆணிவேராகத் திகழ்வது அக்கரைப்பற்றும் அதனை சார்ந்த பிரதேசங்களுமே. அந்தத் தளத்தினை சீரழித்து விடக்கூடாது என்பதில் நாங்கள் தெளிவாகவும் இருந்தோம்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது அம்பாறை மாவட்ட குழுக்கூட்டத்துக்கு அழைத்தபோது அக்கூட்டத்துக்கு விரல்விட்டு எண்ணக்கூடிய உறுப்பினர்கள் மாத்திரமே வந்திருந்தார்கள் அந்நேரத்தில் நாங்கள் எவ்வாறு செயற்பட்டோம் என்பதற்கு அவர்களே சாட்சி. வெற்றியின் பின் பலரும் ஓட்டிக்கொள்வது வழமை. ஆகவே, இங்கு காணப்படுகின்ற தளத்தினை சிதைப்பது தலைவராக இருந்தாலும் மக்கள் அவர்களை தூக்கி எறிய தயங்கமாட்டார்கள்.

இது தொடர்பில் மக்கள் என்ன நிலைப்பாட்டில் இருக்கின்றனர்?

இந்த நாட்டை சீரழித்த உள்நாட்டு யுத்தத்தை முடித்து அமைக்கமுடியா சக்தியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷவின் செயற்பாடுகள் பிழைத்தவுடன் மக்கள் அவரை தூக்கிவீசிய வரலாறுகள் எம் கண்முன்னே நடந்து முடிந்திருக்கிறது. ஆகவே, ஆயுளுக்கும் மஹிந்தவின் ஆட்சிதான் வேண்டும் என்று யாரும் சொல்லுவது கிடையாது. இது எல்லோருக்கும் பொருந்தும்.

தனது மகனை மிஞ்சியவர்களை தலைவரினால் கட்சியிலிருந்து வெளியேற்றப்படுவது வழமை. இதை எவ்வாறு பார்க்கிறீர்கள் ?

பதவி கொடுப்பது, எடுப்பதெல்லாம் இறைவன் செயலென சிலர் பெயரளவில் கூறிக்கொண்டிருப்பார்கள். அவர்களுக்கு பதவி கொடுத்தால் இறைவனை பாராட்டுவதும் எதிராளிக்கு பதவி கிடைத்துவிட்டால் அதனை பொருந்திகொள்ளாமல் அவனை வேலைசெய்யவிடாமல் தடுப்பதும் விமர்சிப்பதும் ஒருசிலருக்கு வழமையாகிவிட்டது.

தே.கா. தலைவரின் மகன் அரசியலுக்கு வருவது தவறில்லை. சாதாரணமானவர்களே அரசியலுக்கு வர முனைகின்றபோது ஒரு சிரேஷ்ட அரசியல்வாதியின் மகன் அரசியலுக்கு வருவது இயல்பு. ஆனால், ஒரு காய் முத்தி தானாக கனியவேண்டும். அடித்து பழுக்கவைக்கக்கூடாது.

தேசிய காங்கிரஸ் படிப்படியாக தன்னுடைய செல்வாக்கை இழந்து வருவதை எப்படி சரி செய்யலாம் என்று நினைக்கின்றீர்கள்?

இப்போதைக்கு இது அவசியமில்லாத பாதுகாப்பு வழங்கப்பட்டு முஸ்லிம் மக்கள் கேள்வியாக எனக்குத் தோன்றுகின்றது பொதுமக்கள், பிரமுகர்கள், செல்வந்தர்கள், இளைஞர்கள் போன்றபலரின் உழைப்பினூடாக உருவாக்கப்பட்ட கட்சி. கடந்த நல்லாட்சிக் காலத்தில் பலம்பொருந்திய அமைச்சர்கூட எங்களை நாடிவந்து அவர்களின் கட்சியில் இணைந்துகொள்ளுமாறு அழைப்பு விடுத்திருந்தார். ஆனால், நாங்கள் அவற்றை யெல்லாம் நிராகரித்திருந்தோம். காரணம், தேசிய காங்கிரஸின் ஆணிவேராகத் திகழ்வது அக்கரைப்பற்றும் அதனை சார்ந்த பிரதேசங்களுமே. அந்தத் தளத்தினை சீரழித்து விடக்கூடாது என்பதில் நாங்கள் தெளிவாகவும் இருந்தோம்.

உங்கள் தலைவர் உட்பட 20இற்கு கையுயர்த்தியவர்கள் நற்றிய உங்கள் பார்வை என்ன?

நாட்டில் நடப்புகளை முஸ்லிம் மக்கள் நன்றாக விளங்கிக்கொள்ள வேண்டும். இன்று அரசியல்வாதிகள் மாத்திரமல்லாமல் சிங்கள மக்களும் முஸ்லிம்களை வெறுக்கின்ற நிலைவரங்களை கண்ணூடாக காணக்கிடைக்கின்றது.

முஸ்லிம் SLAS அதிகாரிகள் எந்த அமைச்சுகளிலும் உயர்பதவிகளுக்கு வருவதை அவர்கள் விரும்பவில்லை என்பதற்கு பல சாட்சிகள் எங்களிடம் உள்ளன. ஆகவே, இத்தருணத்தில் மக்கள் பிரதிநிதிகள் வெட்டினால் பச்சை இரத்தம் அல்லது நீல இரத்தம் ஓடும் என்று சொல்லாமல் மக்களை மனதுக்கு நிம்மதியான வாழ்வையே விரும்புவோம். இன்று இனக்கலவரமில்லை, முஸ்லிம்கள் தாக்கப்பட வில்லை, பள்ளிவாசல்களுக்கு தாக்குதல் நடக்கவில்லை என்ற நிம்மதி எங்களுக்கு இருக்கிறது. ஆனால், மறைமுகமாக நாட்டில் உள்ள பொருளாதாரு நெருக்கடி, பஞ்சம் காரணமாக எந்த மக்களும் நிம்மதியில்லாமலே இருக்கிறார்கள் என்பதே எங்களின் பார்வையாக இருக்கிறது.

கடந்த காலங்களில் நாட்டின் வளங்கள் வெளிநாட்டுக்கு வழங்கப்பட்டபோது வாதித்ததுஞ்த உங்கள் தலைவர், இந்த ஆட்சியில் வளங்கள் வெளிநாட்டுக்கு வழங்கப்பட்டபோது அக்கி வாசிப்பது பற்றி உங்கள் கருத்து என்ன?

அவர் மௌனம் காக்கிறாரா என்பது தொடர்பில் எனக்குத் தெரியாதிருந்தாலும் அவர் பொது நிகழ்வுகளில் குரல் கொடுப்பதாகவே நான் அறிகிறேன். இதுதொடர்பில் நான் மாறுபட்ட கருத்தைக் கொண்டுள்ளேன். ஏனெனில், இவங்கையின் வளங்கள் கேள்விகூடிய பெறுமானமிக்கவை.

அதற்காக அதை நாம் முறையாக பயன்படுத்தாமல் வைத்திருக்க முடியாது. உலக அபிவிருத்தியடைந்த நாடுகளில் உள்ள நடைமுறைகள் போன்று எமது நாட்டின் வளங்கள் வெளிநாடுகளுக்கு வழங்குவதில் தவறில்லை. ஆனால் அது முறையாக மக்களுக்கு நன்மை பயக்கும் வகையில், எதிர்காலத்தை பாதிக்காமல் முறையான திட்டங்களினூடாக குறித்த சில வருடங்களை தவணையாக கொண்டு வழங்கப்பட வேண்டும்.

அதில் மக்களுக்கு தீமையாக அமையும் செயற்பாடுகள், மக்களை மலினப்படுத்தும் நடைமுறைகள் இருந்தால் உடனடியாக வலுவிழக்கம் செய்யும் நடைமுறைகள் கொண்டதாக ஒப்பந்தங்கள் அமைய வேண்டும்.

இப்படியான நடைமுறைகள்தான் ஜக்கிய இராச்சியம் போன்ற நாடுகளில் செய்யப்படுகிறது. இவங்கையில் ஆயுட்கால ஒப்பந்தங்கள் மூலம் வளங்கள் வேறு ஒரு நாட்டுக்கு வழங்குவது முறையான விடயமல்ல. இதனால் தரங்குறைந்த சேவைகளே மக்களை வந்தடைகிறது. நாட்டை முன்னேற்ற இறுக்கமான சட்டதிட்டங்களை முன்வைத்து ஒப்பந்தங்கள் செய்து வளங்கள் வழங்க வேண்டும். அழகான நாடு என்று நாம் பயன்படுத்தாமல் வைத்துக்கொண்டிருந்து பயனில்லை.

முஸ்லிம்களுக்கு நிம்மதி இல்லை என்று கடந்த ஆட்சியை விமர்சித்த நீங்கள் இந்த ஆட்சியை எப்படி நோக்குகிறீர்கள்?

இன்று நாட்டில் யாரும் நிம்மதியாக இல்லை என்பது எல்லோருக்கும் தெரியும். காரணம் தெரிந்ததுதான். எமது நாட்டில் டொலர் இல்லை, அத்தியாவசியப் பொருட்கள் இல்லை, டீசல், பெற்றோல் உட்பட எல்லாம் தட்டுப்பாடாகவே இருக்கிறது. விலைபேற்றம், பணக்காரன்முதல் பாமர மக்கள்வரை பசி என நாடு திண்டாடிக்கொண்டிருக்கிறது. இதில் சிங்களவர், முஸ்லிம், தமிழர், கிறிஸ்தவர் என்ற எந்த பாகுபாடுமில்லை.

ஆனாலும், கடந்த அரசாங்கத்தில் இருந்த வாழ்வியல் அச்சநிலை இந்த அரசில் நாட்களை எண்ணி நிம்மதியான வாழ்வையே விரும்புவோம். இன்று இனக்கலவரமில்லை, முஸ்லிம்கள் தாக்கப்பட வில்லை, பள்ளிவாசல்களுக்கு தாக்குதல் நடக்கவில்லை என்ற நிம்மதி எங்களுக்கு இருக்கிறது. ஆனால், மறைமுகமாக நாட்டில் உள்ள பொருளாதாரு நெருக்கடி, பஞ்சம் காரணமாக எந்த மக்களும் நிம்மதியில்லாமலே இருக்கிறார்கள் என்பதே எங்களின் பார்வையாக இருக்கிறது.

உரையாடல் : நூருல் ஹுதா உமர்
மாளிகைக்காடு செய்தியாளர்

பிறருக்கு உதவிசெய்வதற்கு இன, மத பாகுபாடுகள் தேவையில்லை

நேர்காணல்: இக்பால் அலி

பிரபல்யமான சமூகச் செயற்பாட்டாளர் தேசமானிய தேசபந்து கலாநிதி கே.எம்.எஸ்.எம். றாசிக் இஸ்லாமிய சேரண்டிப் அறக்கட்டளையின் ஸ்தாபகத் தலைவர். இவருடைய சமூகப் பணிகளுக்காக விருதுகளும் பட்டங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டவர்.

2007களில் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் ஏற்பாட்டில் நுகர்வோருக்கு நேர்மையான சிறந்த சேவையை வழங்கியமைக்காக முன்னாள் ஜனாதிபதி, தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரினால் ஜனாதிபதி அலுவலகத்தில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். 2021 கல்கத்தா பல்கலைக்கழகத்தின் மூலம் கலாநிதிப் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டவர். அகில இலங்கை சமாதான நீதவான் 21-12-2021 பண்டாரநாயக சர்வதேச ஞாபகார்த்த மண்டத்தில் தேசபந்து மற்றும் தேசமானிய பட்டங்கள் என வழங்கி கௌரவிக்கப்பட்டவர். தாஜுல் உலூம் பள்ளிவாசல் பரிபாலன சபையின் தலைவராக இரு தடவை பதவி வகித்தவர், மாவத்தகம லைன்ஸ் கழகத்தின் முக்கியஸ்தர் எனப் பல்வேறு சமூக அமைப்புகளில் பங்கேற்று தமது பெயரின் அடையாளத்தையும் தமது ஆளுமையையும் பதிவுசெய்துள்ளார். இவர் ஞாயிறு 'தமிழன்' பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி.

Q உங்களது ஆரம்ப வாழ்க்கை முறை குறித்து கூறுவீர்களா?

1953-6-25இல் புழுப்பிட்டிய வட்டுக்கொட என்ற இடத்தில் பிறந்தேன். இங்குதான் வளர்ந்தேன். தந்தையின் பெயர் செய்யது முஹம்மத், தாயார் ரசீனா உம்மா. நாங்கள் ஒன்பது பேர். நான்கு ஆண்கள், ஐந்து பெண்கள். தந்தை ஒரு வர்த்தகர்.

நான் ஆரம்பக் கல்வியுதல் ஒன்பதாம் ஆண்டு வரையிலும் அக்குறணை புகுகஹதென்னை ஸாஹிரா கல்லூரியில் கல்வி பயின்றேன்.

ஆரம்பத்தில் தந்தை வியாபாரத்தில் முன்னணி வர்த்தகராக இருந்தார். இடைப்பட்ட காலத்தில் சில ஏவால்களை எதிர்நோக்கவேண்டியிருந்தது. பின்னர் நல்ல முறையில் திருப்பமும் அல்லாஹ்வின் உதவியோடு முன்னேற்றப் பாதையில் இலக்கை நோக்கி பயணிக்க முடிந்தது.

ஒன்பதாம் வகுப்பு வரையிலும் படித்துவிட்டு தந்தையோடு வியாபாரத்தில் 1971களில் இணைந்துகொண்டேன். வர்த்தகத்துறை சம்பந்தமாக பல்வேறு மட்டங்களில் நல்ல அனுபவங்களைப் பெற இவை உதவின.

தந்தை குருநாகல் நகரில் பலரைக்குக் கடை வைத்திருந்தார். அவரிடம் கட்டுக்கோப்பான வியாபாரத் தலைமைத்துவத்துவப் பண்புகளை கற்றுக்கொண்டேன். வர்த்தகத்துறையின் வளர்ச்சியானது வாடிக்கையாளர்களுக்கு மலிவான உணவுப்பண்டங்களை விநியோகிப்பது மட்டுமல்ல, தொழிலில் நேர்மைத் தன்மையும் வியாபாரத்தில் ஒழுக்கமும் தங்கியுள்ளது. அதனை நற்முடைய செயற்பாட்டின் மூலம்தான் பெற இயலும். வியாபார ஒழுக்கத்தன்மை என்பது விலைமதிக்க முடியாத ஒன்று. கடைக்கு வரும் வாடிக்கையாளர் யாராக இருந்தாலும் அவர்களோடு பக்குவமாக உறவாடி அப்பொருட்களை சந்தைப்படுத்த வேண்டும். அது மட்டுமல்ல, அந்த வாடிக்கையாளர்களை நிரந்தர வாடிக்கையாளர்களாக மாற்ற வேண்டியது கடை வியாபாரிகளின் முக்கிய பொறுப்பாகும். இதனை திறன்படச் செய்தால் வர்த்தகத்துறையில் புரட்சிகரமான மாற்றங்களை உருவாக்கலாம். சாதித்துக் காட்டவும் முடியும் என்ற மன தைரியம் இருந்தது.

இந்த வியாபாரத்துறையில் வெறுமனே தான் மட்டும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுதல் மற்றும் வியாபார முன்னேற்றப் பாதைகளில் ஈடுபாடுடையவராக மட்டும் நின்றுவிடாமல் தான் பெற்றுக்கொண்ட வியாபாரம் தொடர்பான அறிவானது தும் உடன்பிறந்த சகோதரர்களுக்கும் வழங்கப்படல் வேண்டும் என்ற கருத்தில் உறுதியுடையவராக இருந்தேன். அந்தவகையில் என்னுடைய சகோதரர்களின் ஒத்துழைப்பின் வெளிப்பாடாகவே என்னுடைய வியாபார முன்னேற்றப் பணிகளும் அமைந்துள்ளன.

இஸ்லாம் மார்க்கம் காட்டித்தந்த அளவை நிறுவை முதல் கொண்டு வருமானம் ஈட்டுகின்ற இலாபத்தில் ஏழைகளுக்கு வழங்கவேண்டிய ஸகாத் என்னும் ஏழை வரி சார்ந்த விடயங்களை நேர்மைத்தன்மையோடு கடைப்பிடித்து வியாபாரத் தொழிலை துய்மையான வகையில் செய்துவருகின்றேன்.

இப்படி பல ஒழுங்குமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும் என்று தந்தை எங்களிடம் அடிக்கடி கூறத் தயங்குவதில்லை. தந்தை செய்த பலசரக்குக் கடையினைத்தான் நாங்கள் தொடர்ந்து செய்துவருகின்றோம்.

இந்தக் கடை குருநாகல் நகரில் நீர்கொழும்பு வீதியில் அமைந்துள்ளது. மொத்த வியாபாரம் தான் செய்கின்றோம். தந்தை மரணமடைந்தார். அவரது மரணத்திற்குப் பின்னர் என்னுடைய வழிகாட்டலுடன் எனது சகோதரர்களுடன் சேர்ந்து செய்து வருகின்றேன். இதில் நாங்கள் எல்லோரும் ஒற்றுமையாக இருந்து இந்த வியாபார நிறுவனத்தைக் கட்டியெழுப்புவதில் அயராது பாடுபட்டு வருகின்றோம். இது வியாபாரத்துறையில் புதிதாக ஆரம்பிக்கவுள்ளவர்களுக்கும் தங்களை சீரமைத்துக்கொண்டு முன்னேக்கிச் செல்பவர்களுக்கும் எடுத்துக்காட்டுபவையாக அமையும் என நான் கருதுகின்றேன்.

தேசமானிய, தேசபந்து, கலாநிதி றாசிக்

Q நீங்கள் சமூகப் பணிகளில் ஈடுபடக் காரணம்?

என்னுடைய தந்தையும் தனது கையில் இருப்பதைக்கொண்டு அடுத்தவருக்கு கொடுத்து உதவியவர். நான் அதனை சிறுபராயத்தில் அவதானித்தேன். எம் தந்தையைப்போன்று அடுத்தவனுக்கும் கொடுக்கவேண்டும் என்று ஆசை இருந்தது. அக்காலகட்டம் நான் சிறிய பையன். வயது, பணம், வசதிகள் இடம்கொடுக்கவில்லை. இப்படி தந்தையுடைய முன்மாதிரியான செயற்பாடுகள் மனங்கொள்ளச்செய்தது.

அவை மட்டுமல்ல, என்னுடைய பெயர் கே.எம்.ஏ.றாசிக். எங்களுடைய வீடும் அமைந்திருப்பது கே.எம்.வீதியிலாகும். பள்ளியின் பெயர் கூட கே.எம்.பள்ளி என்று தான் அழைப்பார்கள். இப்படிப் பிரபல்யமான பெயரை வீதிக்கு சூட்டுவது பிரபல்யமான சமூக சேவையாளர்களுக்கு மட்டும்தான்.

Q அப்படியென்றால் நீங்கள், சமூகப் பணிகளின் மூலம் ஊரில் முத்திரையைப் பதிவுசெய்த பிரல்யமான குடும்பத்தைச் சேர்ந்தவர் என்று குறிப்பிடமுடியும். அது பற்றி?

உண்மையிலேயே எங்களுடைய வாசகமானது ஹாதி முதியன்சலாகெதர காமு. ஹாஜியார் என்றுதான் சொல்வார்கள். இப்பெயர் என் தந்தையின் சகோதரரின் பெயராம் புகழ்பெற்றது. என்னுடைய பெயருக்கு முன்னாம் உள்ள முன் எழுத்துகளும். கே.எம்.தான் ஆகும். பெரியப்பாவுடைய பெயரும் கே.எம்தான்.

பெரியப்பா ஆரம்பத்தில் அவரது காணியில் பள்ளியொன்றைக் கட்டினார். பெரியப்பா மரணமடைந்த பின்னர் ஊர் மக்களினால் அப்பள்ளி விஸ்தரிக்கப்பட்டது. பெரியப்பாவின் பெயர் கே.எம்.நூர் முஹம்மட் அதற்குத்தான் கே.எம்.பள்ளி என்று பெயர் வந்தது. ஊர் மக்கள் அது இடம்போதாது என்று அதனை உடைத்துக் கட்டினார்கள். அதை கட்டிக்கொண்டிருக்கும் தருணத்தில்தான் என் தந்தை மரணமானார்.

அதன்பின்னர் நாங்கள் மேல்மாடியை நிர்மாணித்துள்ளோம். பெரியப்பாவின் காணிதான் பள்ளி அமைந்துள்ள காணியாகும். பள்ளி இடம் போதாது என்று உடைத்துக் கட்டும் பணிகளில் தந்தையும் முக்கியமான ஒருவராக ஈடுபட்டார். நாங்கள் தந்தையின் பெயரில் மேல் மாடியைக் கட்டினோம்.

அதனால் இந்த ஊரில் கே.எம். பெயர் தொடர்ந்து பிரபல்யமானது. அதன் பின்னர் கே.எம். வீதி என்ற பெயர் சூட்டப்பட்டது . இந்தப் பள்ளியை பின்னாலும் விரிவாக செய்து கொடுத்துள்ளோம். இப்பள்ளியில் ஹிப்து மத்ரஸா ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனை ஊர் மக்கள் நடத்திக் செல்கின்றார்கள். இதன் உப தலைவராக நானும் இருக்கின்றேன்.

நாங்கள் அந்த இடத்தைக் கட்ட போய் இதனை ஊர் மக்கள் சரியாகப் பயன்படுத்தி வருகின்றார்கள். இப்படி சமூகப் பணிகள் மேற்கொண்டமையின் காரணமாகத்தான் ஊருக்கும் சமூகத்திற்கு சேவையாற்ற வேண்டும் என்ற ஆசை எனக்கு தொடர்ந்து இருந்துவந்தது.



எனி தந்தை கஷ்டமானவர்கள் யார் வந்து கேட்டாலும் இன, மத வேறுபாடுகள் பார்க்காமல் ஏதாவது கையில் உள்ளதைக் கொடுத்து முடியுமானளவு உதவி செய்வார். இவை பற்றி நாங்கள் வாப்பாவிடம் கேட்டால் யார் கேட்டு வந்தாலும் நம்மிடம் உள்ளதைக் கொண்டு மனம் நோகாமல் கட்டாயம் கொடுக்க வேண்டும் என்று கூறுவார். எங்களுடைய சிறுபராயத்தில் தந்தை அடுத்தவர்களுடன் எப்படி நேசம் வைத்துப் பழக வேண்டும் என்ற பாடத்தையும் சொல்லித் தந்தார். இப்படி நல்ல சமூகப் பணிகளையும் நல்ல பழக்க வழக்கங்களையும் அறிவுக்கும் சிந்தனைக்கும் ஏற்ற விடயங்களை செய்து காட்டியமை குறிப்பிடத்தக்கது.

ஆதலால் மக்களுக்கு என்னால் முடியுமான சின்ன உதவிகளைச் செய்தாலும் ஓர் உயர் நிலைமைக்கு வந்தவுடன சமூக சேவைகள் செய்யவேண்டும் என்ற எண்ணம் வேரூன்றி இருந்தது. அந்தவகையில் என்னுடைய இந்த மனிதாபிமான உதவியின் மூலம் மக்கள் சந்தோசமடைய வேண்டும். அதைப் பார்த்து என்னுடைய மனம் சந்தோசமடைய வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது.

அதனால் தனிப்பட்ட முறையில் சிறு உதவிகள் செய்தாலும் அதனை ஒழுங்குமுறைப்படி திட்டமிட்ட அடிப்படையில் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு என்னுடைய 54 வயதில் அதனைச் செய்யக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது. இப்படியான நல்லதொரு ஆசை இருந்தாலும் ஒரு நல்ல சூழல் அமையவேண்டும். பணம் மட்டும் இருந்தால் போதாது. அதனை மக்களுக்கு பயனுள்ள முறையில் வழங்கவேண்டும் என்ற நோக்கம் இருந்தது. அந்தவகையில் 2016களில் இஸ்லாமியக் சரெண்டிப் பவுண்டேசன் அறக்கட்டளை என்ற அமைப்பை உருவாக்கினேன்.

Q இஸ்லாமியக் சரெண்டிப் பவுண்டேசன் அறக்கட்டளை பற்றி கூறுவீர்களா?

இந்த இஸ்லாமிக் சரெண்டிப் பவுண்டேசன் நிறுவனத்தின் ஊடாக திட்டமிட்ட அடிப்படையில் நிறைய சமூக பணிகளைச் செய்துள்ளேன். குறிப்பாக கண்பார்வை குறைந்தவர்களுக்கான மூக்குக்கண்ணாடி வழங்க வருகின்றேன்.

இலவசமாக கண் பரிசோதனை முகாம்களை நடத்தி இனங்காணப்பட்டவர்களுக்கு இலவசமாக மூக்குக்கண்ணாடிகளை வழங்கி வருகின்றேன். அது மட்டுமல்ல, கண்ணில் வேறு விதமான நோய்கள் இருந்தாலும் அதனைப் பரிசோதனையின் மூலம் நிவர்த்திசெய்து வருகின்றேன். இவ்வாறு ஒவ்வொரு வருடமும் கண் சிகிச்சை முகாம்கள் நடத்தி வருகின்றோம். அதில் 500 இற்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொள்வார்கள். இனங்காணப்பட்ட கண்நோயாளர்களுக்கான மூக்குக்கண்ணாடிகளை வழங்கி வருகின்றோம். இதுவரைக்கும் 1000இற்கும் மேற்பட்ட மூக்குக் கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

கொரோனாவுக்குப் பின்னர் எந்தவிதமான கண்பரிசோதனை முகாம்களும் நடத்தவில்லை. எதிர்வரும் காலங்களில் எமது அறக்கட்டளையின் மூலம் நிறைய பணிகள் செய்யலாம் என்ற நம்பிக்கை இருக்கிறது.

குறிப்பாக, தாருல் உலூம் பாடசாலையில் இரு தடவைகள் கண் சிகிச்சை முகாம் நடத்தியுள்ளேன். ஜிவானவத்த விஹாரையில் கண் சிகிச்சை முகாம் நடத்தியுள்ளேன். இவ்வாறு தொடர்ந்து ஹப்புக்கலை விஹாரை, கஹவத்த விஹாரை முதலிய இடங்களில் கண் பரிசோதனை முகாம்கள் நடத்தியுள்ளோம். இதில் சிங்கள, முஸ்லிம், தமிழ், கிறிஸ்தவ சமயத்தவர்கள் அனைவருக்கும் எந்தவிதமான இனப்பாகுபாடுகளுமின்றி கலந்துகொண்டு பயனடைவார்கள்.

குருநாகல் போதனா வைத்தியசாலையின் புற்று நோய்ப் பிரிவுக்கு அவர்களது வேண்டுகோளின் பிரகாரம் பலதரப்பட்ட உதவிகள் செய்துள்ளேன். தாருல் உலூம் பாடசாலையில் வருடா வருடம் நடைபெறும் தேசிய சுதந்திர தின விழாவில் கலந்துகொள்ளும் மக்களுக்கு மரக்கன்றுகள் வழங்குவேன். இதனை இரு வருடங்களாக வழங்கியுள்ளேன். மக்களின் தேவையைக் கருத்திற்கொண்டு சக்கரநாற்காலிகளும் வழங்கி வருகின்றேன்.

இந்தப் பாடசாலையின் காணி வாங்குவதற்கும் இப்பாடசாலையின் கல்வி நடவடிக்கைகளுக்கும் தொண்டர் ஆசிரியர்களுக்கு கொடுப்பனவுகள் வழங்குதல், இப்படி பாடசாலையின் தேவையைக் கருத்திற்கொண்டு உதவிகள் வழங்கிவந்துள்ளேன். அதேபோன்று பொதுமக்களுடைய தேவையைக் கருத்திற் கொண்டு அவ்வப்போது பல்வேறுபட்ட உதவிகள் நிறைய செய்துள்ளேன்.

மேலும் வறிய நிலையிலுள்ள குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டுக்காக புலமைப்பரிசில் நிதி உதவிகள் செய்து வருகின்றேன். பல்கலைக்கழகம் செல்லும் பிள்ளைகளுக்கும் உதவிகளைச் செய்துள்ளேன். இதில் இன்று வைத்தியர்களாகவும் உள்ளனர். இவையெல்லாம் எனக்கு வெளியே சொல்ல விருப்பம் இல்லை. நீங்கள் கேட்டதற்கிணங்க சொல்லவேண்டிய நிர்ப்பந்த நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளேன். உருணவுப் பொதிகள், கொரோனா காலத்தில் நிறைய உதவிகள் செய்துள்ளேன். என்னுடைய கிராமத்தில் மட்டுமல்ல, குருநாகல் உள்ளிட்ட பல இடங்களிலும் உருணவுப் பொதிகள் என நிவாரண உதவிகள் சென்றடைந்துள்ளன.

Q உங்கள் குடும்பம் பற்றி கூறுவீர்களா?

நான் 1976களில் திருமணம் செய்தேன். மனைவி தல்மியா. மூத்த மகள் ரிஸ்மியா, மருமகன் அஸீம் வர்த்தகர். பேத்தி மென்பொருள் பொறியியலாளர் அம்ரா. இரண்டாவது மகன் ரிஸ்கான் வர்த்தகர். மருமகள் ஸுரபியா, மூன்றாவது ரிஸ்மியா. மருமகன் முஃதீ. வர்த்தகம் வாகனம், நான்காவது மகன் ரிங்கான் வர்த்தகம். மருமகள் ரிஸாதா. ஐந்தாவது மகள் ரிஸ்தா. மருமகன் மிலவளி ரீஸா வர்த்தகம், ஆறாவது மகள் ரூசைக்கா பல்கலைக்கழக பட்டதாரி. மருமகன் ஸல்மான் வர்த்தகம் முதலிய அனைவரும் என்னுடைய சமூகப் பங்களிப்பு நல்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. என்னுடைய வளர்ச்சியில் தம்பிமார்களுடைய பங்களிப்பு அளப்பரியது என்று ஈண்டு குறிப்பிடலாம். இந்தச் சந்தர்ப்பத்தில் என் தாய் தந்தையர்கள் உட்பட உற்றார் உறவினர்கள் ஊர் மக்கள் அனைவரையும் நன்றியுடன் ஞாபகப்படுத்திக்கொள்வதில் பெருமிதம் அடைகின்றேன்.

Q நீங்கள் இறுதியாகக் கூற விரும்புவது என்ன?

என்னை இந்தளவுக்கு உயர் நிலைக்கு கொண்டுவந்த அல்லாஹ்வுக்கே முதலில் எல்லாப் புகழும் உரித்தாகட்டும். அதற்காக ஏக வல்ல இறைவனுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

என்னைபோன்று பணம் படைத்த மக்கள் பலர் இருக்கின்றார்கள். அவர்களும் பொது மக்களுக்கு உதவிசெய்ய முன்வர வேண்டும். அவை மட்டுமல்ல, உயர் பட்டங்களையும் உயர் பாரட்டுகளையும் பெறவேண்டும் என்று எதிர்பார்க்கின்றேன். நாட்டுக்காகவும் நாட்டு மக்களுக்காகவும் இன மத வேறுபாடுகளின்றி மனிதாபிமான உதவிகள் செய்யவேண்டும். சிறந்ததொரு சமூக செயலாளராக வர வேண்டும். தான் மட்டுமல்ல, தமது பிள்ளைகளையும் இவ்வாறான உதவிகளைச் செய்யவதற்கான வழிகாட்டுதல்களைச் செய்யவேண்டும்.



தமிழன் சிறுகதை

மா(முன்னே)ற்றம் கண்டேன்

குமார் நடேசன்

அவர்கள் இருவருமே மலையக சமூகத்தின் விடிவெள்ளியாக வந்துசேர்ந்தார்கள். இருவரின் காலடி பாடசாலையில் பட்டதுமுதல் படிக்கும் மாணவர்களிடம் உத்வேகம் பிறந்தது.

இருவரின் பாடங்களிலும் வகுப்பிற்கு வந்து பாடங்கள் படிப்பிக்கும் சோம்பல் மாணவர்களை காண்பதே அரிதாகும். பாடத்தின் பகுதியை படிப்பிற்குரிய உற்சாகம் ஊட்டுவதிலேயே கவனம் செலுத்துவார்கள்.

அவர்களின் பாடங்கள் எப்போது வரும் என்று வழிமேல் விழி வைத்திருப்பார்களாம்.

பாடங்களை முன்கூட்டியே ஆயத்தம் செய்து அவர்களிடம் கேள்வியைக் கேட்டு அதற்கு பதிலை எவ்வளவு நாசுக்காக விளக்கம் கொடுத்து படித்துக் கொடுப்பதை கேட்பதற்கென்றே காத்துக் கிடப்பார்களாம்.

அதற்கு எடுத்துக்காட்டாக தவணைப் பரீட்சை வந்தது. அவர்கள் எடுத்த பாடங்கள் எல்லாவற்றிலும் மாணவர்கள் அதிமான மார்க்குகளை பெற்றிருந்தார்கள்.

ஒரு நாள் பள்ளிக்கூட ஆரம்ப கர்த்தாவின் ஞாபகார்த்த விழா நடந்தது. ஒவ்வொரு வருடமும் சிறந்த ஆசிரிய ஆசிரியைக்கு ஞாபகார்த்த சின்னம் யாருக்கு வழங்குவதென்ற முடிவு எடுக்கப்பட்டு இருந்தது.

அதிகமான ஆசிரிய ஆசிரியைகளதும், பெரும்பாலான பெற்றோர்களதும், மாணவர்கள் ஆகியோரின் கணிப்பின்படி இந்த இரு ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட்டது.

விழா நாளன்று இருவரையும் பாராட்டியதோடு இந்த பாடசாலைக்கு கிடைத்த அரும்பெரும் பொக்கிஷமாவார்கள் என்று பாராட்டி ஞாபகார்த்த சின்னங்களை பகிர்ந்தளித்தார்கள். இவைகளை பெரிதாகவோ பெருமையாகவோ எடுத்துக்கொள்ளாது மலையகத்தில் மாணவ சமுதாயத்தை முன்னேற்ற வேண்டுமென்ற வெறி அவர்களிடம் காணப்பட்டது.

இப்படி ஆசிரியர்களின் வேக ஓட்டத்துக்கு துணையாக அழகி என்ற ஆசிரியை பள்ளிகூடத்திற்கு வந்துசேர்ந்தார்.

இந்த ஆசிரியை பாடசாலைக்கு வந்து தனது விண்ணப்பத்தை அதிபரிடம் கையளித்த பிறகே அதிபரும் புதிய ஆசிரியை என்று தெரிந்துகொண்டார்.

அடுத்தடுத்த நாட்களில் அவளிடம் கற்ற மாணவர்கள் அவளைப்பற்றி பெருமிதமாக பேசிக்கொண்டார்கள். இது ஆசிரிய ஆசிரியருக்கிடையிலான பொறாமையை கிளறிவிட்டது.

தவணை முறை பரீட்சையும் வந்தது. அவள் படிப்பித்த பாடங்களிலெல்லாம் எல்லா மாணவர்களும் அதிகமான புள்ளிகளை பெற்றிருந்தார்கள்.

மறுமுறை தவணைப் பரீட்சையும் வர அதிபரிடம் அழகிக்கு எதிரான வாக்குறுதியை ஞாபகப்படுத்தி வினாத்தாள்களை தாங்களே தயாரித்தார்கள். பரீட்சை சம்மந்தமாக எதிலும் தொடர்புகொள்ளாது அழகி ஒதுங்கியே இருந்தாள்.

அழகி படிப்பிக்கும் அதே பாடங்களை படிப்பிக்கும் ஆசிரியைகள் கதைத்துக்கொண்டது இவள் காதிலும் விழுந்தது.

"நாங்கள் கடுமையான வினாக்களை கொடுத்துள்ளோம் மாணவர்கள் பதில் எழுதுவது கடினம்" என்றவாறு கதைத்துக் கொண்டார்கள்.

பரீட்சையும் முடிந்தது. விடைகள் எதிர்பாராதவிதமாக தெளிவாக நிறைய மாணவர்கள் எழுதியிருந்தார்கள். எந்த வழியிலும் குறைந்த புள்ளி போடுவதற்கான நிலையில் இல்லாமையால் முழு புள்ளிகளையும் போடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

மாணவர்கள் மீது அக்கறை கொள்வதுபோல் மாணவர்கள் மீது அளவற்ற அக்கறை செலுத்தும் ஆசிரியர்களிடம் அன்பும் மரியாதையும் வைத்திருந்தாள்.

பள்ளிக்கூடத்தில் ஓய்வு கிடைக்கும் நேரமெல்லாம் அந்த இரு ஆசிரியர்களோடுதான் கதைத்துக் கொண்டிருப்பாள். இது மற்றவர்களுக்கு வெறுப்பையும் சந்தேகத்தையும் ஏற்படுத்தியது. அவள், "இருவரையும் வைத்துக் கொண்டிருக்கிறாள்" என்ற அவச்சொல்லுக்கு ஆளானாள்.

மற்றவர்களின் அவதூறான பேச்சுகள் காதில் விழும். அதை மூவருமே பெரிதுபடுத்துவதில்லை. இவற்றை எல்லாம் புல்வாணமாக்க நாளும் வந்தது.

அழகியின் கணவனாகப் போகும் புதிய ஆசிரியர் ஒருவர் பாடசாலைக்கு வந்தார்.

பாடசாலையின் பொதுக்கூட்டம் நடந்தது. மேடையில் புதியவர் அமர்ந்திருந்தார். அவரை சுட்டிக்காட்டிய அதிபர் நமக்கு புதிய ஆசிரியர் கிடைத்துள்ளார். அடுத்ததாக அழகியை மேடைக்கு அழைத்தார்.

இருவரையும் அருகில் அமரச்செய்து "புதிதாக பாடசாலைக்கு வந்திருக்கும் இவர், நமது பாடசாலைக்கு ஆசிரியராக நியமனம் பெற்று வந்தவராவார். அத்தோடு நமது அழகி ஆசிரியையின் வருங்கால கணவருமாவார். இதை பாடசாலைக்கு வந்தபோதே இருவரின் வீட்டாரின் சம்மதத்தோடு முடிவாகி இருக்கின்றது'' எனக் கூறினார்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த சிலர் முகத்தில் அசடு என்னும் முகமூடி அணிந்தவர்களாக காணப்பட்டனர். மாணவர்களின் சார்பில் உற்சாகமான கைதட்டல் மண்டபத்தை அதிரவைத்தது.

அதிபரும் ஆசிரியர்களும் மாணவர்களும் நடந்த சம்பவங்களை கூறியபோது நான் அடைந்த முன்னேற்றம்போல் எனது பாடசாலையும் உயர்ந்துகொண்டு போனதில் இரட்டிப்பு சந்தோஷம்தான்.

நான் இல்லாத காலங்களில் பாடசாலையில் நடந்தவைகளை கூறியதில் எனது பேனா பெற்றெடுத்த வரிகளை கதையாக சமர்ப்பித்தேன்.

முற்றும்

(1 - 8)

(கோப்பி தோட்டத்தில்)

ஊஊஊஊஊஊஊஊஊஊ
சங்கு சத்தம்
காதை பீளக்கிறது....
கண்மூடி கண்முழிச்சா
பொழுது விடிஞ்சிருது...
கப்பளிய மடிச்சி
கொங்காணி செஞ்சிக்கிட்டு
கோப்பி பழம் பொருக்க
கௌம்புகிறா செவ்வந்தி....

வேட்டித்துண்ட கோவணமா
முருக்க் கத்தக்கட்டு
கத்தியோட கௌம்புகிறா
முனியாண்டி...

பெருசு காத்தமுத்து
கன்னக்க் கௌம்பல
போலிருக்கு ..
ஐயாவு வரலிங்களா...???
தயவாக கேட்டுக்குறா....

நோவா கூருக்குருப்பு
கூறுமக்கூட முடியலியே...
கன்னக்க் நா வரல
நீ போ ராச....

வரட்டு தும்மலொண்ணு
சலியோட வந்துவிட
ரத்தமும் அதிலிருக்கு...

முனியாண்டி பதறிவிட்டா
என்னாச்சிங்க
ஐயாவு. மறந்தேதும்
செஞ்சாரட்டா....

வேணாமப்பு
பெரட்டு நேரோ
சொணங்கிப்புடும்
நீ போயி பொலப்பப் பாரு
கடனெல்லாம் தீத்துப்புட்டு
நாலுக்காசு சேத்துக்கிட்டு
உடகூரோட ஊரு போன
அது போதும் ஏ ராசா....

ஒன்னும் நடக்காதய்யா....
என்று சொல்லி
பச்சிலை மருந்து ஏநோ
கொராரச்சில போட்டு வெச்சி
சுடு தண்ணீ வச்சி வந்து
மருந்து ஒன்னு அவன்
கொடுத்தான்...

என்னய்யா கூது என்று
காத்தமுத்து கொடுக்கும்
முன்ன
பேர் சொல்ல கூடாதையா
கண்ண மூடி மூச்சி ஒன்றில்
குடிச்சிருங்க..என்று
சொன்னான்
முனியாண்டி...

உகலம்பட்டி ஊருக்குள்ள
முனியாண்டி என்று
சொன்னா நல்லாவே
மவுசிருக்கு கைமருந்து
தும்மினு அவனுக்கு
கன்னுமொரு பேரிருக்கு...

பாம்பு தீண்டினாலும்
பல்லு வாமி கட்டினாலும்
பச்சிலை மருத்துவத்தில்
எல்லாமே ஓடிவிடும்...

கூந்த
பாலாபோன
கண்டியில் தான்
ஒன்னு ஒன்னு
பழிக்கவில்ல
காலிக்கு நேந்துக்கிட்ட
நேத்திய தீக்கவில்ல
அது தான் வாட்டுதுவோ
யாரு கண்டா...

ஊரு போயி சேந்தொடன
அது மொரு தீத்தடனுமின்னு
மனசுக்குள்ள
நெனச்சிக்கிட்டா...
ஐயாவு அப்பிடியே
படுத்துக்குங்க நா
பொறவு வந்து பாத்துக்குறே

கோப்பி பெரட்டு நோக்கி
பொறப்பட்டா முனியாண்டி
முக்காயி நெனப்பு கூப
அப்பப்போ வந்தாலும்
காத்தமுத்து
ஐயாவின் நெனப்பு அது
மாத்துறது

வந்து சேந்த எடத்தில் கந்த
குடும்பம் தான் சொந்தம்
பாதி அவர் பொண்ணு
செவ்வந்திக்கு கவன் மேல
ஒரு கண்ணு...

முனியாண்டி மனமெல்லாம்
மூக்காயி நெறஞ்சிருக்க
பெத்த ரெண்டு பிள்ளைகளும்
அந்த நெனப்புக்கு
முன்னவரும்...

கூருந்தாலும் காத்தமுத்து
குடும்பத்துக்கு கூப்போதைக்கு
கூவனவிட்டா யாருமில்ல...
பெரட்டுக்களம் வந்துருச்சு

எளவெடுத்த நாயி பய
எது திங்க போன நிம்மி
நேரத்துக்கு வந்து தொல
எட்டி மிதிச்சிருவே...

என்று சொல்லி நேரமாகி
வந்துவிட்ட முனியாண்டி
முதுகுத்தண்ட தங்காணி
கையில் கூருந்த சவுக்கு
சாணிக்கோலம் போட்டுருச்சி....

அடியயும் வாங்கிக்கிட்டு
காடுவெட்ட பொறப்பட்டா
முணிமாண்டி முதுகுத்தண்டின்
ஊரிடத்தில் ரத்தம் கசிகிறது

கசிந்த அந்த ரத்தம்
கோப்பி மர வேரொரு
ஒட்டி ஒழுகிவிட
அது உறாமாக போகிறது....

முனியாண்டி நெஞ்சம்
கூப்போ மூக்காய
எண்ணிவிட காத்தமுத்து
நெனப்புகளும் நெஞ்சத்தை
வருடுறதே....

(சொல்ல மறந்த கதை
கன்னும் சொல்லப்படும்)

தொடரும்...
எம். ராமதாஸ்
கூறம்பொடை.

தமிழன் தொடர்கதை

முகநூல் காதல்

புத்தளம் ஸாலிஹ் அஸீம்

அத்தியாயம் 51

அவள் அங்குமிங்குமாய் எதையோ ஆர்வத்தோடு தேடிப் பார்த்துக்கொண்டிருந்தாள். அவளின் முகத்தில் விரக்தியும் ஏமாற்றமும் தெரிந்துகொண்டிருந்தது. அவளுடைய அழகான கூந்தல் பிடுங்கிப் போடப்பட்ட புற்களாய் கலைந்திருந்தது. சிகையலங்காரம் செய்யப்பட்டு அழகு சிலைபோன்ற அவள் முகத்தில் நகக்கீறல்களால் கிறுக்குச் சித்திரம் வரையப்பட்டிருந்தது. அவள் அணிந்திருந்த இரவு ஆடை சில பக்கங்களை ஜன்னலாக்கியிருந்தது. அவள் மேனியின் சில பகுதிகள் தெரிந்துகொண்டிருந்தன. அதில் கசிந்துப்போயிருந்த இரத்தக் கோடுகள் சில மனித மிருகங்களின் கைவரிசையை விம்பமாய் காட்டிக்கொண்டிருந்தன.

மார்புக்கச்சை விலகி அதன் வழியாய் அவள் அழகுகள் வெளியே தெரிந்துகொண்டிருந்தன. நெஞ்சு, கழுத்து, கை காலென்று அனைத்தும் மனித மிருகங்களால் சிதைக்கப்பட்டிருந்தன.

ஆனாலும் அவள் தேடியது அவளுக்குக் கிடைக்கவில்லை. எவ்வளவு தேடியும் அவ்வறைக்குள் அது இருக்கவில்லை. பின்னர் சில வினாடிகள் மௌனமாய் அமர்ந்திருந்தாள்.

என்ன செய்வது, எங்கே தேடுவது என்று குழப்பத்துடன் சிந்தித்தவளுக்கு சிரமம் கொடுக்காமலேயே சிந்தனையில் ஓர் இடம் நினைவுக்கு வந்தது.

கட்டாயமாக அந்த இடத்தில் அது இருக்கும் என்று அவள் தேடியது. இருக்கும் இடத்தை ஒருவாறு யூகித்துக்கொண்டாள்.

ஆமாம் அந்த இடத்தில் நிச்சயமாக அது இருக்கும் என்று தன்னுடைய மனதிற்குள் சொல்லிக்கொண்டவள்,

அது அவ்விடத்தில் இல்லாமலிருக்க சந்தர்ப்பமேயில்லை என்று தன் மனதிற்குள் நம்பிக்கையுடன் சொல்லிக்கொண்டு ஒரு மன நிலை பாதிக்கப்பட்டவளைப்போல சிரமத்துடன் எழுந்து தட்டுத் தடுமாறி நேராக மொட்டை மாடியை நோக்கி விரைந்தாள்.

அங்கு அவள் நினைத்ததைபோலவே அவளின் நம்பிக்கை வீண் போகவில்லை. அம்மொட்டை மாடியில் பார்க்க அவ்விடத்தில் நேருக்கும் குறுக்காகவும் உடைகள் காயப்போடப்பட்டிருந்தன. அதனைக் கண்டதும் அவளின் உச்சக்கட்ட சோகத்தையும் மறந்து ஒரு சிறு புன்னகை பூத்து மறைந்தது. அவளுடைய வாழ்க்கையில் நினைத்தது எல்லாமே நினைத்தபடி நிறைவேறியது. ஆசைப்பட்டது எல்லாமே கிடைத்தது. இருந்தும் இது மட்டும் எப்படி கிடைக்காமல் போகும். என்கின்ற வினா அவளுக்குள் எழுந்துகொண்டே இருந்தது.

சொல்லப்போனால் இதுதான் அவளுக்குக் கிடைத்த முதல் தோல்வியாக இருக்கவேண்டும். அந்தளவுக்கு ஏமாற்றங்களை காணாதவள் அவள். இவளுக்கு நிறைய விடயங்கள் சாதகமாகவே முடிந்திருக்கின்றன. ஆனாலும் இந்த ஒரு தோல்வியை அவளால் தாங்கிக்கொள்ள முடியவில்லையே..... அவ்வாறு தாங்கிக்கொள்ளும் அளவுக்கு இலேசான தோல்வியல்ல அது. அதனாலதானோ என்னவோ பலர் சொல்வார்கள்.இறைவன் யாருக்கும் அவர்கள் சக்திக்கு மீறி சோதிப்பதில்லை என்று. அவர்கள் தாங்கும் அளவுக்குதான் கவலையைக் கொடுப்பான். அது இவளுடைய விடயத்தில் மட்டும் முற்றாகவே மாறிருக்கின்றது. ஆனாலும் இவளுடைய சோகம் யாராக இருந்தாலும் அவர்களால் அது தாங்கிக்கொள்ள முடியாதவொன்றுதான்.

அவள் சுற்றும் முற்றும் பார்த்தாள். கண்ணுக்கு எட்டிய தூரம் மட்டும் அங்கு யாருமே இருக்கவில்லை. அதனால் அவளின் மனதுக்குள் சின்ன சந்தோஷம். அது வாடகைக்கு விடப்படும் தனி அறைகளைக்கொண்ட ஒரு தொகுதி. வேறு இடங்களிலிருந்து வருபவர்கள் தங்கள் வேலை முடியும் வரைக்கும் தற்காலிகமாக அங்கு ஓர் அறையினை வாடகைக்கு அமர்த்தி தங்கிவிட்டுச் செல்வார்கள். அதுபோல்தான் அவளும் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு வந்து அங்கு தங்கியிருக்கிறாள். தனியாக அல்ல, பிரகாஷோடுதான் இருக்கிறாள் என்பதை விட இருந்தாள்.

தொடரும்...

முட்டைகோஸ் அல்வா

தேவையான பொருட்கள்:

முட்டைகோஸ் - 1/2 கப்
நெய் - 1/4 கப்
கொழுப்பு நீக்காத பால் - 2 கப்
சர்க்கரை - 1/2 கப்
ஏலக்காய் பொடி - 1/2 ஸ்பூன்
நறுக்கிய பாதாம் மற்றும் முந்திரி - 1 டேபிள் ஸ்பூன்

செய்முறை:

ஒரு பாத்திரத்தை அடுப்பில் வைத்து நெய்யை ஊற்றவும். அது உருகியதும் பொடியாக நறுக்கிய முட்டைகோஸை போட்டு நன்றாக வதக்கவும். பின்பு அதில் பாலை ஊற்றி வேக வைக்கவும்.

பால் பாதியளவு சுண்டியதும், அதில் சர்க்கரை, நெய் சேர்த்துக் கிளறவும். கலவை கெட்டியாகும் வரை மிதமான தீயில் வேக வைக்கவும். கடைசியாக ஏலக்காய் தூள் சேர்த்து கொதிக்க வைக்கவும்.

தொடர்ந்து கிளறிக்கொண்டே இருந்து, அல்வா பதம் வந்ததும் நறுக்கிய பாதாம் மற்றும் முந்திரி தூவி இறக்கவும். சுவையான முட்டைகோஸ் அல்வா ரெடி.

பாதாம் எண்ணெய்

சரும நிறத்தை மாற்றுவதற்கு அனைவரும் முயற்சி செய்துகொண்டுதான் இருப்போம். இதற்கு நாம் பெரும்பாலாக உபயோகப்படுத்தும் பொருள் என்றால் அது கடைகளில் விற்கும் கிரீம்கள்தான். இந்தக் கிரீம்கள் எப்போதும் உங்களுக்கு நிரந்தரத் தீர்வை கொடுக்காது. அதற்குப் பதிலாக சரும சிதைவைதான் ஏற்படுத்தும். இதை தவிர்க்க ஒரே வழி இயற்கையான முறையில் சரும நிறத்தை அதிகரிக்க முயற்சிப்பதுதான். சரும நிறத்தை அதிகரி ப்பதற்கு எண்ணெய்கள் நமக்கு உதவும். அதில் பலரும் பரவலாக பயன்படுத்துவது ஒலிவ் ஒயில், பாதாம்

எண்ணெய் போன்றவைதான்.

பாதாம் எண்ணெயை எவ்வாறு சருமத்திற்கு பயன்படுத்தலாம் என்பதை பார்ப்போம்.

கருவளையம் மறைய:

ஒரு பௌலில் பாதாம் ஒயில் மற்றும் விற்றமின் 'ஈ' ஒயில் இரண்டையும் சேர்த்து மிக்ஸ் பண்ணவும். பின் இதை கருவளையம் உள்ள இடத்தில் தடவி 5 நிமிடம் மசாஜ் பண்ணவும். இதுபோல் செய்துவந்தால் உங்கள் கண்களிலுள்ள கருவளையம் உடனடியாக நீங்கிவிடும்.

பருக்கள் நீங்க:

முகத்தில் இருக்கும் பருக்களை நீக்குவதற்கு பாதாம் எண்ணெய் 1 டேபிள் ஸ்பூன், வேப்பிலைப் பொடி 1 டேபிள் ஸ்பூன் சேர்த்து மிக்ஸ் பண்ணி சருமத்தில் எந்த இடத்தில் பரு இருக்கிறதோ அந்த இடத்தில் தடவி காய வைக்கவும் (இரவு நேரத்தில் இதை செய்வது நல்லது).

இந்த முறையை நீங்கள் ஐந்து நாட்கள் தொடர்ந்து செய்துவந்தால் முகத்தில் உள்ள பரு மற்றும் சரும்புள்ளிகள் நீங்கி முகம் பொலிவு பெரும்.

உதடு சிவப்பாக:

ஒரு பௌலில் அரை டேபிள் ஸ்பூன் தேன், 1 துளி பாதாம் ஒயில் சேர்த்து மிக்ஸ் செய்து தினமும் உதட்டில் தடவி வந்தால் கருப்பு நிறம் மாறி, உதடு சிவப்பழகு பெறும். மேலும் உதடு வெடிப்பதையும் சரிசெய்யும்

முடி வளர்ச்சிக்கு:

பாத்திரம் ஒன்றில் 2 டேபிள் ஸ்பூன் பாதாம் எண்ணெய், 2 டேபிள் ஸ்பூன் விளக்கெண்ணெய் சேர்த்து Double boiling Method மூலம் சூடாக்கிக்கொள்ளவும். பின் இதை தலையில் தடவி 5 நிமிடம் மசாஜ் செய்து 20 நிமிடம் ஊறவைக்கவும். 20 நிமிடம் கழித்து தலையை அலசி விடலாம். இதை நீங்கள் வாரத்திற்கு ஒரு முறை உபயோகப்படுத்தி வரலாம். இதன் மூலம் முடி உதிர்வது நின்று முடி வளர ஆரம்பிக்கும்.

காரிகைகளும் தொப்பை குறைய...

இன்று பெரும்பாலான மக்கள் தொப்பையால் அதிகம் வருத்தம் கொள்கிறார்கள். வயது அதிகரிக்கும்போது, இளம் வயதில் நாம் சாப்பிட்ட உணவுகளின் தாக்கம் தெரியும். அப்படி இளம் வயதில் நாம் உண்ட உணவுகளின் ஓர் விளைவுதான் தொப்பை. அத்தோடு தற்போது பலரும் உட்கார்ந்துகொண்டே வேலை செய்து, உடலுக்குப் போதுமான வேலையைக் கொடுக்காமல் இருப்பதால், உண்ணும் உணவுகளிலுள்ள கொழுப்புகள் வயிற்றுப் பகுதியில் தேங்கி தொப்பையை உண்டாக்குகின்றன

கொழுப்புத் தேக்கத்தினால் உருவாகும் தொப்பை வயிற்றை அசிங்கமாக வெளிக்காட்டுவதோடு மட்டுமன்றி, டைப்-2 சர்க்கரை நோய், இதய நோய், உயர் இரத்த அழுத்தம் போன்ற பல தீவிரமான பிரச்சனைகளின் அபாயத்தையும் அதிகரி க்கிறது. ஆகவே இந்த பிரச்சனைகளில் இருந்து தப்பிக்க வேண்டுமானால், முதலில் தொப்பையைக் குறைக்க முயல வேண்டும். தொப்பையைக் குறைக்க வேண்டுமானால், அதற்கு பல வழிகள் உள்ளன.

தொப்பையைக் குறைக்க உதவும் எளிய வழிகள்

உடலுறுப்பு'களுக்கு சிறிது கொழுப்புகளின் ஆதரவு மிகவும் அவசியமானது என்று உடல்நல நிபுணர்கள் கூறுகின்றனர். ஆனால், அந்த கொழுப்புகள் உடலில் அதிகமாகும்போது, அது உடலில் நோய்களுக்கான வீடாக மாறிவிடுகிறது. எனவே, உடலிலுள்ள அதிகப்படியான கொழுப்பைக் குறைக்க பின்வரும் சில எளிய வழிகளைப் பின்பற்றி வந்தாலே தொப்பையும் குறையும், ஆபத்தான நோய்களின் தாக்கத்திலிருந்தும் விடுபடலாம்.

தினமும் 10 கிராம் நார்ச்சத்தை உட்கொள்ளவும்

நிபுணர்களின் கூற்றுப்படி, ஒருவர் தினமும் 10 கிராம் கரையக்கூடிய நார்ச்சத்து உட்கொண்டு வந்தாலே சிரமமின்றி தொப்பையைக் குறைக்கலாம். இந்த கரையக்கூடிய நார்ச்சத்தைப் பெற தினமும் 2 ஆப்பிள் சாப்பிடலாம் அல்லது ஒரு கப் பச்சை பயறு/பச்சை பட்டாணியை உட்கொள்ளலாம். ஆனால், எந்தவொரு உணவும் வயிற்றுக் கொழுப்பை நொடியில் கரைத்துவிடாது என்பதை ஒவ்வொருவரும் நினைவிற்கொள்ள வேண்டும். இயற்கையான வழியில் தொப்பையைக் குறைக்க பொறுமையும், சரியான அணுகுமுறையும் அவசியம்.

20 நிமிட உடற்பயிற்சி அவசியம்

தினமும் குறைந்தது 20 நிமிடம் உடற்பயிற்சியை செய்ய வேண்டும். அதுவும் அந்த உடற்பயிற்சியானது வியர்வையை வெளியேற்றும் வகையில் இருக்க வேண்டும் மற்றும் உடலின் பெரும்பாலான பகுதிகள் வேலை செய்யுமாறும் இருக்கவேண்டும். இம்மாதிரியான உடற்பயிற்சியானது ஜூம்பா, கால்பந்து, நீச்சல் அல்லது கார்டியோ பயிற்சிகளில் கிடைக்கும்.

7-8 மணிநேர தூக்கம்

எப்போது ஒருவர் குறைவான அளவில் தூக்கத்தைப் பெறுகிறார்

களோ, அப்போது அவர்களின் மெட்டபாலிசம் குறைந்து, உடலில் கொழுப்புகள் அதிகமாகவும், வேகமாகவும் தேங்க வழிவகுக்கும். ஆகவே, தொப்பையைக் குறைக்க வேண்டுமானால், தினமும் 7-8 மணிநேர தூக்கத்தை கட்டாயம் பெற வேண்டும். தொப்பையைக் குறைக்க தூக்கம் மட்டும் போதாது என்றாலும், இதுவும் அவசியமான ஒன்று.

மன அழுத்தத்தைத் தவிர்க்கவும்

அனைவரது வாழ்க்கையிலும் மன அழுத்தம் இருக்கும். ஆனால், தொப்பையைக் குறைக்க வேண்டுமானால், ஒருவர் மன அழுத்த அளவைக் கட்டுப்படுத்த வேண்டும். ஏனெனில், ஒருவருக்கு தொப்பை வருவதற்கு மன அழுத்தமும் ஒரு காரணம். இந்த மன அழுத்தத்தைக் குறைக்க தியானம் செய்வது, யோகா செய்வது, குடும்பத்தினருடன் அல்லது நண்பர்களுடன் நேரத்தை செலவிடுவது அல்லது நிபுணர்களின் உதவியைப் பெறலாம்.

இஞ்சி - எலுமிச்சை பானம்

ஒரு துண்டு இஞ்சியை பொடியாக நறுக்கி, அதை மிக்சர் ஜாரில் போட்டு, அதில் ஒரு டம்ளர் நீரை ஊற்றி நன்கு அரைத்து ஒரு டம்ளரி ல் வடிகட்டி, அத்துடன் ஒரு டீஸ்பூன் எலுமிச்சைச் சாறு மற்றும் 1/2 டீஸ்பூன் சீரகப் பொடி சேர்த்து கலந்து குடிக்க வேண்டும்.

எடை இழப்பு கோப்பி

ஒரு டீஸ்பூன் இன்ஸ்டன்ட் கோப்பி தூளை ஒரு கப் சுடுநீரில் போட்டு நன்கு கலந்து, அத்துடன் 1 டீஸ்பூன் ஆளி விதை பொடியை சேர்த்து கிளறி, மேலே சிறிது துருவிய டார்க் சாக்லேட்டைத் தூவி குடித்தால், தொப்பை குறையும்.

புதினா க்ரீன் டீ

ஒரு பாத்திரத்தில் ஒரு கப் நீரை ஊற்றி. அதை கொதிக்க வைத்து, அதில் 5-7 புதினா இலைகளை சேர்த்து 5 நிமிடம் கொதிக்க வைத்து இறக்கி, சிறிது க்ரீன் டீ இலைகளை சேர்த்து 10 நிமிடம் மூடி வைத்து பின் வடிகட்டிக் குடிக்க வேண்டும்.

இளநீர் பானம்

ஒரு கப் அன்னாசி ஜூஸுடன் ஒரு கப் இளநீர் மற்றும் 1/2 டீஸ்பூன் சோம்பு தூள் மற்றும் 1 சிட்டிகை ப்ளாக் சால்ட் சேர்த்து கலந்து, உடனே குடிக்க வேண்டும். இப்படி தினமும் குடித்தால், உடல் சூடு குறைவதோடு, தொப்பையும் குறையும்.

எலுமிச்சை நீர்

ஒரு கப் வெதுவெதுப்பான நீரி ல், 1 எலுமிச்சையின் சாறு மற்றும் 1 டேபிள் ஸ்பூன் தேன் சேர்த்து கலந்து, தினமும் காலையில் வெறும் வயிற்றில் குடித்து வந்தால், வீங்கி பானை போன்று இருக்கும் தொப்பை குறையும்.

மார்பக புற்றுநோயை தடுக்கும் வழிமுறைகள்

பொதுவாக புற்றுநோயால் அதிகம் பாதிக்கப்படுவது பெண்கள் என்பதுடன் அவர்களை அதிகம் பாதிப்பது மார்பக புற்றுநோய் என்பதும் தெரியவந்துள்ளது. இதுவரை 50 வயதுக்கு மேற்பட்டோர் மத்தியில் அதிகமாக காணப்பட்ட இந்நோய், தற்போது முப்பது வயதிலேயே வருகிறது.

புற்றுநோய் வருவதற்கான காரணங்கள் புற்றுநோய் நம்மை தாக்காமல் இருக்க, நாம் செய்ய வேண்டியது என்ன, இதற்கான பிரத்தியேகமான பரிசோதனைகள் ஏதேனும் உள்ளனவா என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம்..

புற்றுநோய் வருவதற்கான காரணங்கள்:

உறவினர்களில், குறிப்பாக, தாய் அல்லது சகோதரிக்கு மார்பகப் புற்றுநோய் இருந்தால் அந்த குடும்பத்து பெண்ணுக்கு இந்தப் புற்றுநோய் வர வாய்ப்புகள் அதிகம் என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றன. அதேபோல் மிகச் சிறுவயதிலேயே பூப்படைவது, ஏதாவது உடல்நலக்கோளாறுகளுக்காக அதிகளவில் ஹார்மோன் மாத்திரைகளை எடுத்துக்கொள்வதும், உடல் பருமன், உடற்பயிற்சியின்மை, புகை மற்றும் மதுப்பழக்கம், இரத்த அழுத்தம், சர்க்கரை நோய், ஒவ்வாத மேற்கத்திய உணவுப் பழக்கங்கள், அதிக கொழுப்பு உணவுகள் போன்ற வாழ்க்கை முறை மாற்றங்களும் மார்பக புற்றுநோய்க்கு காரணங்களாக கூறப்படுகின்றது.

தடுக்கும் வழிமுறைகள்:

பெண்கள் மாதம் ஒருமுறையாவது தங்களது மார்புகளை தாங்களாகவே சோதனை செய்துகொள்ளும் 'சுய மார்பக பரிசோதனை' அவசியமான ஒன்றாகும். பரிசோதனையின்போது, மார்பில் வீக்கம், மார்பக தோலில் அத்த சுருக்கம், மார்பகத்தில் இரத்தக்கசிவு போன்ற வித்தியாசமான அறிகுறிகள் தென்பட்டால், உடனடியாக மருத்துவரின் உதவியை நாடவேண்டும்.

மெமோகிராம்:

இது ஒரு எக்ஸ்ரேயாகும். 'மெமோகிராம்' என்ற எக்ஸ்ரே டெஸ்ட் ஆனது குறைந்தளவிலான கதிர்வீசின் மூலம் மார்பகத்தில் புதிதாகத் தோன்றும் மாற்றங்களைக் கண்டறிந்து விடும். மார்பகத்தில் கட்டிகள் இல்லாவிட்டாலும்கூட, கட்டிகள் வருவதற்கான அறிகுறிகள், கல்சியம் அளவில் மாற்றங்களை இந்த பரிசோதனையானது காட்டிக் கொடுத்துவிடும். இதன் மூலம் நோய் வருமுன் கண்டறிந்து சிகிச்சை கொடுக்க முடியும் என்பது இதன் சிறப்பம்சமாகும்.

குடும்ப வரலாறு இருந்தால் ஒவ்வொரு வருடமும் மெமோகிராம் செய்துகொள்ள பரிந்துரைக் கப்படுகிறது. அறிகுறி இல்லாவிட்டாலும் இதை செய்யலாம்.

முலைக்காம்பு வெளியேற்றம், வலி அல்லது வீக்கம் போன்ற மார்பக புற்றுநோய் அறிகுறிகளை நீங்கள் சந்தித்தால் மெமோகிராம் பரிசோதனை வைத்தியரின் ஆலோசனையின் மூலம் செய்துகொள்ளலாம்.

அல்ட்ராசவுண்ட்: புற்றுநோய் நீர்க்கட்டிகள் மற்றும் மெமோகிராமில் கண்டறிய முடியாத மார்பக மாற்றங்களை கண்டறிய இவை உதவும். மெமோகிராம் அடர்த்தியான திசுக்களிலுள்ள அசாதாரணங்கள் கண்டறிய முடியாமல் போகலாம். மெமோகிராம்கள் கதிர்வீச்சை பயன்படுத்துவதில்லை. அதனால் இது பாதுகாப்பானவை. ஐம்பது வயதுக்கு மேற்பட்ட பெண்கள் ஆண்டுக்கு ஒரு முறை 'மெமோகிராம்' பரிசோதனையை செய்துகொள்வது அவசியம்.

காரைக்கவி

சீத்துவக்கேடு 179

சிவகாமி அம்மன் கோயில்லை நாடகம் எண்டால் அப்பு என்ன வேலை இருந்தாலும் விட்டுப் போட்டு வெளிக்கிட்டுவார். அண்டைக்கும் அறிவிச்சதைக் கேட்டுப் போட்டு போக ஆயத்தம் செய்தார். தனிய சிவகாமி அம்மன் கோயில் எண்டில்லை எங்க எந்தக் கோயிலிலை நாடகம் போட்டாலும் அவர் ஆஜராகிவிடுவார். அப்பு போறதெண்டால் பெரிசா ஒரு ஆயத்தமும் இல்லை நல்ல பெரிய ஊர்ப் போயிலையும் நெருப்புப் பெட்டியும் எடுத்து மடியிலை கட்டுவார் அவ்வளவுதான்.

சனத்துக்கை கிட்ட இருக்காமல் கொஞ்சம் தூரவா மரத்தடி ஒண்டிலை சாஞ்சு கொண்டு, இருந்து கொண்டு சுருட்டையும் புகைச்சுக் கொண்டு, கச்சான் கொட்டையையும் சப்பிக் கொண்டு, நாடகம் பாக்கிறதில்லை இருக்கிற சுகம் வேறை ஒண்டிலையும் இல்லை எண்டுவார். அப்பு சனத்துக்கை பொதுவா இருக்க விரும்ப மாட்டார் வேர்வை நாத்தமும் கச்சானை அரை அரை எண்டு அரைச்சு அடைஞ்சு போட்டு அமத்தி விடுகிற குசு நாத்தமும் சேர்ந்து வாற நாத்தத்தை தன்னால சகிக்கேலாது எண்டுவார்.

அண்டைக்கும் போகவேண்டு வெளிக்கிட்டவர் சுருட்டு ஒண்டைச் சுத்திக்கொண்டு அட மோனை உனக்கு நாடகம் எண்டால் என்னண்டு தெரியுமே எண்டு என்னட்டைக் கேட்டார். நான் அப்பு உண்ணான எனக்கொண்டும் தெரியாது எண்டு சொல்லிக்கொண்டு இருக்க குசினி வேலையை முடிச்சுப்போட்டு ஆச்சியும் வந்து தலைவாசல் குந்திலை குந்தினா.

நான் தெரியாது எண்டு சொல்லவும் அடே நாடகம் எண்டால் நாடு + அகம் எண்டு வரும். அப்பிடி எண்டால் உள்ளம் விரும்புற மாதிரி ஆடலும் பாடலும் சேர்ந்து ஒண்டா இருப்பது நாடகம் எண்டு அர்த்தம் வரும் எண்டார் அப்பு. இன்னும் வடிவாச் சொல்லுறது எண்டால் நாடு.. அகம்.. அதாவது அகம் நாடு.. உனக்குள்ளை பார் உன்னை ஆரெண்டு உணர்ந்து கொள் எண்டும் சொல்லலாம் கண்டியோ எண்டார்.

உடன ஆச்சி நாடு + அகம் எண்டால் நாட்டை அகத்தில் கொண்டதே நாடகம். அதாவது ஒரு நாட்டின்ரை கடந்த காலத்தையும் இநிகழ்காலத்தையும் எதிர் காலத்தையும் அது காட்டுது எண்டும் அர்த்தம் எடுக்கலாம் எண்டா... ஒரு வரியில் சொல்லவேணும் என்டால் நாடகம் உலக நிகழ்ச்சிகளை காட்டும் ஒரு கண்ணாடி எண்டா.

தொல்காப்பியத்துக்கு உரை எழுதினவை 'இல்லது, இனியது, நல்லது எண்டு புவரால் நாட்டப்படுவது நாடகம்' எண்டு பொருள் சொன்னவை எண்டார் அப்பு.

உடன
நான் அப்ப
தொல்காப்
பியத்திலை
நாடகம் பற்றிச்
சொல்லி இருக்குதோ எண்டு கேக்கவும் உடன அப்பு
பேந்தேன்னே அவர் தொல்காப்பியர் நாடகம்
எண்டு சொல்லாம உலவ உரை எழுதினவை சும்மா
முகப்பாத்திக்கு உங்க சில அரசியல்வாதிமார் சும்மா
எழுதி வாசிக்கிற மாதிரி எழுதினவையோ எண்டு
கொஞ்ச கோபமாக் கேட்டார்.

அப்பு உப்பிடி கோவமாச் சொல்லவும் ஆச்சி அவற்றை கோவத்தை தணிக்கிற மாதிரி அட பொடி "நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும் பாடல் சான்ற புலனெறி வழக்கம்" (தொல்: அகத்: 53) எண்டு தொல்காப்பியர் சொல்லி இருக்கிறார் எண்டா.

உந்த நாடக வழக்கு எண்ட சொல் அந்தக் காலத்தில இருந்த நாடகக் கலை வடிவத்தின் மரபினை சொல்லுது எண்டு விஷயம் தெரிஞ்ச ஆக்கள் சொல்லுகினம் எண்டா.

அடே தொல்காப்பியர் நாடகத்தைப் பற்றிச் சொல்லுறார் எண்டால் அவற்றை காலத்துக்கு முதலே எங்கட ஆக்கள் நாடகத்தை ஒரு பெரிய கலையா வளத்திருக்கினம் எண்ட ஆச்சி தொல்காப்பியர் கூத்து, ஆடல் (ஆட்டம்) எண்டு ரெண்டு வகையளை சொல்லி இருக்கிறார் எண்டா அவற்றை காலத்தில வள்ளிக் கூத்து, முன்தோர்க்குரவை, பின்தோர்க்குரவை, வெறியாடல், காந்தள், அமலைக் கூத்து, துடிநிலை, சுழல் நிலைக் கூத்து, பிள்ளையாட்டு எண்டு விதம் விதமான நாடகங்கள் நடந்திருக்கு எண்டு உதைப் பற்றி ஆராச்சி செய்தவை சொல்லுகுனம் எண்டா.

ஆச்சி உப்பிடிச் சொன்னதை சுருட்டைச் சுத்திக்கொண்டே கேட்டுக் கொண்டிருந்த அப்பு.

"கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்
உணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியின்
நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே"

(தொல்: மெய்ப்: 27) எண்டு நாடகத்தை ரசிக்கிறதுக்கு கண்ணும் காதும் முக்கியம் எண்டுறார் தொல்காப்பியர் எண்டவர் கண்ணால பாக்கிறதுக்கும் காதால கேக்கிறதுக்குமான ஒரு கலை எண்டால் அது நாடகந்தான் எண்டார்.

(தொடரும்)

வித்வ கலாபூஷணம் ஜோதிட திலகம் சிவஸ்ரீ வெங்கட கப்பரமணிய குருக்கள்

இவ்வார இராசி பலன்கள்

மேஷ ராசி அன்பர்களே!

குடும்பத்தில் உற்சாகமும் மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும். பணவரவுக்குக் குறைவிருக்காது. கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணைவழி உறவினர்களால் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். அலுவலகத்தில் திருப்திகரமான போக்கே காணப்படும். வேறு வேலைக்குச் செல்ல விரும்புபவர்கள் அதற்கான முயற்சிகளில் இப்போது ஈடுபடலாம். நல்ல வேலை கிடைக்க வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் எதிர்பார்க்கும் இலாபம் கிடைக்கும். சிலர் வாடகை இடத்தில் இருந்து சொந்த இடத்துக்கு கடையை மாற்றி விரிவுபடுத்துவீர்கள். பெண்கள் குடும்ப நிர்வாகத்தில் பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம். கணவருடன் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்படும் என்றாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

ரிஷப ராசி அன்பர்களே!

குடும்பத்தில் இதுவரை இருந்து வந்த சிறுசிறு பிரச்சினைகள் நீங்கி, மகிழ்ச்சியும் உற்சாகமும் பெருக்கெடுக்கும். வாழ்க்கைத்துணைவழியில் ஆதாயம் ஏற்படும். பிள்ளைகள் உங்கள் எண்ணப்படி நடந்துகொள்வார்கள். அரசாங்க வகையில் எதிர்பார்க்கும் காரியம் இழுபறியாகும். அலுவலகத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலையே காணப்படும். சக பணியாளர்கள் உங்களுக்கு அனுசரணையாக நடந்துகொள்வார்கள். ஒரு சிலருக்கு அவர்கள் விரும்பியபடி இடமாறுதல் கிடைக்கும். வியாபாரத்தின் காரணமாக சிலர் தொலைதூரப் பயணங்களை மேற்கொள்ள நேரும். பணியாளர்களின் ஒத்துழைப்பு நன்றாக இருக்கும். சக வியாபாரிகளிடையே இணக்கமான சூழ்நிலை உண்டாகும். பெண்களுக்கு தேவையற்ற செலவுகள் ஏற்பட்டு மனதை சஞ்சலப்படுத்தும். வாரப் பிற்பகுதியில் உற்சாகமான சூழ்நிலை ஏற்படும்.

மிதுன ராசி அன்பர்களே!

பணவரவு இருந்தாலும் வீண்செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். தந்தையிடம் எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படும். சகோதரர்களால் அனுகூலம் உண்டாகும். பணியின் காரணமாக பிரிந்திருந்த தம்பதி ஒன்று சேரும் வாய்ப்பு ஏற்படும். வாகனத்தில் செல்லும்போது கவனமாக இருக்கவும். வேலைக்குச் செல்பவர்களுக்கு அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும். ஒரு சிலருக்கு பதவிஉயர்வு அல்லது ஊதிய உயர்வு கிடைப்பதற்குமான சந்தர்ப்பம் கனிந்து வரும். வியாபாரத்தில் முக்கிய முடிவுகள் எதையும் இப்போது எடுக்கவேண்டாம். அவசியம் முடிவு எடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டால், தகுந்தவர்களிடம் ஆலோசனை கேட்டு செய்யவும். பெண்களுக்கு திருப்திகரமான வாரம். பணியில் இருக்கும் பெண்களுக்கு பணிச்சுமையின் காரணமாகச் சற்று சோர்வு ஏற்படக்கூடும். சலுகைகள் கிடைக்கக்கூடும்.

கடக ராசி அன்பர்களே!

புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்கள் அனுகூலமாகும். தந்தை வழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். பிள்ளைகளுக்காக செலவு செய்யவேண்டி வரும். அரசாங்க அதிகாரிகளிடம் பேசும்போது பொறுமை அவசியம். தந்தையுடன் கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும். பொறுமை அவசியம். வேலைக்குச் செல்லும் அன்பர்களுக்கு பணிச்சுமை அதிகரிக்கும். சக ஊழியர்களிடம் இணக்கமாக நடந்துகொள்ளவும். அதிகாரிகள் அவ்வப்போது கண்டிப்பு காட்டுவார்கள். வியாபாரத்தில் இலாபம் எதிர்பார்த்த அளவுக்கு இருக்காது என்றாலும், ஓரளவு திருப்திகரமாக இருக்கும். கடையை விரிவுபடுத்த நினைப்பவர்கள் அதற்கான முயற்சிகளில் ஈடுபடலாம். பெண்கள் பொறுமையாக இருக்கவேண்டிய வாரம். புகுந்த வீட்டினர் கண்டிப்பும் கராறுமாக இருந்தாலும் அவர்களை அனுசரித்துச் செல்வது எதிர்காலத்துக்கு நல்லது.

சிம்ம ராசி அன்பர்களே!

பணவரவு தேவையான அளவுக்கு இருக்கும். வீண் செலவுகளும் இருக்காது. நண்பர்களின் சந்திப்பு ஆதாயம் தருவதாக இருக்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கணவன் - மனைவிக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும் விட்டுப்பிடித்துச் செல்வதும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். இருந்தாலும் அதற்கேற்ற சலுகைகள் கிடைப்பதால் உற்சாகமாகச் செயல்படுவீர்கள். அதிகாரிகள் அனுசரணையாக இருப்பார்கள். வியாபாரத்தை விரிவுபடுத்தவும், வாடகை இடத்தில் இருந்து சொந்த இடத்துக்குக் கடையை மாற்றவும் வாய்ப்பு உண்டாகும். பெண்களுக்கு வாரப் பிற்பகுதியில் மனதில் சிறு சுழப்பம் ஏற்படக்கூடும். வாரப் பிற்பகுதியில் புகுந்தவீட்டு உறவினர்கள் மூலம் ஆதாயம் உண்டாகும்.

கன்னி ராசி அன்பர்களே!

பணவரவு திருப்திகரமாக இருக்கும். சிலருக்கு திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். சகோதர வகையில் இருந்து வந்த கருத்துவேறுபாடுகளும் சுபப் உணர்வுகளும் மாறி, சுமுகமான உறவு ஏற்படும். விலகிச் சென்ற நண்பர்கள் மீண்டும் வந்து நட்பு பாராட்டுவார்கள். அலுவலகத்தில் சுமுகமான சூழ்நிலையே காணப்படும். புதிய வேலைக்கு விண்ணப்பித்து இருப்பவர்களுக்கு நல்ல நிறுவனத்தில் வேலை அமையும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும், வியாபாரத்தை விரிவுபடுத்த நினைப்பவர்கள் அதற்கான முயற்சிகளைத் தொடங்கலாம். அனுகூலமாக முடியும். சக வியாபாரிகளுடன் இணக்கமான உறவு ஏற்படும். பெண்களுக்கு பொறுப்புகள் அதிகரிப்பதால் சற்று சிரமமான வாரம் என்றே சொல்ல வேண்டும். ஆனால், பணவசதி திருப்தி தருவதாக இருக்கும்.

துலா ராசி அன்பர்களே!

புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். உறவினர்கள் வருகையால் சுபநிகழ்ச்சி ஒன்று நடைபெறுவதற்கான வாய்ப்பு ஏற்படும். தந்தையுடன் கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால் அவருடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகளால் திடீர் செலவுகள் ஏற்படும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். வேறு வேலைக்கு இப்போது முயற்சி செய்யவேண்டாம். அலுவலகத்தில் சக பணியாளர்களை அனுசரித்துச் செல்வதும். வியாபாரத்தில் புதிய முதலீடுகள் இப்போது வேண்டாம். சக வியாபாரிகளின் பேச்சைக் கேட்டு புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபடவேண்டாம். பங்குதாரர்களின் ஆதரவு மனதுக்கு ஆறுதலாக இருக்கும். பெண்களுக்கு நிம்மதியான வாரம். புகுந்த வீட்டு உறவினர்களுடன் ஏற்பட்ட மனக்கசப்புகள் நீங்கி சுமுகமான உறவு ஏற்படும்.

விருச்சிக ராசி அன்பர்களே!

பொருளாதார நிலை திருப்திகரமாக இருக்கும். ஆனாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். பிள்ளைகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் நீங்கி உற்சாகம் அடைவீர்கள். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் பேசும்போது பொறுமை அவசியம். புதிய வேலைக்கு முயற்சி செய்துகொண்டு இருப்பவர்களுக்கு நல்ல பதில் கிடைக்கும். வேலையில் இருப்பவர்களுக்கு அலுவலகச் சூழ்நிலை மகிழ்ச்சி தரும். சில சலுகைகளும் கிடைக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த அளவுக்கு இலாபம் கிடைக்காது. போட்டிகளைச் சமாளிக்க கடுமையாக உழைக்கவேண்டி வரும். புதிய முயற்சிகள் எதுவும் இப்போது வேண்டாம். பெண்களுக்கு குடும்பத்தில் செலவுகள் அதிகரிக்கும் என்பதால் கடன் வாங்க நேரிடும். கணவரிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

தனுசு ராசி அன்பர்களே!

குடும்பத்தில் மகிழ்ச்சியும் உற்சாகமும் ஏற்படும். செலவுகளைச் சமாளிப்பதற்குத் தேவையான பணம் கிடைத்துவிடும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சியுடன் ஆதாயமும் தருவதாக இருக்கும். திருமணத்துக்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம். சிலருக்கு தெய்வப் பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. அலுவலகத்தில் சக பணியாளர்களை அனுசரித்து நடந்துகொள்ளவும். உங்கள் வேலைகளில் மட்டுமே கவனம் செலுத்தவேண்டியது முக்கியம். பதவி உயர்வையோ ஊதிய உயர்வையோ தற்போது எதிர்பார்க்கமுடியாது. வியாபாரத்தில் சற்று கூடுதலாக உழைக்கவேண்டி வரும். பற்று வரவு சுமுகமாக நடக்கும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். பங்குதாரர்களும் அனுசரணையாக நடந்துகொள்வார்கள்.

மகர ராசி அன்பர்களே!

வருமானத்துக்குக் குறைவிருக்காது. உறவினர்கள் வருகையால் வீட்டில் சுபநிகழ்ச்சிகள் ஏற்படாமல் கணவன் - மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்துவேறுபாடு மறைந்து, அந்நியோன்யம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளை மேற்கொள்ளும்போது வாழ்க்கைத் துணையின் ஆலோசனை கேட்டுச் செய்வது நல்லது. அலுவலகத்தில் உற்சாகமாக உங்கள் பணிகளைச் செய்வீர்கள். ஒரு சிலருக்கு இருக்கும் இடத்தில் இருந்து வேறு ஊருக்கு மாறுதல் கிடைக்கும். அதனால் நன்மையே உண்டாகும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட இலாபம் அதிகமாக வரும் என்றாலும் அதற்காக மிகவும் உழைக்கவேண்டி இருக்கும். வங்கிக் கடனுதவி கிடைக்கும்.

கும்ப ராசி அன்பர்களே!

உடல் ஆரோக்கியம் மேம்படும். தேவையான பணவரவு உண்டு. சிலருக்கு வீண்செலவுகள் ஏற்படவும் அதன் காரணமாக கடன் வாங்கவும் நேரிடும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிகளுக்குத் தேவையான ஒத்துழைப்புத் தருவார். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். அலுவலகத்தில் உங்கள் பணிகளில் கூடுதல் கவனம் தேவை. சக பணியாளர்களிடம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். அதிகாரிகளிடம் பேசும்போது பதற்றம் வேண்டாம். வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். சக வியாபாரிகளுடன் சுமுகமான போக்கு ஏற்படும். பங்குதாரர்கள் அனுசரணையாக இருப்பார்கள். ஆனால், கடன் வாங்கி முதலீடு செய்வதைத் தவிர்க்கவும். பெண்கள் மிகவும் பொறுமையாக இருக்க வேண்டியது அவசியம்.

மீன ராசி அன்பர்களே!

பொருளாதார வசதி நல்லபடியே காணப்படுகிறது. கூடுதல் செலவுகள் ஏற்பட்டாலும் அதைச் சமாளித்து விடுவீர்கள். குடும்பத்தில் முக்கிய முடிவுகளை எடுக்கும்போது பொறுமை அவசியம். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தையால் உதவி உண்டு. அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும். முக்கியமான ஒரு பிரச்சினையை சமயோசிதமாகத் தீர்த்து நிர்வாகத்தினரின் பாராட்டுகளைப் பெறுவீர்கள். எதிர்பாராத சலுகைகள் கிடைப்பதற்கும் வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் எதிர்பார்த்ததைவிட இலாபம் கூடுதலாகக் கிடைக்கும். பணியாளர்கள் நல்ல முறையில் பணி செய்வார்கள். சக வியாபாரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். பெண்களுக்கு மகிழ்ச்சியும் நிம்மதியும் தரும் வாரம்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7